அணிந்து, வெண்சந்தனம் பூசி, வெளுப்பு மாலையணிந்து, பஞ்சாங்க பூஷணங்கள் பூண்டு, கோடரி முதலியவைகளுடன், சிலை இருக்குமிடம் சென்று, மன அமைதியுடன் அந்தச் சிலையைப் பிரதக்ஷிணம் செய்து, தோஷமில்லாத சிலையைப் பார்த்து, விசேஷித்து அச்சிலையின் ஆகாரத்தை நிச்சயித்துக்கொள்ளவேண்டும். (44)

எப்பொழுதும் மழையில் நனைந்துகொண்டிருப்பது, வெய்யிலில் காய்ந்துகொண்டிருப்பது, தீயின் நாற்ற முள்ளது, (அல்லது தீயால் பொசுங்கியது) உப்பு ஜலம் படிந்தது, கெட்ட இடத்திலிருப்பது, தடத்தில் (ஜலக் கரையில்) இருப்பது, வேறு காரியத்திற்கு உபயோகிக்கப் பட்டது, மணல் கலந்திருப்பது, சேறு படிந்திருப்பது, சிதைவுற்றது (அழுத்தம் விசிறிப்போனது), பார்க்க பயங்கரமானது, கோடுகள் புள்ளிகள் களங்கங்கள் இவை களுடன் கூடியது, இத்தகைய சிலைகளை நீக்கிவிட வேண்டும். (46)

वर्षवातवशाकारा रेखा चैव त्रिधा स्मृता || ४७ ||

जम्बूफलसमाकारा द्राक्षायास्सदृशापि वा |
अन्यथा वृत्तसंकाशा त्रिधा बिन्दुसंज्ञिता ||

कृष्णलोहनिभाकारा कृष्णभ्रमरसन्निभा |
बर्हिबर्हसमाकारा सकलङ्का अथ वर्ज्या
(त्रिधा स्मृता) || ४९ ||

खर्जूरीपत्रसंकाशा दूर्वाकाष्ठनिभा तथा |
वेणवाङ्कुरसंकाशा लूतापादवशायता || ५० ||

अन्यासुभासिता रेखा सर्वसम्पत्प्रदायिका |

கயிறு விழுந்தது (கல்லின் நடுவில் கயிறு போன்ற ரேகை யுள்ளது) அல்லது கயிறு போன்ற தோற்ற முடையது, ஸூரிய கிரணம் பாய்ந்தது, மழைக்கால் போன்ற உருவமுடையது என ரேகை மூன்று விதமாகும்.

நாவப்பழம் போன்ற உருவமுடையது, திராக்ஷைப் பழம் (அல்லது காய்) போன்ற உருவமுடையது, வேறு எந்த விதத்திலாவது வட்டவடிவமாக இருப்பது, என பிந்துவானது மூன்றுவிதமாகும்.

இரும்புபோன்ற நிறமுடையது, கருங்குளவிபோன்ற நிறமுடையது, மயில் தோகை போன்ற நிறமுடையது, என களங்கம் மூன்றுவிதமாகும். (இத்தகைய தோஷ முள்ள கற்கள் கூடாதவைகளாம்) (49)

பேரீச்சையிலைபோன்ற கோடுடையது, அருகங்கட்டை போன்ற கோடுடையது, மூங்கில் முளைபோன்ற கோடுடை யது, எட்டுக்கால் பூச்சியின் கால்களைப்போல நீண்ட கோடுகளுடையது, இவைகளும், வெள்ளை நிறமல்லாத மற்ற நிறமுள்ள கல்லில் வெள்ளை ரேகையும், ஸகலவித ஸம்பத்துக்களின் நிறைவைக் கொடுக்கும். [எனவே

𑌕𑍃𑌷𑍍𑌣𑌕𑍃𑌷𑍍𑌣𑌾 𑌵𑌿𑌨𑌾𑌶𑌾𑌯 𑌶𑍍𑌵𑍇𑌤𑌕𑍃𑌷𑍍𑌣𑌾 𑌤𑌥𑍈𑌵 𑌹𑌿 || ௫௧ ||

𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑍇𑌨 𑌵𑌰𑍍𑌜𑍍𑌯𑌾 𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍁 𑌦𑍋𑌷𑌤𑌃 |
𑌕𑍃𑌷𑍍𑌣𑌾 𑌚 𑌹𑌰𑌿𑌤𑌾 𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌾 𑌸𑌿𑌤𑌵𑌰𑍍𑌣𑌾 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃 ||

𑌖𑌰𑍍𑌜𑍂𑌰𑌪𑌤𑍍𑌰𑌸𑌦𑍃𑌶𑌾 𑌦𑍂𑌰𑍍𑌵𑌾𑌕𑌾𑌣𑍍𑌡𑌨𑌿𑌭𑌾 𑌶𑍁𑌭𑌾 |
𑌅𑌤𑌿𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌽𑌶𑍁𑌭𑌾 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾 𑌪𑌶𑍁𑌧𑌾𑌨𑍍𑌯𑌧𑌨𑌾𑌪𑌹𑌾 ||

𑌸𑌕𑌲𑌂𑌕𑌾 𑌰𑍋𑌗𑌦𑌾 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌰𑌾𑌜𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌵𑌿𑌨𑌾𑌶𑌨𑌂 (𑌨𑍀) |
𑌸𑌬𑌿𑌨𑍍𑌦𑍁𑌕𑌾 𑌪𑍁𑌤𑍍𑌰𑌨𑌾𑌶𑌾𑌯 𑌦𑌾𑌰𑌿𑌦𑍍𑌰𑍍𑌯𑌶𑍍𑌰𑍀𑌵𑌿𑌨𑌾𑌶𑌨𑌾 || ௫௪ ||

முதலில் கூறப்பட்ட 4 வித கோடுகளும் வெள்ளைக் கல்லுக்குக் கூறப்பட்டவைகளாம்.]

கருப்புக் கல்லில் கருப்புக்கோடும், வெள்ளைக் கல்லில் கருப்புக்கோடும் அழிவை யுண்டுபண்ணும். ஆகையால், முழுமுயற்சியுடன் கீழே கூறப்பட்ட குற்றங்களில்லாத கற்களையே கிரகிக்கவேண்டும்.

கருப்பு நிறமான கல்லும், பச்சை நிறமான கல்லும், (அல்லது கருப்பும் பச்சையும் கலந்த நிறமான கல்) கிர ஹிக்கத் தக்கதாகும். வெள்ளை நிறமான கல், விசேஷித்து கிரஹிக்கத் தக்கதாகும். பேரீச்சையிலையின் நிறமுடைய கல்லும், அருகங்கட்டையின் நிறமுடைய கல்லும் சுப பலனைக் கொடுக்கும்.

மிகவும் கருப்பான நிறமுடைய கல்லானது, அசுப பலனைக் கொடுக்குமென்று கூறப்பட்டிருக்கிறது. பசுக்கள், தான்யம், தநம் இவைகளையும் அழித்துவிடும். (53)

களங்கதோஷமுள்ள கல்லானது, ரோகத்தை யுண்டு பண்ணும்; அரசன், ராஜ்யம் இவைகளையும் அழித்துவிடும்.

பிந்து (புள்ளி) தோஷமுள்ள கல்லானது, புத்திர நாசத்தையும் தாரித்திரியத்தையும் கொடுக்கும்; இருக்கும் செல்வத்தையும் அழித்துவிடும்.

𑌏𑌵𑌂 𑌪𑌰𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌯𑌤𑍍𑌨𑍇𑌨 𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌾𑌃 𑌸𑍁𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌾𑌃 ।
𑌬𑌾𑌲𑌾 𑌚 𑌯𑍁𑌵𑌤𑌿𑌰𑍍𑌵𑍃𑌦𑍍𑌧𑌾 𑌪𑍁𑌂 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌨𑌪𑍁𑌂𑌸𑌕𑌂 𑌤𑌥𑌾 ॥

𑌶𑌬𑍍𑌦𑌰𑍂𑌪(𑌪𑌾)𑌕𑍃𑌤𑌿𑌭𑍇𑌦𑍇𑌨 𑌶𑌿𑌲𑌾𑌭𑍇𑌦𑌂 𑌶𑍃𑌣𑍁 ।
𑌸𑌨𑌾𑌦𑍇 𑌸𑍍𑌵𑌲𑍍𑌪𑌨𑌿𑌹𑍍𑌰𑌸𑍍𑌵𑌾 𑌶𑌿𑌲𑌾 𑌬𑌾𑌲𑌾 𑌇𑌤𑌿 𑌸𑍍𑌮𑍃𑌤𑌾 ॥

𑌘𑌣𑍍𑌟𑌾𑌨𑌿𑌨𑌾𑌦𑍇 𑌦𑍀𑌰𑍍𑌘𑌾 𑌯𑌾 𑌯𑍁𑌵𑌤𑌿𑌃 𑌸𑌾 𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌾 ।
𑌵𑌿𑌵𑍃𑌤𑌸𑍍𑌵𑌨𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌾 𑌯𑌾 𑌸𑌾 𑌵𑍃𑌦𑍍𑌧𑌾 𑌚 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌾 ॥ ௫௭ ॥

𑌘𑌣𑍍𑌟𑌾𑌨𑌿𑌨𑌾𑌦𑌾𑌢𑍍𑌯𑌾 𑌦𑍀𑌰𑍍𑌘𑌾 𑌸𑌾 𑌪𑍁𑌂𑌶𑌿𑌲𑍇𑌰𑌿𑌤𑌾 ।
𑌤𑌾𑌲𑌪𑌲𑍍𑌲𑌵𑌸𑌾𑌕𑌾𑌰𑌾 𑌦𑍀𑌰𑍍𑌘𑌾 𑌯𑌾 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌶𑌿𑌲𑌾 𑌤𑍁 𑌸𑌾 ॥

இவ்விதமாகக் கற்களின் குணதோஷங்களை நன்கு ஆராய்ந்து பார்த்து, தோஷமுள்ள சிலைகளை நீக்கி, குணமும் லக்ஷணமுமுடைய சிலையையே கிரஹித்துக்கொள்ள வேண்டும்.

சிலையானது, ஒலி, உருவம் இவைகளின் பேதங்களால் பாலை, யுவதி, விருத்தை என்றும், புருஷ சிலை, ஸ்திரீ சிலை, நபும்ஸக சிலை என்றும், பாகுபாடு செய்யப்பட்டிருக்கும் முறையைக் கூறுகிறேன். கேட்பாயாக!

கெல்லும்பொழுது, சத்தமும் குட்டையான உருவமும் உடைய சிலையானது, பால சிலையாகும் என்று கூறப்பட்டிருக்கிறது.

மணியின் ஓசையைப்போன்ற ஓசையும் நீண்ட வடிவமுமுடையது ஸ்திரீ சிலை என்று கூறப்பட்டிருக்கிறது.

எரசலான சத்தமுடையது விருத்தசிலை என்று கூறப்பட்டிருக்கிறது. (57)

மணியோசையைப்போல் அதிக சத்தமும், நீண்ட வடிவமுமுடையது, புருஷ சிலையாகும் என்று கூறப்பட்டுள்ளது.

பனையைப்போன்ற ஓசையும் நீண்ட வடிவமுமுடையது, ஸ்திரீ சிலையாகும் என்று கூறப்பட்டுள்ளது.

𑌅𑌸𑍍𑌨𑌿𑌗𑍍𑌧𑌾 𑌶𑌿𑌥𑌿𑌲𑌾 𑌰𑍂𑌕𑍍𑌷𑌾 𑌸𑍍𑌵𑌰𑌹𑍀𑌨𑌾 𑌨𑌪𑍁𑌂𑌸𑌕𑌾 |
𑌶𑌿𑌲𑍈𑌰𑍇𑌵𑌂 𑌸𑌮𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌾 𑌸𑍁𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌹𑍍𑌯𑍇𑌷 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ||
𑌚𑌤𑍁𑌰𑌶𑍍𑌰𑌾 𑌚 𑌵𑌸𑍍𑌵𑌶𑍍𑌰𑌾 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌶𑌿𑌲𑍇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌾 |
𑌆𑌯𑌤𑌾𑌶𑍍𑌰𑌾 𑌚 𑌵𑍃𑌤𑍍𑌤𑌾 𑌚 𑌦𑌶𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌕𑍋𑌣𑌕𑌾 || ௬௦ ||
𑌪𑍁𑌂𑌶𑌿𑌲𑌾 𑌸𑌾 𑌸𑌮𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌾 𑌸𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑌾 𑌸𑌾 𑌨𑌪𑍁𑌂𑌸𑌕𑌾 |
𑌦𑌶𑌾𑌶𑍍𑌰𑌂 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌾𑌶𑍍𑌰𑌂 𑌚 𑌬𑌾𑌲𑌾𑌂 𑌵𑍃𑌦𑍍𑌧𑌾𑌂 𑌚 𑌵𑌰𑍍𑌜𑌯𑍇𑌤𑍍 ||
𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 𑌪𑍁𑌂𑌶𑌿𑌲𑌾𑌭𑌿𑌃 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌶𑌿𑌲𑌾𑌭𑌿𑌶𑍍𑌚 𑌪𑌿𑌣𑍍𑌡𑌿𑌕𑌾𑌮𑍍 |
𑌨𑌪𑍁𑌂𑌸𑌕𑌶𑌿𑌲𑌾𑌭𑌿𑌸𑍍𑌤𑍁 𑌪𑌾𑌦𑌾𑌧𑌾𑌰𑌂 𑌸𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍 || ௬௨ ||

பளபளப்பில்லாமல் உறுதியில்லாமல் கரடுமுரடாய் ஒலியில்லாமலிருக்கும் சிலையானது நபும்ஸக சிலை என்று கூறப்பட்டுள்ளது.

இவ்விதம் ஒலியினால் பேதம் கூறப்பட்டுள்ளது. இனி உருவத்தினால் பேதத்தைக் கூறுகிறேன். (59)

சச்சதுரமாகவும் எட்டுக் கோணமாகவும் இருக்கும் சிலையானது ஸ்திரீ சிலையாகும் என்று கூறப்பட்டிருக்கிறது.

நீண்டசதுரமாகவும், வட்டவடிவமாகவும், பத்துக் கோணமாகவும், பன்னிரண்டு கோணமாகவும் இருப்பது, புருஷசிலை என்று கூறப்பட்டிருக்கிறது.

நன்கு வட்டவடிவமாக இருப்பது, நபும்ஸக சிலையாகும்.

10 கோணமாக இருக்கும் சிலை, 12 கோணமாக இருக்கும் சிலை, பாலசிலை, விருத்தசிலை, இவைகளை விலக்கிவிட வேண்டும். (61)

புருஷ சிலையினால் லிங்கத்தைச் செய்யவேண்டும். ஸ்திரீ சிலையினாலே பிண்டிகையைச் செய்யவேண்டும்.

𑌕𑍃𑌤𑌂 𑌚 𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌂 𑌯𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌦𑌾 𑌕𑌰𑍍𑌤𑍃𑌨𑌾𑌶𑌨𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌾𑌗𑌗𑍍𑌰𑌂 𑌚𑍋𑌦𑌗𑌗𑍍𑌰𑌂 𑌵𑌾 𑌶𑌿𑌲𑌾𑌂 𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑍇𑌤𑍍
𑌦𑍇𑌶𑌿𑌕𑌃 ॥ ௬௩ ॥

𑌪𑍍𑌰𑌾𑌗𑌗𑍍𑌰𑍇 𑌪𑌶𑍍𑌚𑌿𑌮𑌂 𑌮𑍂𑌲𑌮𑍁𑌦𑌗𑌗𑍍𑌰𑍇 𑌤𑍁 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇(𑌣𑌂) ।
𑌪𑍍𑌰𑌾𑌗𑍁𑌦𑌕𑍍𑌸𑌮𑌾𑌗𑍍𑌰𑌤𑌂 𑌯𑌤𑍍𑌤𑌤𑍍 𑌶𑌿𑌰𑍋𑌮𑌾𑌗𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌮𑍍 ॥

𑌮𑍂𑌲𑌭𑌾𑌗𑌂 𑌮𑍁𑌖𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌪𑍃𑌷𑍍𑌠𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌗𑌤𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌏𑌵𑌂 𑌪𑌰𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌸𑌂𑌗𑍃𑌹𑍍𑌯 𑌗𑌵𑍍𑌯𑍈𑌃 𑌕𑍍𑌷𑌾𑌲𑌯𑍇𑌦𑍍𑌧𑍃𑌦𑌾
𑌪𑌯𑌃 ॥ ௬௪ ॥

𑌸𑌤𑍍𑌯(𑌤𑍍𑌯𑍇) 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍇𑌣 𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌪𑍍𑌯 𑌗𑌨𑍍𑌧𑌪𑍁𑌷𑍍𑌪𑌾𑌦𑌿𑌭𑌿𑌰𑍍𑌯𑌜𑍇𑌤𑍍 ।

(பிண்டிகை – பீடம்.) நபும்ஸக சிலையினாலே பாதாதாரத்தைச் செய்யவேண்டும். (பாதாதாரம் – லிங்கத்தின் அடித்தலத்தின் ஆதாரம்.) இப்படிக்குச் செய்யாமல் இதற்கு விபரீதமாகச் செய்தால், அது எப்பொழுதும் கர்த்தாவுக்கு (செய்தவனுக்கு) அழிவையுண்டுபண்ணும்.

தேசிகனானவன், கிழக்கு நுனியாகவோ வடக்கு நுனியாகவோ இருக்கும் சிலையை கிரஹிக்கவேண்டும். (63)

கிழக்கு நுனியான சிலையில், மேற்குப்பக்கம் அடிப்பக்கமாகும். வடக்கு நுனியான சிலையில் தென்பக்கம் அடிப்பக்கமாகும். கிழக்குப்பக்கமும் வடக்குப்பக்கமும் லிங்கத்தின் நுனிப்பக்க (தலைப்பக்க) மாகும் என்று கூறப்பட்டிருக்கிறது. சிலையின் அடிப்பக்கம் முகமாகும் (முன்பக்கமாகும்). மேல்ப்பக்கம் பின்பக்கமாகும்.

இவ்விதமாக, சிலையை நன்கு பரீக்ஷித்துப்பார்த்து, அதை எடுத்து, அந்தச் சிலையை, ஹிருதய மந்திரத்தினாலே பசும்பாலினால் நன்கு அலம்பி சுத்தம் செய்யவேண்டும். பிறகு, அந்தச் சிலையைத் தூக்கி நிறுத்திவைத்து, ஸத்திய மந்திரத்தினாலே சந்தனம் புஷ்பம் முதலியவைகளால்

தஸ்யைஶான்யே ஶங்கரே ச ஶாந்திஹோமம் து
காரயேத் || ௬௬ ||

அக்ந்யாதானாதிகம் ஸர்வம் ஸ்வோக்தமார்கேணாசரேத் |
ஸமிதோ ஹ்ருதயேனைவ மூலேனாஜ்யம் து ஹோமயேத் ||

சரும் ஹோமயேதகோரேண புருஷேணைவ தண்டுலம் |
திலானீஶானமந்த்ரேண ஸர்ஷபம் கவசேன து || ௬௮ ||

ஶதம் ததர்த்தம் பாதம் வா ப்ரத்யேகம் ஜுஹுயாத் க்ரமாத் |
ஸ்விஷ்டக்ருதம் ஆவர்த்யேதி பூர்ணாஹுதிமதாசரேத் ||

ததோ வஹ்நிம் ஸமுத்வாஸ்ய பூஜாவஶேஷிதம் த்யஜேத் |
ஶிலாச்சேதகரம் ஶஸ்த்ரமஸ்த்ரமந்த்ரேண பூஜயேத் || ௭௦ ||

பூஜிக்கவேண்டும். அதன் பிறகு, அதன் ஈசாந்ய திக்கில் சாந்தி ஹோமத்தைச் செய்யவேண்டும். (66)

அக்னி ஆதானம் முதலிய எல்லாவற்றையும், அதற்குக் கூறியுள்ள முறைப்படி செய்யவேண்டும். ஹிருதய மந்திரத்தினால் ஸமித்துக்களையும், மூலமந்திரத்தினால் நெய்யையும், அகோர மந்திரத்தினால் சரு (அன்னம்) வையும், புருஷ மந்திரத்தினால் தண்டுலத்தையும், (தண்டுலம் – அரிசி) ஈசான மந்திரத்தினால் எள்ளையும், கவச மந்திரத்தினால் கடுகையும் ஹோமம் செய்யவேண்டும். மேலே கூறியுள்ள ஸமித்து, நெய், அன்னம், அரிசி, எள்ளு, கடுகு, இவைகள் ஒவ்வொன்றையும் முறையே 100, 50 அல்லது 25 தடவை ஹோமம் செய்யவேண்டும். அக்னே என்ற மந்திரத்தினால் ஸ்விஷ்டகிருத் ஹோமத்தைச் செய்து, அதன் பிறகு, பூர்ணாஹுதி ஹோமத்தைச் செய்யவேண்டும். (69)

அதன் பிறகு, அக்னியை உத்வாஸனம் செய்துவிட்டு, பூஜைசெய்த நிர்மாலிய புஷ்பம் முதலியவைகளை எடுத்துக் களையவேண்டும்.

சிலையைத் துண்டாடவேண்டிய ஆயுதத்தை, அஸ்த்ர

* அபஸர்பணமந்த்ரேண ஶிலாச்சேதநமாசரேத் |
ததூர்த்வம் ஶில்பிகார்யம் து ஸ்தபத்யாதி: ஸமாசரேத் ||

கர்பகேஹப்ரமாணம் ச த்வாரமாநம் ததைவ ச |
ஸ்தம்பமாநம் தலமாநம் ஹஸ்தம் தாலாங்குலம் ததா || ௭௨ ||

லிங்கமாநம் பூர்வம் ஸப்தபேதாஸ்து ப்ருதக்த்வேநைகயா |
கர்பகேஹே து பஞ்சாம்ஶே பாணாம்ஶம் ஶ்ரேஷ்ட
உச்யதே || ௭௩ ||

கர்பாயாமம் ஸமுச்சம் வ்யாஸம் தயோர்மத்யே ஷு ஸாதிதே |

மந்திரத்தினாலே பூஜை செய்யவேண்டும். அபஸர்பண மந்திரத்தை ஜபித்து, சிலையைத் துண்டாடவேண்டும். அதற்குப் பிறகு சிற்பி செய்யவேண்டிய காரியத்தை ஸ்தபதி முதலியவர்கள் செய்யவேண்டும். *(71)*

கர்ப கிருஹத்தின் அளவு, துவாரத்தின் அளவு (துவாரம் – கர்பகிருஹத்தின் வாயிற்படி) ஸ்தம்பத்தின் அளவு (ஸ்தம்பம் – கர்பகிரஹத்தின் தூண் மட்டம்) தலமாநம் (கர்பகிருஹத்தின் பூமட்டத்தின் வெளிப்பக்கத்தின் அளவாகும். வெளிப்பிராகாரத்தின் வெளிப்பக்கத்தின் நீளமும் தலமாநமாகக் கூறப்பட்டிருக்கிறது. இதுவே பாதமாநமென்றும் கூறப்பட்டிருக்கிறது) ஹஸ்தமாநம், தாலமாநம், அங்குலமாநம் என்று லிங்கமாநமானது 7-வித மாநங்களால் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. இந்த 7-வித மாநங்களிலும் பலவித அளவுகள் கூறப்பட்டிருக்கின்றன.

கர்பகிருஹத்தின் அளவில் 5-ல் 3 பங்கு (உயரம்) இருக்கும் லிங்கமானது உத்தமலிங்கமாகும். அதில் ஸரி

---

* கவசம் ச ஸமுச்சாயம் – இதி பாடாந்தரம் |

கவசமந்திரத்தால் சிலாச்சேதநம் செய்யவேண்டும் என்று மற்றொரு பிரதியிலுள்ள பாடம்.

ஜ்யேஷ்டமத்யமகம் லிங்கம் ப்ரத்யேகம் த்ரிவிதம் பவேத் ।। 74 ।।

அதவா கர்பகேஹம்(ஹே) து நவதா விபாஜிதே ।
கர்பகேஹவசால்லப்தம் லிங்கோச்ச்ராயம் ததா ।। 75 ।।

ஸாக்ஷாத்த்வாரஸமம் ஜ்யேஷ்டம் த்ர்யம்ஶோனம் து கநீயஸம் ।
தயோர்மத்யேஷ்டதா பக்தே த்வாரமானம் நவோதிதம் ।। 76 ।।

ஸ்தம்பாயாமவசாத் து நவதா விபாஜிதே ।
ஜ்யேஷ்டயாமாந்தகம் நவதா ப்ரோக்தம் த்விஜ ।। 77 ।।

பாதியளவு இருப்பது, மத்தியமலிங்கமாகும். இந்த இரண்டு அளவுகளின் மத்தியிலுள்ள அளவை, அதாவது, ஸரிபாதியிலிருந்து முழு அளவுவரையிலுள்ள (½-க்குமேல் 1 வரையில் உள்ள) மத்திய அளவை 9 பாகங்களாகச் செய்யவேண்டும். அவைகளில் ஒவ்வொரு அளவும் தனித்தனியே 9-வித லிங்கமானமாகும். இந்த 9-வித லிங்கமானங்களில் அதிக அளவுள்ள 3-ம் உத்தமமாகும். மத்தியிலுள்ள 3-ம் மத்தியமமாகும். குறைந்த அளவுள்ள 3-ம் அதமமாகும். இவ்விதமாக கர்பகிருஹத்தின் அளவினால் கிடைக்கும் லிங்கத்தின் உயரமானது 9-விதமாகும். (75)

லிங்கமானது (லிங்கத்தின் உயரமானது) கர்பகிருஹ துவாரத்திற்கு (உயரத்திற்கு) ஸமமாக இருப்பது உத்தம லிங்கமாகும். அதில் 3-ல் 2 பங்கு உயரமுள்ளது கநிஷ்டமாகும் (அதமமாகும்.) இவ்விரண்டு அளவுகளின் மத்தியிலுள்ள அளவை 8 பாகங்களாகச்செய்ய, துவாரமானத்தால் கிடைக்கும் லிங்கமானமானது 9 விதமாகும். (76)

ஸ்தம்பத்தின் முழு அளவை 9 பாகங்களாகச் செய்ய, அதன் ஒவ்வொரு பாகமும் தனித்தனியே, லிங்கத்தின் மானமாகும். எனவே ஸ்தம்பமானத்தால் கிடைக்கும் லிங்கமானமானது 9 விதமாகும். இவைகளில் மூன்று மூன்று

ப்ராஸாதே ஸ்வாதிஷ்டாநே து ஸ்தம்பமாநஸமோச்ச்ரிதம் ।
த்ரிஷஷ்டாம்ஶாதிவ்ருத்த்யா ஸ்தம்பமாநம் நவாம்ஶகம் ॥ ௭௮ ॥

ஏகஹஸ்தம் ஸமாரப்ய ஹஸ்தாஷ்டாம்ஶாம்ஶ விவர்த்தநாத் ।
நவஹஸ்தாவஸாநாந்தம் லிங்கம் பஞ்சஷஷ்டி: ஸமந்விதா ॥ ௭௯ ॥

பஞ்சஹஸ்தாதி(ஸ்தாதி)காதாரே(ரி) கர்ப்பகேஹே ஹஸ்தமாநம்(மாநம்) நயேத் ।
பஞ்சஹஸ்தாத்யதோ கர்ப்பகேஹே லிங்கம் ஹஸ்தமாநம் விநா ॥ ௮௰ ॥

ஹஸ்தாதி த்ரிஹஸ்தாந்தம் * விகல்பாபாஸகேஹயோ: ।

கூறுகள், முறையே உத்தம — மத்தியம — அதமங்களாகும். கர்பகிருஹத்தின் ஆதிபூமியான உள்பக்கத்தில் தூண் மட்டத்திற்கு ஸமமான பகுதிக்கே ஸ்தம்பம் என்று பெயர்.

அதிஷ்டானத்தின் உயரத்தில் ஸ்தம்பமானத்தைப் போல கணக்கிட்டுக்கொள்ள வேண்டும். (78)

ஒரு ஹஸ்தம் முதல் 9 ஹஸ்தம் வரையில் ஹஸ்தத்தில் 8ல் ஒரு பங்கு வீதம் கூட்டிவர, ஹஸ்தமானத்திஞல் கிடைக்கும் லிங்கமானமானது 65 விதமாகும். (79)

5 ஹஸ்தத்திற்கு அதிகமாகயிருக்கும் கர்பகிருஹத்தில், லிங்கமானத்தை, ஹஸ்தமானத்தால் கணக்கிட வேண்டும். கர்பகிருஹமானது, 5 ஹஸ்தத்திற்கு உள்பட்டதாக இருந்தால், ஹஸ்தமானத்திஞல் லிங்கமானத்தைக் கணக்கிடக் கூடாது. (80)

*ஆலயமானது, விகல்பஹர்மியமாகவோ, ஆபாஸஹர்மியமாகவோ இருந்தால், அப்பொழுது 1 முதல் 3 ஹஸ்தம் வரையில் லிங்கமானத்தைக் கொள்ளவேண்டும்.

---

* விகல்பாபாஸஸந்தஜாதிவிமாநலக்ஷணாநி ௨௪ படலே மாநஸூத்ரலக்ஷணே த்ரஷ்டவ்யாநி ।

* விகல்பம்—ஆபாஸம்—சந்தம்—ஜாதி—எனப்படும் விமான லக்ஷணங்களை 24-வது படலத்தில் மானஸூத்ரலக்ஷணத்தில் பார்த்துக்கொள்ளவேண்டும்.

𑌤𑍍𑌰𑌿𑌹𑌸𑍍𑌤𑌾𑌤𑍍 𑌷𑌟𑍍𑌕𑌰𑌾𑌨𑍍𑌤𑌂 𑌤𑍁 𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌸𑌞𑍍𑌚𑌿𑌤𑌵𑌿𑌮𑌾𑌨𑌕𑍇 ॥

𑌷𑌟𑍍𑌕𑌰𑌾𑌦𑌿 𑌨𑌵𑌾𑌨𑍍𑌤𑌂 𑌤𑍁 𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌸𑍍𑌵(𑌜𑌾)𑌤𑌿𑌮𑌯𑌹𑌰𑍍𑌮𑍍𑌯𑌕𑍇 ।
𑌏𑌵𑌂 𑌹𑌸𑍍𑌤𑌵𑌶𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌤𑌾𑌲𑌮𑌾𑌨𑌮𑌥𑍋𑌚𑍍𑌯𑌤𑍇 ॥ ௮௨ ॥

𑌏𑌕𑌾𑌦𑌿 𑌨𑌵𑌤𑌾𑌲𑌾𑌨𑍍𑌤𑌮𑍇𑌕𑍈𑌕𑌤𑌾𑌲𑌵𑌰𑍍𑌧𑌨𑌾𑌤𑍍 ।
𑌲𑌿𑌙𑍍𑌗𑍇 𑌹𑌿 𑌨𑌵𑌸𑌂𑌖𑍍𑌯𑌾𑌃(𑌭𑍇𑌦𑌾𑌃) 𑌸𑍍𑌯𑍁𑌃 𑌕𑌥𑌿𑌤𑌂
𑌜𑌾𑌤𑍀𑌤𑌰𑌾𑌲𑌯𑍇 ॥ ௮௩ ॥

* 𑌤𑍍𑌰𑌯𑍋𑌦𑌶𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌾𑌦𑍍𑌯𑌂 𑌦𑍍𑌵𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌯𑌾𑌵𑌨𑍍𑌨𑌵𑌶𑌤𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍍 ।
𑌤𑌾𑌵𑌦𑍍𑌵𑍈𑌕𑍋𑌨𑌪𑌞𑍍𑌚𑌾𑌶𑌲𑍍𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌮𑌾𑌨𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑍇𑌨 𑌤𑍁 ॥ ௮௪ ॥

𑌤𑍍𑌰𑌿𑌭𑌾𑌗𑌸𑌹𑌿𑌤𑌂 𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌹𑌸𑍍𑌤𑌕𑍍𑌷𑍀𑌣𑌂 𑌨 𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍 ।

ஆலயமானது, சந்தவிமானமாக இருந்தால் 3 முதல் 6 ஹஸ்தம் வரையில் லிங்கமானத்தைக் கொள்ளவேண்டும். அதுவே, ஜாதிவிமானமாக இருந்தால் 6 முதல் 9 ஹஸ்தம் வரையில் லிங்கமானத்தைக் கொள்ளவேண்டும். இவ்விதமாக ஹஸ்தவசத்தாலே லிங்கமானம் கூறப்பட்டிருக்கின்றது. இனி தாலமானத்தைக் கூறுகிறேன். (82)

ஏகதாலம் முதல் ஒவ்வொரு தாலமாகக் கூட்டிவர, தாலபேதத்தினாலே லிங்கமானம் 9 விதமாகும். இது ஜாதிஹர்மியமல்லாதவிடத்திற்குக் கூறப்பட்டதாகும். (83)

13 அங்குலம் முதல் 109 அங்குலம் வரையில் 2, 2, அங்குலமாகக் கூட்டிவர லிங்கமானம் 49 விதமாகும். இது மானாங்குலத்தால் கூறப்பட்டதாகும். (84)

சிவாம்சம், விஷ்ணுவம்சம், பிரஹ்மாம்சம், என்ற 3 பிரிவுகளுடன் கூடிய லிங்கத்தை, ஒரு முழ(உயர)த்திற்குக்

---

* 𑌤𑍍𑌰𑌯𑍋𑌦𑌶𑌾𑌤𑍍 𑌅𑌷𑍍𑌟𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌤𑍁 𑌯𑌾𑌵𑌨𑍍𑌨𑌵𑌶𑌤𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍍 ।
𑌇𑌤𑌿 𑌵𑌾 𑌪𑌾𑌠𑌃 ।

ஹஸ்தோநாக்ஷயம் லிம்கம் வ்ருத்தாகாரமஶேஷகம் ॥ ௮௫ ॥

வேதம் நவாம்ஶேக்வாதயே விஷ்டரே யோஜயேத் புத: ।
ஶேஷம் து தர்ஶ்யாநம் ஸ்யாத் விகல்பாபாஸக்ருஹயோ: ॥

விஷ்டரே வேஶயேல்லிம்கம் விகல்பாபாஸகம் விநா ।
த்ரயோதஶாம்குலம் லிம்கம் ஶைலஜம் து ந காரயேத் ॥

ஏவம் க்வசிந்நைகவிதேந ப்ரோச்யதே லிம்கமாநகம் ।
நாகரம் த்ராவிடம் லிம்கம் வேஸரம் ச வதாம்யஹம் ॥ ௮௬ ॥

குறைவாகச் செய்யக்கூடாது. ஒரு முழத்திற்குக் குறைவில்லாத லிங்கம் யாவும், விருத்தாகாரமாக (வட்டவடிவமாக) இருப்பதாகும். (85)

லிங்கத்தின் உயரத்தில் 9ல் 4 பாகத்தை பீடத்தினுள், பொருத்தவைக்கவேண்டும். அதன் மீதமான 5 பாகமானது மேலே (சிவாம்சமாக) தெரியவேண்டும். இவ்வித லக்ஷணமுடைய லிங்கத்தை, விகல்பகிருஹம், ஆபாஸ கிருஹம், இவைகளில் வைத்துப் பிரதிஷ்டை செய்ய வேண்டும். (86)

லிங்கத்திற்குக் கூறிய 5 பாகத்தை, பீடத்தினுள் வைத்து, பாக்கியுள்ள 4 பாகத்தை, மேலே சிவாம்சமாகத் தெரியும்படி செய்யப்பட்டிருந்தால், அந்த லிங்கத்தை விகல்பகிருஹத்திலோ, ஆபாஸகிருஹத்திலோ வைக்காமல், மற்ற ஜாதி கிருஹம், சந்தகிருஹத்தில் வைக்கவேண்டும். சிலையினாலே செய்யப்படும் லிங்கத்தை 13 அங்குலத்தில் செய்யக்கூடாது. (87)

லிங்கமாநமானது இவ்விதம் அநேகவிதமாகக் கூறப்பட்டிருக்கிறது. இனி நாகரலிங்கம், திராவிடலிங்கம், வேஸரலிங்கம் இவைகளின் லக்ஷணத்தைக் கூறுகிறேன்.

லிங்கோதயே து வேதாம்ஶே ஏகாம்ஶம் கந்யஸம்ஜ்ஞிதம் |
த்ர்யம்ஶே த்வேகாம்ஶம் து விஸ்தாரம் ஶ்ரேஷ்டமுச்யதே |
தயோர்மத்யேஷ்டதாம்ஶே து நவதா தாரமுச்யதே |
ஷோடஶே பஞ்சாம்ஶே து பஞ்சாம்ஶம் ஶாந்திகம் பவேத் ||

வேதாம்ஶம் பௌஷ்டிகம் ப்ரோக்தம் ராமாம்ஶம் ஜயதம் பவேத் |
ஆபிசாரே த்விபாகம் ஸ்யாத் ஸ்யாதேவம் சதுர்விதம் ||
ஏவம் த்ரயோத(சதுர்த)ஶவிஸ்தாரம் நாகரே து விதீயதே |
லிங்கோச்சே அஷ்டதஶாம்ஶே து ஷட்பஞ்சயுகராமகம் ||

லிங்கத்தின் உயரத்தில் 4-ல் 1 பங்கு அகலமுடைய லிங்கமானது அதமமாகும். உயரத்தில் 3-ல் 1 பங்கு அகலமுடையது ஶ்ரேஷ்டமாகும். (ஶ்ரேஷ்டம் – சிறந்தது அல்லது உத்தமம்) கீழ கூறப்பட்ட இரண்டுவித அளவுகளின் நடுவிலுள்ள அளவை, 8 பாகங்களாகச் செய்ய, லிங்கத்தின் அகலம் 9 விதமாகும்.

உயரத்தில் 16-ல் 5 பாகம் அகலமுள்ளது, சாந்திக லிங்கமாகும். (சாந்திகம் – தீமைகளை நீக்கக்கூடியது). உயரத்தில் 16-ல் 4 பாகம் அகலமுள்ளது, பௌஷ்டிக லிங்கமாகும். (பௌஷ்டிகம் – ஆரோக்யத்தைக் கொடுக்கக் கூடியது). 16-ல் 3 பங்கு அகலமுள்ளது, ஜயத்தைக் கொடுப்பதாகும்.

ஆபிசார கர்மாவில் 2 பாகம் அகலமுள்ளதாகும். இவ்விதமாக, லிங்கத்தின் அகலம் 4-விதமாகும். நாகர லிங்கமானது இவ்விதமாக 13 (14) வித அகலமுடையதாகும்.

லிங்கத்தின் உயரத்தில் 18 பாகங்களில் முறையே 6 பாகம், 5 பாகம், 4 பாகம், 3 பாகம், விஸ்தாரமுடைய

த்ராவிடம் ஶாந்திகாதிஃ ஸ்யாத் ஏவம் ச
சதுர்விதம் ।
வேஸரே லிங்கமுச்சம் து விம்ஶத்யம்ஶவிபாஜிதே ॥ ௯௩ ॥

அஷ்ட வா ஸப்த ஷட்பஞ்சபாகைர்விஸ்தாரஸம்யுதம் ।
ஶாந்திகம் பௌஷ்டிகம் சைவ ஜயதம் ச க்ரமேண து
(ஆபிசாரகம்) ॥ ௯௪ ॥

வேஸரம் ச சதுர்விதம் ஹர்ம்யம் லிங்கம் ச பிண்டிகா ।
பாதாதாரஶிலா சைவ ஏகஜாதிஶிலா(ர)ஸங்கரம் ॥ ௯௫ ॥

யத்யேவம் க்ருதம் லிங்கம் ஸர்வஸம்பத்ஸம்ருத்திதம் ।
அந்யஜாத்யம்ஶஸங்கரேது ராஜ்ஞஃ துஃகபயாவஹம் ॥

தஸ்மாத் ஸர்வப்ரயத்நேந ஸங்கரம் ந ஸமாசரேத் ।

---

4 வித லிங்கங்களும் திராவிட லிங்கங்களாம். இவைகள் முறையே, சாந்திகம் முதலிய லிங்கங்களாகும்.

லிங்கத்தின் உயரத்தில் 20-ல், 8 பாகம், 7 பாகம், 6 பாகம், 5 பாகம், விஸ்தாரமுள்ளதாகச் செய்யப்பட்ட லிங்கமானது, வேஸரலிங்கமாகும். இவைகள் முறையே, சாந்திகலிங்கம், பௌஷ்டிகலிங்கம், ஜயதலிங்கம், (ஆபிசாரம்) என்ற லிங்கங்களுமாம். இவ்விதமாக வேஸரலிங்கம் 4-விதமாகும். (94)

ஹர்மியம், லிங்கம், பிண்டிகை, பாதாதாரசிலே, இந்நான்கும் ஒரேஜாதிச் சிலேயினால் செய்யப்படவேண்டும். இவைகளில், வேறு ஜாதிச் சிலேயைக் கலக்கலாகாது. இவ்விதமாகச் செய்யப்பட்ட லிங்கமானது, ஸகலவிதமான நன்மைகளையும் விருத்திசெய்வதாகும். வேறு ஜாதிச் சிலேயின் ஸம்பந்தமிருந்தால், அது அரசனுக்கு துக்கத்தையும் பயத்தையும் உண்டுபண்ணும். (96)

ஆகையால், ஸகலவிதமான முயற்சிகளாலும், சிலே

ஸிம்மாநாம் நாமாநாஜேவம் வ்யாதகாயாதிகம் ச்ருணு ||

ஸிம்மலெள்யாஞ்ஞ்யகாநம் து காநாம்மத்யேந ஹாஜயேத் |
காத்ராஜூரம் ப்ரவ்ருத்யா வா ஹாநய்யா வா வஜிஹாரயேத் ||

ஜ்யேஷ்டாஞ்ஜாயலெ: வலிலிணே: காத்ரா வலிணம்
வஜிமூலெகல் |

உத்ஸ்யகாத்ரலஷாஹிவலிபிலெத பக்ஷலஸம்வஸ்யா || கூகூ ||

ஹ்ருதெ ஆவஸ்வஜிஷம் ஷ்யாதஜ்லிநயாதி பிஜொத்தஃ |
நவஹிமலிணிதெ ஸஷ்டஹ்ருதெ ஸெவகாதி(ஜிஷம்து)
வாஜகம் || ரா ||

சுநமெமலிணிதெ அாஷஹ்ருதெ யொநிஜாஷாஹ்ருதம் |

களில் ஜாத்யந்தரஸங்கரம் (ஸங்கரம் – சேர்க்கை) ஏற்படாதபடி, லிங்க நிர்மாணம் செய்யவேண்டும். இவ்விதம் நாகராதி லிங்கங்களின் லக்ஷணம் கூறப்பட்டது. இனி ஆயாதிகளைக் கூறுகிறேன், கேட்பாயாக. (97)

லிங்கத்தின் உயரத்தை மாநாங்குலத்திறைலே வகுக்க வேண்டும். அப்படி அங்குலங்களாகக் கணக்கிடும் பொழுது, அரை குறையாக மிச்சப்பட்டால், அத்துடன் அவசியமான பாகத்தைக் கூட்டியாவது குறைத்தாவது அதை முழு அங்குலமாகச் செய்துகொள்ள வேண்டும். உத்தம லிங்கமானாலும், மத்தியம லிங்கமானாலும், அதம லிங்கமானாலும், அதில் ஏற்படும் அங்குலக் குறைவை, கீழே கூறியபடி, முழு அங்குலமாகச் செய்துகொள்ளவேண்டும்.

(லிங்கத்தின்) உயர அங்குலத்தை 8ஆல் பெருக்கி 27ஆல் வகுத்து மீதம்வரும் எண்ணுளது, அசுவதி முதலிய நக்ஷத்திரங்களாகும்.

லிங்கத்தின் உயர அங்குலத்தை 9ஆல் பெருக்கி 7ஆல் வகுத்து மீதம்வரும் எண்ணுனது, ஞாயிறு முதலிய வாரங்களாகும், (100)

ஷஷ்டிவர்த்திதே ஹாரநிர்ஹ்ருதே வ்யயஶிஷ்டாஹ்ருதம் ||

நவபிர்வர்த்திதே நாடீஹ்ருதே ஶேஷம் த்ருணம் பவேத் |
யோநிவர்த்திதே நவஹ்ருதே அம்ஶகம் தத்ஸமாதய: || ௱௨ ||

ஆயாதிகம் வ்யயக்ஷீணம் ஸம்பதாமாஸ்பதம் ஸதா |
1 த்வஜஸிம்ஹௌ வ்ருஷோ ஹஸ்தீ ஶுபதா யோநிஸம்ஜ்ஞிதா ||

ந்ருபஸ்ய கர்த்ருஜந்மர்க்ஷாத் விம்ஶர்க்ஷாவஸாநகம் |

3ஆல் பெருக்கி, 8ஆல் வகுத்து மீதம்வரும் எண்ணனது யோநியாகும்.

8ஆல் பெருக்கி, 12ஆல் வகுத்து மீதம்வரும் எண்ணனது ஆதாயமாகும். (101)

9ஆல் பெருக்கி, 10ஆல் வகுத்து மீதம்வரும் எண்ணனது, கடனாகும்.

4ஆல் பெருக்கி 9ஆல் வகுத்து மீதம் வரும் எண்ணனது திருடர் முதலியவைகளாகும். (102)

ஆதாயம் அதிகமாகவும், கடன் குறைவாகவுமிருக்கும் அங்குலமாநம் சிறந்ததாகும். எப்பொழுதும் ஸகலவித ஸம்பத்திற்குமிருப்பிடமாகும். (ஸகல ஸம்பத்துக்களையும் கொடுக்கும் என்பது பொருள்.)

[2] யோநிகளில், துவஜம், ஸிம்ஹம், விருஷபம், யானே, இவைகள் சுப பலனேக்கொடுப்பவைகளாம். (103)

அரசன், யஜமானன், இவர்களின் ஜந்ம நக்ஷத்திரம்

---

1 த்வஜோ தூமஸ்ததா ஸிம்ஹ: ஶ்வா வ்ருஷ: கர்த்தபோ கஜ: |
காகஶ்சேதி க்ரமாத் யோநிநாமாநி கீர்த்திதாநி ச ||

2 துவஜம், தூமம், ஸிம்ஹம், நாய், விருஷபம், கழுதை, யானே, காக்கை, இவைகள் முறையே யோநிகளின் பெயர்களாம்,

ததைவ வாஸ்துநக்ஷத்ராத் மண்டபஸ்ய ஶுபாவஹம் || ௱௪ ||

ஜந்மத்ரயம் ச மைத்ரம் ச க்ஷேமஸாதநதாரகா: |
ஶுபாவஹாஸ்து விஹிதா: ஶேஷகாஸ்த்வஶுபாவஹா: ||

ராஶ்யஷ்டமம் ச வைநாஶம் ததைவ நரராக்ஷஸம் |
வர்ஜிதாஸ்த்வஶுபா ஹ்யேதே யத்நத: பரிவர்ஜயேத் || ௱௫ ||

முதல், லிங்கத்தின் நக்ஷத்திரம்வரையில் எண்ணவேண்டும். அவ்விதமே, தேவாலய நக்ஷத்திரம் முதல், லிங்கத்தின் நக்ஷத்திரம் வரையில் எண்ணவேண்டும். இவ்விதம் எண்ணி வரும் நக்ஷத்திரமானது சுப பலனைக்கொடுக்கக்கூடிய சுப நக்ஷத்திரமாக இருக்கவேண்டும். (104)

ஜன்மத்ரயம் (1—10—19வது நக்ஷத்திரங்கள்) ஜன்ம நக்ஷத்திரத்திற்கு 2வது நக்ஷத்திரம், 4வது நக்ஷத்திரம், 8வது நக்ஷத்திரம், 6வதுநக்ஷத்திரம், 9வது நக்ஷத்திரம், இவைகள், சுப பலனைக் கொடுக்கக்கூடியவைகள் என்று கூறப்பட்டிருக்கின்றன. மற்ற (3–5–7வது) நக்ஷத்திரங்கள், அசுப பலனைக் கொடுக்கக்கூடியவைகளாம். (105)

யஜமானனுடைய ஜன்ம லக்கினம், சந்திர லக்கினம் இவைகளுக்கு 8-வது ராசிக்குரிய நக்ஷத்திரங்கள், வைநாசிக நக்ஷத்திரம், (3-வது நக்ஷத்திரம்) யஜமானனுடைய நக்ஷத்திரம், லிங்கத்தின் நக்ஷத்திரம், இவ்விரண்டு நக்ஷத்திரங்களில், ஒன்று நரகண நக்ஷத்திரமாகவும், மற்றொன்று ராக்ஷஸகண நக்ஷத்திரமாகவும், இருப்பதுமான நக்ஷத்திரம், இவைகள், அசுபபலனைக் கொடுக்கக்கூடியவைகள் ஆகையால், இவைகள் விலக்கப்பட்டவைகளாம். இந்த நக்ஷத்திரங்களை முயற்சியுடன் கவனித்து நீக்கிவிடவேண்டும். (106)

(இங்கு கூறப்பட்டிருக்கும் விஷயங்கள் யாவும், யஜமானன் லிங்கம் இரண்டிற்குமே கூறப்பட்டதாகும்.)

ஸூர்யவாராதிஸம்யுக்தா ஹஸ்தர்க்ஷாதி ச தத்ஸ்ம்ருதா: ।
[ஸூர்யவாராதிஸம்யுக்தம் ஹஸ்தர்க்ஷாதி ச தத்க்ஷயம் ।]
ஶத்ருகம் மரணம் நாஶம்ருதம் ச யதாக்ரமம் ॥ 107 ॥

*தஸ்கரம் ச புக்திம் (நிதநம்) ஷண்டாம்ஶகம் விவர்ஜயேத் ।
ஶேஷாம்ஶகம் விநிர்க்ராஹ்யம் ஶுபதம் (அம்ஶம்) ததா
ஸம்க்ராஹயேத் ॥ 108 ॥

ஸமலிங்கம் வர்த்தமானம் ஶைவாதிகம் ச ஸ்வஸ்திகம் ।
ஸர்வதோபத்ரலிங்கம் ச ஸார்வதேஶிகமேவ ச ॥ 109 ॥

தாராலிங்கம் முகலிங்கம் லிங்கமஷ்டவிதம் பவேத் ।

ஞாயிற்றுக்கிழமை முதலிய கிழமைகளுடன் கூடிய ஹஸ்தம் முதலான நக்ஷத்திரங்கள், முறையே, சத்துரு, மரணம் நாசம், அமிருதம் எனப்படும். (107)

[2] அம்சங்களில், தஸ்கராம்சம், நிதநாம்சம், க்லீபாம்சம், இவைகளை விலக்கவேண்டும். (இவைகள் கெட்ட பலனைக் கொடுக்கக்கூடியவைகள். ஆதலால் இவைகளை விலக்கவேண்டும். மற்றவைகள் நல்ல பலனைக்கொடுக்கக் கூடியவைகள். ஆகையால்,) மற்ற அம்சங்களைக்கொள்ள வேண்டும். சுபகரமான மாநத்தை (அம்சத்தை)க்கொள்ள வேண்டும். (108)

லிங்கமானது, ஸமலிங்கம் 1, வர்த்தமாநம் 2, சைவாதிகம் 3, ஸ்வஸ்திகம் 4, ஸர்வதோபத்ரம் 5, ஸார்வதேசிகம் 6, தாராலிங்கம் 7, முகலிங்கம் 8, என்று 8 வித

---

1 சோரோ புக்திஶ்ச ஶக்திஶ்ச தந்யோ ராஜா ச ஷண்டக: ।
நிர்ப்ரீதி நிர்தநம் ப்ரேஷ்ய: நவாம்ஶாநி யதாக்ரமம் ॥

2 சோரன், புக்தி, சக்தி, தந்யம், ராஜா, நபும்ஸகன் (அலி), நிர்பீதி, நிர்தநம், ப்ரேஷ்யன், இவைகள் முறையே அம்சங்களின் பெயர்களாம்.

ஸமலிங்கம் து விப்ராணாம் ந்ருபாணாம் வர்த்தமானகம் ||
சைவாதிகம் து வைஶ்யாநாம் ஶூத்ராணாம் ஸ்வஸ்திகம்
பவேத் |
ஸர்வேஷாமிதரல்லிங்கம் ஸர்வகாமபலப்ரதம் || ௩௰௧ ||

ஏக ஏவ மஹாதேவ: லிங்கபேதாத் ந்ருணாம் ஹித: |
உபாயாஸவிஶேஷேண அதஶ்ச ஶ்ரீகரம் வசா || ௩௰௨ ||

வஸ்த்ராதாமத்ரயம் க்ருத்வா (சதுரச்ரம்) குர்யாத் விதிநா
புத: |
அதஶ்சதுரஶ்ரயோஹாம்ஶம் ப்ரஹ்மாம்ஶயோஹ்யதே || ௩௰௩ ||

ஊர்த்வே து வஸுகோணம் ஸ்யாத் விஷ்ண்வம்ஶம் தத்ப்ரகீர்த்திதம் |

மாகும். இவைகளில், ஸமலிங்கமானது பிராம்ஹணர்களுக்கும், வர்தமானலிங்கமானது க்ஷத்ரியர்களுக்கும், சைவாதிக லிங்கமானது வைசியர்களுக்கும், ஸ்வஸ்திக லிங்கமானது சூத்ரர்களுக்கும், சிலாக்கியமானவைகளாம். இவைகள் நீங்கிய மற்ற லிங்கங்கள் யாவும், எல்லா ஜாதியினருக்கும் விரும்பிய ஸகலவிதமான பலன்களையும் கொடுக்கக்கூடியவைகளாம். மஹாதேவன் ஒருவனேயானாலும், அவர், பலவிதமான லிங்க ஸ்வரூபத்துடன், மனிதர்களுக்கு நன்மையையளித்து வருகிறார்.

முதலில் (லிங்கம் செய்யவேண்டியதற்காக எடுக்கப்பட்ட சிலையை) தான் விரும்பும் அகல நீளத்துடன் சதுரச்ரமாகச் செய்யவேண்டும் (சதுரிக்கவேண்டும்.) பிறகு, மேதாவியான சில்பியானவன், கூறப்போகும் விதிப்படி, அதை, 3 பாகங்களாகக் கணக்கிட்டுக்கொள்ளவேண்டும். அந்த 3 பாகங்களில், கீழேயுள்ள பாகத்தை, சதுரச்ரமாக (சச்சதுரமாக)ச் செய்யவேண்டும். இந்த கீழ்பாகத்திற்கு, பிரம்ஹாம்சம் என்று பெயர். (118)

ஊர்த்வ-பாகம் து வ்ருத்தம் ஸ்யாத் தச்சிவாம்சம் நிகத்யதே ||

அம்சம் ப்ருதக்விதானார்த்தம் அசேஷம் து சிவாம்சகம் |
சிவாத்மா சாவிசிஷ்டம் ஆவ்யம்சஸ்யாவயவகம் யதா ||

வ்ருக்ஷஸ்ய மூலம் மத்யாக்ரம் சாகாபத்ரம் பலம் ஸ்திதி |
சப்த: ஸ்பர்சம் ச ரூபம் ச ரஸோ கந்தஸ்ததைவ ச ||

யதேந்த்ரிய குணாச்சைவ நைகைகாம்சம் ப்ருதக் ஸ்திதம் |
ததாம்சகேஷு யத்வைவ ப்ராணிகேஷு ந பித்யதே ||

(பிறகு,) அந்தச் சிலையின் நடுவிலுள்ள பாகத்தை அஷ்டாச்ரமாக (8 கோணமாக)ச் செய்யவேண்டும். இந்த மத்தியபாகத்திற்கு விஷ்ணு வம்சம் என்று பெயர்.

மேலேயுள்ள பாகத்தை, விருத்தாகாரமாக (வட்ட வடிவமாக)ச் செய்யவேண்டும். இந்த மேல்பாகத்திற்குச் சிவாம்சம் என்று பெயர். (114)

இவ்விதமாக 3 அம்சங்களைக்கூறி, அவைகளுக்கு, பிரம்ஹாம்சம், விஷ்ணுவம்சம், சிவாம்சம் என்று வெவ்வேறு பெயர்கள் கூறியிருப்பது, அந்தந்த பாகங்களைத் தனித்தனியே வியவஹரிப்பதற்காகக் கூறப்பட்டிருக்கிறது. எனவே அந்த 3 பாகமும் சிவஸ்வருபமேயாகும்.

சிவலிங்கத்தின் பாகங்கள் எல்லாமே சிவஸ்வரூபந் தான் என்றால், அதன் பாகங்களை வெவ்வேறு வாசகங்களால் எதற்காகக் கூறவேண்டும் என்றால், —

மரத்தின் வெவ்வேறு பாகங்கள், வேரு–உச்சி–கிளை இலை–பழம்–என்று கூறப்படுகின்றன. ஆயினும் இவைகள் எல்லாம், மரம் என்னும் ஓரே பொருள்தான் அல்லவா.

சப்தம்–ஸ்பர்சம்–ரூபம்–ரஸம்–கந்தம்–இவைகள், இந்திரியங்களின் குணங்களாம். இத்தகைய இந்திரியங்கள் பலவாயினும், அந்த இந்திரியங்களையுடைய மனிதன் ஒருவன்தான் அல்லவா? அதைப்போல சிவலிங்கத்தின்

தஸ்மாதேவ ஶிவலிங்கஸ்ய ஸர்வம் ப்ரத்யாத்மகம் |
*லிங்கதாரம் யதாஸ்ரம் து க்ருத்வா கர்ணார்தார்தகம்
க்ருத்வைவ ॥ 119 ॥

கோணாத்கோணம் து ஸம்க்ருஹ்ய தேந மாநேந தேஶிக: |
(பஹிர்பாகம் து ஸந்த்யஜ்ய) அஷ்டாஸ்ரம் தத்பவேதிதி ॥

அதவா லிங்கதாரம் து ஸப்தபாகம் விபாஜிதே |

பாகங்களைத் தனித்து வியவஹரிப்பதற்காக அவைகளுக்கு, யுக்தியாகத் தனித்தனியே பெயர்கள் கல்பிக்கப் பட்டிருக்கின்றவேயல்லாது, அதன் எல்லா பாகங்களுமே லிங்கஸ்வரூபந்தான்.

முதலில், லிங்கத்திற்காக கிரஹிக்கப்பட்ட சிலையின் அகலத்தைக் கணக்கிட்டு, அதை சதுரச்ரமாக (சச்சதுரமாகச்) செய்துகொள்ளவேண்டும். பிறகு அதன் கர்ணத்தின் பாதியில் பாதியைக் கணக்கிட்டுக்கொள்ளவேண்டும். (கர்ணம் குறுக்களவு) அந்த கர்ணத்தின் ¼ பங்கு அளவைக்கொண்டு, சிலையின் மூலையைக் கோணமாகச் செய்துகொள்ளவேண்டும். (கோணம்—முக்கோணம், பிறகு, அந்தக் கோணத்தின் வெளிப்பக்கத்தைச் செதுக்கிவிடவேண்டும். (இவ்விதம் 4 மூலைகளிலும் செய்ய) சதுரச்ரமாக இருந்த சிலையானது அஷ்டாச்ரமாகும். (சதுரச்ரம்-4 பட்டை, அஷ்டாச்ரம்-8 பட்டை. இது சற்றேறக் குறைய ஸம அஷ்டாச்ரமாம்.) (119)

அல்லது, லிங்கத்தின் அகலத்தை (சதுரச்ரமாகச் செய்யப்பட்ட லிங்கார்தமான சிலையின் அகலத்தை)

---

*லிங்கதாரம் யதாஸ்ரம் து க்ருத்வா கர்ணார்தார்தகம் |
ஸம்ப்ருஹ்ய கோணே கோணம் து தேந மாநேந கல்பயேத் ॥
இதி பாடே பாடபேத: |

யுகாம்ஶம் மத்யபட்டம் ஸ்யாத் ஶேஷம் ஶோதயேத் பஹிர்பாகயோ: ||

அதவா வஸ்வம்ஶகே து மத்யபட்டம் ரஸாம்ஶகம் |
ஶோதயேத் பஹிர்பாகம் வஸ்வஶ்ரம் து ஶிலா பவேத் ||

சதுரஶ்ரே வஸ்வம்ஶகம்(கே) அஷ்டாஶ்ர(ஶ்ரே)
க்ருதே ஸதி |

தத்கோணாயதம்(யதே) து வஸ்வஶ்ரம்(ஶ்ரே)கோணாத்கோணம்
து பாகம்(ஶம்)யேத் || ௱௨௨ ||

பார்ஶ்வயோஸ்து பஹிர்ஸ்தம் கர்ணாஶ்ரம் தக்ஷயேதிஹ |

---

7 பாகங்களாகச் செய்து, அவைகளில் 4 பாகத்தை, மத்திய பட்டத்தின் (பட்டம்—பட்டை) அளவாக வைத்துக் கொண்டு, (பாக்கியுள்ள 3 பாகத்தில் 2 பக்கங்களிலும் இருக்கும் $1\frac{1}{2}$ பாகத்திற்குச் சமமாக மறுபக்கத்திலும் கணக்கிட்டுக்கொண்டு, அந்த 2 பங்கிலுமுள்ள $1\frac{1}{2}$, $1\frac{1}{2}$, பங்கு அளவுகளையும் முக்கோணமாகச் செய்துகொண்டு) அதன் வெளியிலுள்ள பாகத்தைச் செதுக்கிவிடவேண்டும். அப்பொழுது அது அஷ்டாச்ரமாகும். (120)

அல்லது, 8 பாகங்களில் 6 பாகங்களை மத்திய பட்டமாகக் கணக்கிட்டு, அதன் மிகுதியை, மூலைகளில் முன்போல் கணக்கிட்டு, வெளியில் காணப்படும் பாகத்தைச் செதுக்க, அந்தச்சிலை அஷ்டாச்ரமாகும். இவ்விதம், அஷ்டாச்ரமாகச் செய்வது 3 விதமாகும். (121)

சதுரச்ரத்தை 8 பாகமாகக் கணக்கிட்டு, அஷ்டாச்ரமாகச் செய்துகொண்டு, அந்த அஷ்டாச்ரத்தின் கோணுச்ரங்களின் பாதியை, முன்போலவே கணக்கிட்டு, அதன் கோணங்களில் முக்கோணங்களை அடையாளம் செய்து கொள்ளவேண்டும். பிறகு அந்தக் கோணங்களின் வெளிப் பக்கங்களைச் செதுக்கிவிடவேண்டும். அப்பொழுது, அது,

𑌕𑍋𑌣𑌾𑌶𑍍𑌰𑍇𑌽𑌶𑍍𑌰𑌂(𑌶𑍍𑌰𑍇)𑌤𑍁 𑌸𑌂𑌶𑍋𑌧𑍍𑌯 𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌕𑌾𑌰𑌂 𑌤𑍁
𑌤𑌦𑍍𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ ௧௨௩ ॥

𑌅𑌷𑍍𑌟𑌾𑌶𑍍𑌰𑌾𑌦𑍀𑌨𑌿 𑌵𑌿𑌨𑍍𑌯𑌾𑌸𑌂(𑌸𑍈)𑌸𑌮𑌵𑍇𑌵𑍈𑌵 𑌹𑌿 𑌕𑌥𑍍𑌯(𑌨𑍍𑌯)𑌤𑍇 ।
𑌲𑌿𑌙𑍍𑌗𑌸𑍍𑌯𑌾(𑌙𑍍𑌗𑌾𑌯𑌾)𑌯𑌾𑌮𑌾𑌂(𑌤𑍍𑌰𑍍𑌯𑌾𑌂)𑌶𑍇𑌨𑌕𑌾𑌂𑌶𑌂
𑌚𑌤𑍁𑌰𑌶𑍍𑌰𑌕𑌮𑍍 ॥ ௧௨௪ ॥

𑌮𑌧𑍍𑌯𑍇𑌽𑌷𑍍𑌟𑌾𑌶𑍍𑌰𑌂 𑌤𑍁 𑌚𑍋𑌰𑍍𑌧𑍍𑌵𑍇 𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 𑌶𑌿𑌵𑌾𑌂𑌶𑌕𑌮𑍍 ।
𑌸𑌮𑌲𑌿𑌙𑍍𑌗𑌮𑌿𑌤𑌿 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌤𑍁 𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌕𑍃𑌤𑍍 ॥ ௧௨௫ ॥

𑌦𑍈𑌰𑍍𑌘𑍍𑌯𑌾𑌂𑌶(𑌶𑍇)𑌤𑍍𑌵𑌾𑌯𑌾𑌮𑍇 𑌸𑌪𑍍𑌤𑌾𑌂𑌶𑌂 𑌚𑌤𑍁𑌰𑌶𑍍𑌰𑌕𑌮𑍍 ।
𑌅𑌷𑍍𑌟𑌾𑌂𑌶𑍇𑌽𑌷𑍍𑌟𑌕𑍋𑌣𑌂 𑌚 ...𑌨𑌵𑌾𑌂𑌶𑌂 𑌵𑍃𑌤𑍍𑌤𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥
[𑌅𑌷𑍍𑌟𑌾𑌂𑌶𑌮𑌷𑍍𑌟𑌕𑍋𑌣𑌂 𑌚 𑌨𑌵𑌾𑌂𑌶𑌂 𑌵𑍃𑌤𑍍𑌤𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ।]

ஷோடசாச்ரமாகும். பிறகு, அவைகளின் கோணங்களை முன்போலவே முக்கோணமாகச் செய்து, அதன் வெளிப் பக்கங்களிலுள்ள பகுதிகளைச் செதுக்கிவிட வேண்டும். இவ்விதம் செய்ய, அந்தச்சிலையானது, விருத்தாகாரமாகும். (வட்டவடிவ முடையதாகும்) இங்கு கூறப்பட்டிருக்கும் முறையின்படியே, அஷ்டாச்ரம் முதலியவைகள் செய்யப் படுகின்றன.

லிங்கத்தின் உயரத்தை 3 பாகம்செய்து, அதில் 1 பாகம் (அடியில்) சதுரச்ரமாகவும், மத்தியிலுள்ள 1 பாகம் அஷ்டாச்ரமாகவும், மேலேயுள்ள 1பாகம் விருத்தாகாரமாகவும் இருப்பது, ஸமலிங்கமெனப்படும். இது பிராம்ஹணாதி ஜாதியினருக்கு விருத்தியைக் கொடுக்கும். (125)

லிங்கத்தின் உயரத்தை 24 பங்குகளாகச் செய்து கொண்டு, அந்தப் பங்குகளில் 7 பாகம் சதுரச்ரமாகவும், 8 பாகம் அஷ்டாச்ரமாகவும், 9 பாகம் விருத்தாகாரமாகவும் கொள்ளுவது, வர்தமான லிங்கமாகும்.

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥
([illegible]
[illegible] ।)

[illegible]
[illegible] ।
[illegible] ॥ ௱௨௬ ॥

[illegible]
[illegible] ।

இவ்விதமாகவே, லிங்கத்தின் உயரத்தில் 6 பாகம் சதுரச்ரம், 7 பாகம் அஷ்டாச்ரம், 8 பாகம் விருத்தமாகக் கொள்ளுவதும், வர்தமான லிங்கமாகும்.

லிங்கத்தின் உயரத்தில் 5 பாகம் சதுரச்ரம், 6 பாகம் அஷ்டாச்ரம், 7 பாகம் விருத்தமாகக்கொள்ளுவதும், வர்தமான லிங்கமாகும்.

லிங்கத்தின் உயரத்தில் 4 பாகம் சதுரச்ரம், 5 பாகம் அஷ்டாச்ரம், 6 பாகம் விருத்தமாகக்கொள்ளுவதும் வர்தமான லிங்கமாகும். இவ்விதமாக, வர்தமான லிங்கம் 4 விதமாகும். (127)

லிங்கத்தின் உயரத்தை 10 பாகங்களாகச் செய்து கொண்டு, அவைகளில் 3 பாகம் சதுரச்ரமாகவும், 3 பாகம் அஷ்டாச்ரமாகவும், 4 பாகம் விருத்தமாகவும்கொண்டால், அது, சிவாதிக லிங்கமாகும். இதை வேறுவிதமாகவும் கொள்ளலாம்.

சதுரச்ரம், அஷ்டாச்ரம், விருத்தம், இவைகளை முறையே, 4, 4, 5 பாகங்களாகவும், 5, 5, 6 பாகங்களாகவும், அல்லது 6, 6, 7 பாகங்களாகவும் கொள்ளலாம்.

[illegible] ||

[illegible] |

[illegible] ||

[illegible] |

[illegible] ||

[illegible] |

[illegible] ||

[illegible] |

* [illegible] ||

எனவே, சைவாதிக லிங்கமானது, கீழே கூறப்பட்ட விதிகளின்படி நான்கு விதங்களாகும்.

லிங்கத்தின் உயரத்தை 9 பாகங்களாகச் செய்து, அந்த பாகங்களில், சதுரச்ரம் 2 பாகம், அஷ்டாச்ரம் 3 பாகம், விருத்தம் 4 பாகமிருப்பது, ஸ்வஸ்திக லிங்கமென்று கூறப்பட்டிருக்கிறது. இனி, ஸர்வதோபத்ர லிங்கத்தைக் கூறுகிறேன். (131)

அடியிலிருந்து நுனி வரையில் 3 பாகங்களும் விருத்தாகாரமாகவே இருப்பதாகும். அதன் உயரத்தில் 3ல் 1 பாகம் பூமிக்குள் பதிந்தும், 3ல் 1 பாகம் யோநீ (ஆவடை) யில் பொருத்தப்பட்டும், 3ல் 1 பாகம் பூஜாம்சமாக (வெளியில் லிங்காகாரமாகத் தெரிந்துகொண்டும்)வும் இருப்பது, ஸர்வதோபத்ர லிங்கம் எனப்படும்.

ஸார்வதேசிக லிங்கமானது, எல்லா பாகங்களும் விருத்தாகாரமாக இருப்பதாகும். இதன் உயரத்தை, முறையே, 5–4–3 பாகங்களாகச் செய்யவேண்டும். (அவைகளில்

---

* [illegible] |

[illegible] |

[illegible] |
[illegible] ||

[illegible] |
[illegible] ||

[illegible] |
[illegible] ||

[illegible] |
[illegible] || [illegible] ||

---

5 பாகம் அடியிலிருப்பதாகும். மத்தியிலுள்ள 4 பாகத்தை) பீடத்தில் வைக்கவேண்டும். பாக்கியுள்ள (3) பாகமானது பூஜாம்சமாகும். (சிவாம்சமாகும்) இவ்விதமாகவே, ஸார்வ தேசிக லிங்கத்தைக் கல்பிக்கவேண்டும்.

ஸமலிங்கத்தில், அதன் உயரத்தை 9 பாகமாகச்செய்து, 3 பாகங்களை ஸமபாகமாகக் கொள்ளவேண்டும். அதன் வட்டவடிவத்தின் (சிவாம்சமான மேல்பாகத்தின்) சுத்தளவானது, (உயரத்தில் 9ல்) 6 பங்கு இருக்கவேண்டும். மத்திய பாகத்தின் சுத்தளவானது, 9ல் 7 பாகம் இருக்கவேண்டும். கீழ்பாகத்தின் சுத்தளவானது, 9ல் 8 பாகம் இருக்கவேண்டும். இந்த த்ரைராசிக விதியானது எல்லா ஜாதியினருக்குமுகந்ததாகும். சிறந்ததுமாகும்.

அடிமுதல் நுனிவரையில் சதுரச்ரமாக இருப்பது தாராலிங்கமாகும்.

ஸமலிங்கத்தில், மூலபாகம் சதுரச்ரமாகவும், மற்ற இரண்டு பாகங்களும் அஷ்டாச்ரமாக இருப்பதும் தாரா லிங்கமாகும்.

கீழேயுள்ள பாகம் சதுரச்ரமாகவும், மத்திய பாகம்

பூஜாம்ஶம் ஷோடஶாஸ்ரம் து தாராலிங்கம் த்ரிதா பவேத் |
ததக்ரம் லிங்கமூர்த்வாந்தம் யவார்த்தம் வா யவோந்நதம் ||௩௯||

ஸமலிங்கம் து தாராஸ்யாத் ஸர்வப்ராணிஸுகாவஹம் |
தாராலிங்கஸமம் க்யாதம் முகலிங்கம் விஶேஷத: ||௪௰||

ஶிவாதீத(ஶிவாம்ஶாதிகலிங்கேது முகலிங்கம்
ப்ரகல்பிதம்) |
பூஜாபாகத்ரயம்(பூஜாம்ஶம் து த்ரிதா)க்ருத்வா
ஊர்த்வபாகே முகம் பவேத் ||௪௧||

பஞ்சமூர்த்நி சதுர்வக்த்ரம் க்ரீவா சைக ஸமாயுதம்
(காம்ஶஸம்யுதா) |

அஷ்டாச்ரமாகவும், பூஜாபாகம் (மேல்பாகம்) ஷோட சாச்ரமாக இருப்பதும் தாராலிங்கமாகும். இவ்விதம் தாராலிங்கம் 3 விதமாகும்.

இத்தகைய தாராலிங்கத்தின் அச்ரமானது, (அச்ரம்–பட்டை) லிங்கத்தின் சிரஸ்ஸு வரையிலிருப்பதாகும். ½ அல்லது 1 யவை உயர்ந்திருப்பதுமாகும்.

ஸமலிங்கமானது தாராலிங்கமாக இருந்தால், அது, ஸகல பிராணிகளுக்கும் நன்மையையுண்டுபண்ணும்.

முகலிங்கமானது, விசேஷித்து, தாராலிங்கத்தைப் போன்றதேயாம்.

சிவாம்சாதிக லிங்கத்தில், முகலிங்கம் கல்பிக்கப்பட வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. அந்த லிங்கத்தின் பூஜாபாகத்தை 3 பாகங்களாகச் செய்து, அதன் மேல் பாகத்தில் முகம் இருக்கவேண்டும். அந்த மேல் பாகத்தை 10 பாகங்களாகச் செய்து, அவைகளில், 5 பாகம் சிரஸ்ஸாகவும், 4 பாகம் முகமாகவும், 1 பாகம் கழுத்தாகவும்

கர்ணௌ த்³வௌ ஓஷ்ட²பாக்ஷம் (த்³வ்யக்ஷிணௌ) ச ஸர்வலக்ஷண
ஸம்யுதம் ॥ ௱௪௨ ॥

லிங்கா³காரமத⁴ஸ்தஸ்ய தஸ்யாயாமம் பீடி²கான்விதம் ।
ஸமம் வா ஶேஷபா⁴க³ம் து அத²வா பூஜாம்ஶகே ॥ ௱௪௩ ॥

ஶ்ரீவாயிகம் த்ரிஸ்ரக்ஷ்ராம்ஶமேகாத³ஶம் முக²ாயதம் ॥
கேஶாந்தோந்நதிஹாரம் ஸ்யாத் யுக³மாம்ஶமேவாயிகம் ॥ ௱௪௪ ॥

நேத்ராந்தஞ்ச புடாந்தஞ்ச ஹந்வந்தம் வ்யதிரேகத: ।
ப்ரத்யேகம் த்ரியவாதி⁴க்யமேவாஸ்யாத்³ யவமாம்ஶகம் ॥ ௱௪௫ ॥

ஹந்வாதி⁴ கண்டோ²த்ஸேத⁴ந்து அத⁴ஸ்தாத்³ வேதா³ம்ஶமாயதம் ।
யத்³வா கேஶாந்தோத்ஸேத⁴ம் தத் கண்டோ²த்ஸேத⁴ம் ப்ரகல்பயேத் ॥ ௱௪௬ ॥

இருக்கவேண்டும். அதில், 2 காதுகள், 2 கண்கள், உதடு, இவைகள் ஸகலலக்ஷணங்களுடன் அமைந்திருக்கவேண்டும். அதன் கீழ்பாகமானது, லிங்காகாரமாக இருக்கவேண்டும். அதில் ஸரிபாதியளவு பீடத்துடனிருக்கவேண்டும். (இங்கு ஸரிபாதி என்பதற்கு பூஜாம்சத்தில் ஸரிபாதி என்றுவது, பூஜாம்சம் நீங்கிய பாகத்தில் ஸரிபாதி என்றுவது பொருள் கொள்ளவேண்டும். எனவே, லிங்கத்தின் முழு அளவில், ஸரிபாதியளவு கொண்டது பூஜாம்சம் என்பது கருத்து.)

அல்லது லிங்கத்தின் உயரத்தை 124 பாகங்களாகச் செய்துகொண்டு, அவைகளில் 11 பாகங்களை முகமா்நமாகக் கொள்ளவேண்டும். அது, கழுத்திற்குமேலே 11 பாகங்களாகும். முகத்திற்கு மேலே கேசாந்தபாகமான உச்சியி னுயரம் 3 அல்லது 4 பாகங்களாகும்.

முகத்தில், நேத்திராந்தம், புடாந்தம், ஹந்வந்தம், இம் மூன்று பாகங்களும், முறையே, 3 யவை அதிக அளவு உடையவைகளாம். 4 யவை அதிகமாகவும் இருக்கலாம்.

முகவாய்க்கட்டைக்குக் கீழே, கழுத்தின் உயரம், 4 பாகங்களாம். கண்டமானது, கேசாந்தத்தின் அளவே

ஶேஷம் லிங்காக்ருதி ப்ரோக்தம் குர்யாத் ஸலக்ஷணாந்விதம் |
அதவா சைகவக்த்ரம் வா அதவா த்விபாஹு சதுர்பாஹு வா ||

ஸ்தநஸூத்ராவஶிஷ்டாத்து பிம்பலக்ஷணஸம்யுதம் |
ஹிக்காஸூத்ராவஶிஷ்டாச்ச ஶேஷம் லிங்காக்ருதிர்பவேத் ||

ஏவம் லிங்கமிதம் ப்ரோக்தம் ந்ருபாணாம் வ்ருத்திகாரகம் |
விஷ்கம்பமஷ்டதா க்ருத்வா மூலமத்யாக்ரதஃ க்ரமாத் || [illegible] ||

பாகஹீநந்து ஸங்க்ருஷ்ய ஸூத்ரமுக்தக்ரமாத்ததா |

இருப்பதும் கூடும். இவைகள் நீங்கிய மேலுள்ள பாகங்கள் லிங்காகாரமாக இருக்கவேண்டும். இவைகள் லக்ஷணத்துடன் அமையப் பெற்றிருக்கவேண்டும்.

(முகலிங்கமானது, முன் பக்கத்தில் மட்டிலும்) ஒரே முகம் உடையதாக இருக்கலாம். அல்லது, (4 பக்கங்களிலும்) 4 முகங்கள் உடையதாகவும் இருக்கலாம். 2 கைகள், அல்லது 4 கைகள் உடையதாக இருக்கலாம். (கைகள் அமையப்பெற்றிருக்க வேண்டுமானல், அதில்) ஸ்தந மட்டத்திற்கு மேலே அமைந்திருக்கவேண்டும். அதவும் லக்ஷணத்துடன் அமைந்திருக்கவேண்டும். முகம் மட்டிலுமுள்ளதானல், அது, கழுத்திற்குமேலே அமைந்திருக்க வேண்டும். இது நீங்கிய பாகமானது லிங்கவடிவமாக இருக்கவேண்டும். இவ்விதம் முகலிங்க லக்ஷணம் கூறப்பட்டுள்ளது. இத்தகைய முகலிங்கமானது, அரசர்களுக்கு அபிவிருத்தியை யுண்டுபண்ணும்.

லிங்கத்தின் விஷ்கம்பத்தை (சுத்தளவை) 8 பாகங்களாகக் கணக்கிட்டுக்கொள்ளவேண்டும். லிங்கத்தின் மூலம் (அடி) மத்தியம் (நடு) அக்ரம் (நுனி) இவைகள் முறையே ஒன்றுக்கொன்று 1 பாகம் குறைவாக அமையப் பெற்றிருக்கவேண்டும். அதாவது, மூலம் 8 பாகம்,

ஹ்ராஸயேச்ச ப்ரவஹாமாத்ரம் ப்ரஸ்தூலம் ச ப்ரகீர்த்திதம் ॥
ஸ்தூலமூலமிதி க்யாதம் ருஷிபி: பூஜிதம் ஸதா ।
த்ர்யஸ்ரம் பஞ்சகோணம் ச ஷட்ஸப்தாஷ்டபுஜாஸ்ரகம் ॥
த்வாதசாஸ்ரம் ச நவாஸ்ரம் சான்யாஸ்ரம் ச மநோஹரம் ।
பலகாதர்சகாகாரமேகரேகமரேககம் ॥ ௩௰௨ ॥

ஶிரோவர்த்தனஹீனம் ச மானோன்மானவிவர்ஜிதம் ।
தி(வ்)வ்யம் ஸ்வாயம்புவம் சேதி க்யாதம் தைவை:
ஸுபூஜிதம் ॥ ௩௰௩ ॥

பாணேந பூஜிதார்த்தம் ச பாணலிங்கம் ப்ரகீர்த்திதம் ।

மத்தியம் 7 பாகம், அக்ரம் 6 பாக சுத்தளவுள்ளதாக அடி பருத்து நுனி சிறுத்து அமைந்திருக்கவேண்டும். இதற்கு ஸ்தூலமூல லிங்கம் (அடி பருத்த லிங்கம்) என்று பெயர்.

இவ்விதம் இதேயளவில் நுனி—நடு—அடி இவைகள் முறையே 8-ல் 1 பாகம் சுத்தளவு குறைவாக இருந்தால் அது சிரஸ்தூலம் (நுனி பருத்தது) என்று கூறப்படும். இவ்விரண்டு லிங்கங்களும், ஆர்ஷலிங்கமெனப்படும். இது மஹர்ஷிகளால் பூஜிக்கப்பட்டதாகும்; சிறந்ததுமாம்.

முக்கோண வடிவமானது 5 கோணமானது, 6 கோண மானது, 7 கோணமானது, 12 கோணமானது, 10 கோண மானது, 9 கோணமானது, வேறு விதமான கோணங் களுடன் மனோஹரமாக இருப்பது, பலகைபோலும் கண் ணாடிபோலும் இருப்பது, ஒரு ரேகையுள்ளது, ரேகையே இல்லாதது, சிரோவர்த்தநம் இல்லாதது, மாநம், உன்மாநம் முதலியவைகள் பொருத்தமாக இல்லாமலிருப்பது, ஆகிய லக்ஷணங்களுள்ள லிங்கமானது, ஸேவிக்கத்தக்கதென்றும் (திவ்ய லிங்கமென்றும்) ஸ்வாயம்புவ லிங்கமென்றும் கூறப் படுகிறது. இது, தேவர்களால் பூஜிக்கப்பட்ட லிங்கமாகும்.

ஸ்தூலம் ஸூக்ஷ்மம் ஶிரோமூலம் க்ரமேண பரிகல்பயேத் ||

உன்னதம் து ஶிர: ப்ரோக்தம் * மதுவர்ணே ந துஷ்டிதம் |
பாணேன து ப்ரவேஶாம்ஶம் ஸார்வதேஶிகலிங்கவத் ||

லோஹஜம் ரத்னஜம் சைவ ஸார்வதேஶிகலிங்கவத் |
லிங்கபேதாஸ் ஸமாக்யாதாஶ் ஶிரோவர்தனம் ஶ்ருணு ||

லிங்கமூர்த்தாதி கேஶாந்தம் ஶிரோவர்தனம் பவேத் |

பாணாஸுரனால் பூஜிக்கப்பட்ட ஸ்வரூபத்தையுடைய லிங்கத்திற்கு பாணலிங்கம் என்று பெயர். அது ஸ்தூலமென்றும், ஸூக்ஷ்மமென்றும், சிரோலிங்கமென்றும், மூலலிங்கமென்றும் முறையே கூறப்படுகிறது. பாணலிங்கத்தில் உயர்ந்திருப்பது (எடுப்பாக உயர்ந்து காணப்படும் பக்கமானது) சிரஸ்ஸாகும். மது வர்ணமாக (தேன் நிறமாக) இருப்பது ஸந்தோஷத்தைக் கொடுக்காது. (அதைத் தொட்டால் சீதலமாக இருக்கும் என்பது மற்றொரு பிரதியிலுள்ள பாடம்.) இந்த பாணலிங்கத்தை ஆஸநத்தில் வைக்கும்பொழுது, அது ஸார்வதேசிக லிங்கத்திற்குக் கூறியுள்ளபடி ஆஸநத்திலமர்ந்திருக்க வேண்டும்.

லோஹத்தினால் செய்யப்பட்ட லிங்கம், ரத்நத்தினால் செய்யப்பட்ட லிங்கம் ஆகிய இவைகளையும், ஸார்வதேசிக லிங்கத்திற்குக் கூறப்பட்ட விதியின்படியே, ஆஸநத்தில் வைக்கவேண்டும். இவ்விதமாக லிங்க பேதங்கள் கூறப்பட்டன. இனி சிரோவர்தநத்தைக் கூறுகிறேன். கேட்பாயாக.

லிங்கத்தின் தலையிலிருந்து உச்சிவரையில் சிரோவர்தநம் செய்யவேண்டும். (சிரோவர்தநம் லிங்கத்தின் உச்சியின் அமைப்பு) ஆகையால், லிங்கத்தின் உயரத்தைக் கணக்

---

* ஸ்பர்ஶே ஸுகஶீதலம் இதி பாடாந்தரம் |

𑌤𑌸𑍍𑌯𑌾𑌸𑍍 𑌶𑌿𑌰𑍋𑌮𑌧𑍍𑌯𑍇 𑌭𑌾𑌗𑌾𑌤𑍍 𑌶𑌿𑌰𑌸𑍋 𑌵𑌰𑍍𑌤𑌨𑌂 𑌵𑌿𑌦𑍁𑌃 ॥

𑌛𑌤𑍍𑌰𑌾𑌕𑌾𑌰𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌕𑍁𑌕𑍍𑌕𑍁𑌟𑌾𑌣𑍍𑌡𑌂 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌕𑌮𑍍 ।
𑌤𑍍𑌰𑍃𑌤𑍀𑌯𑌂 𑌤𑍍𑌰𑌿𑌪𑍁𑌷𑌾(𑌤𑍍𑌰𑌪𑍁𑌷𑌾)𑌕𑌾𑌰𑌮𑌰𑍍𑌧𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌂
𑌤𑍁𑌰𑍀𑌯𑌕𑌮𑍍 ॥ ௫௮ ॥

𑌯𑌸𑍍𑌯 𑌲𑌿𑌙𑍍𑌗𑌸𑍍𑌯 𑌵𑌿𑌷𑍍𑌕𑌮𑍍𑌭𑌮𑌷𑍍𑌟𑌧𑌾𑌵𑌿𑌭𑌜𑍇𑌦𑍍 𑌬𑍁𑌧𑌃 ।
𑌏𑌕𑌾𑌰𑍍𑌧𑌭𑌾𑌗𑌂 𑌶𑌿𑌖𑌾𑌗𑍍𑌰𑌂 𑌵𑍍𑌯𑌾𑌸𑌂 𑌛𑌤𑍍𑌰𑌶𑍀𑌰𑍍𑌷𑌕𑌮𑍍 ॥

𑌦𑍍𑌵𑌾𑌤𑍍𑌰𑌿𑌂𑌶𑌦𑍍𑌵𑌿𑌭𑌜𑍇𑌤𑍍𑌤𑌾𑌰𑌂 𑌪𑌞𑍍𑌚𑌾𑌂𑌶𑌮𑍁𑌚𑍍𑌛𑍍𑌰𑌿𑌤𑌮𑍍 ।
𑌛𑌤𑍍𑌰𑌾𑌭𑌂 𑌤𑌦𑍍 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌵𑌰𑍍𑌤𑌨𑌂 𑌤𑌤𑍍
𑌤𑍍𑌰𑍃𑌤𑍀𑌯𑌕𑌮𑍍 ॥ ௫௯ ॥

கிட்டு, அதற்கேற்றபடி சிரோவர்தநத்தை அமைக்க வேண்டும். அந்த சிரோவர்தநமானது, குடைபோலிருப்பது (தாழங்குடையின் மேல் பாகத்தைப்போலிருப்பது.) 1, கோழி முட்டைபோல இருப்பது 2, திரிபுரம்போல் *(மூதுக்கன் காயைப்போல்) இருப்பது 3, அரைவட்டமான சந்திரபிம்பத்தைப்போல இருப்பது 4, என்று 4 விதமாகும்.

புத்திமானாக இருப்பவன், லிங்கத்தின் சுத்தளவை 8 பாகமாகச் செய்துகொண்டு, அவைகளில், ½ பங்கை உச்சியிலிருந்து அளந்துகொண்டு, அதை, குடையின் உச்சியைப்போல, சிரோவர்தநத்தை அமைக்கவேண்டும். இது ஒருவிதமாகும்.

லிங்கத்தின் அகலத்தைக் கணக்கிட்டு, அதை 32 பாகங்களாகச்செய்து, அவைகளில், 5 பாகத்தை, உச்சியிலிருந்து, குடையின் உச்சியைப்போல, சிரோவர்த்தநத்தை

---

* த்ரபுஷம் என்பதற்கு மூதுக்கன்காய் என்றும், மெதுக்கன்காய் என்றும், சுக்காங்காய் என்றும் பெயர். சிலர் வெள்ளரிக்காய் என்றும், சிலர் கக்கரிக்காய் என்றும் கூறுகின்றனர்,

𑌅𑌥𑌵𑌾𑌂𑌶𑌂 𑌤𑍁 𑌨𑌵𑌾𑌂𑌶𑌂 𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌚𑍍𑌛𑌤𑍍𑌰𑌾𑌭𑌂 𑌤𑍁
𑌅𑌥 𑌵𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ।
𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌨𑍃𑌪𑌾𑌣𑌾𑌂 𑌚 𑌛𑌤𑍍𑌰𑌾𑌭𑌂 𑌸𑌰𑍍𑌵𑌕𑌾𑌮𑌦𑌮𑍍 ॥

𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌮𑌪𑌿 𑌲𑌿𑌂𑌗𑌾𑌨𑌾𑌂 𑌛𑌤𑍍𑌰𑌾𑌭𑌂 𑌤𑍁 𑌪𑍍𑌰𑌶𑌸𑍍𑌤𑌕𑌮𑍍 ।
𑌵𑍍𑌯𑌾𑌸𑍇 𑌦𑍍𑌵𑌾𑌤𑍍𑌰𑌿𑌂𑌶𑌦𑌂𑌶𑍇 𑌤𑍁 𑌚𑌤𑍁𑌰𑍍𑌦𑌶𑌕𑌯𑍁𑌗𑌾𑌂𑌶𑌕𑍈𑌃 ॥

𑌸𑌪𑍍𑌤𑌾𑌂𑌶𑌾𑌂𑌶𑍈𑌕𑍈𑌕𑌵𑍃𑌦𑍍𑌧𑍍𑌯𑌾 𑌕𑍁𑌕𑍍𑌕𑍁𑌟𑌾𑌣𑍍𑌡𑌂 𑌅𑌥 𑌵𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ।
𑌵𑌰𑍍𑌧𑌮𑌾𑌨𑌂 𑌚 𑌲𑌿𑌂𑌗𑌂 𑌤𑍁 𑌪𑍍𑌰𑌶𑌸𑍍𑌤𑌂 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌾𑌹𑍍𑌵𑌕𑍇 ॥

யமைக்கவேண்டும். இது இரண்டாவது விதமாகும்.

இவ்விதமே, லிங்கத்தின் அகலத்தில் 32-ல் 7 பாகங்களால் சிரோவர்த்தநத்தையமைப்பது மூன்றுவது விதமாகும்.

இவ்விதமே, லிங்கத்தின் அகலத்தில் 32-ல் 9 பாகங்களாலே சத்ராகாரமாக சிரோவர்தநத்தை அமைப்பது நான்காவது விதமாகும்.

இவ்விதம் சத்ராகாரமான சிரோவர்தநம் நான்கு விதமாகும்.

சத்ராகாரமான சிரோவர்தநமானது, பிராம்ஹணர்களுக்கும், க்ஷத்ரியர்களுக்கும், ஸர்வாபீஷ்டங்களையும் கொடுக்கக்கூடியதாகும். லிங்கங்கள் எல்லாவற்றிலும் சத்ராகாரமான சிரோவர்தநமுடையது சிறந்ததாகும்.

லிங்கத்தின் அகலத்தை 32 பாகங்களாகச் செய்து, அவைகளில், முறையே, 14 – 15 – 16 – 17 பாகங்களாலே குக்குடாண்டம்போன்ற சிரோவர்த்தநமானது, 4 விதமாகும். (குக்குடம் — கோழி. அண்டம் — முட்டை.) இந்த 4 வித சிரோவர்தநங்களுக்கும், குக்குடாண்டாகார சிரோவர்த்தநம் என்று பெயர். இவ்வித சிரோவர்த்தநமுடைய லிங்கமானது, வர்தமாந லிங்கமாக இருக்க

𑌦𑍍𑌵𑌾𑌤𑍍𑌰𑌿𑌂𑌶𑌾𑌂𑌶𑍇 𑌶𑌿𑌰(𑌤𑍍𑌰𑌪𑍁)𑌸𑍍𑌤𑌾𑌰𑍇 𑌦𑌶𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌂𑌶𑌕𑍈𑌸𑍍𑌤𑌥𑌾 ।
𑌭𑌾𑌨𑍁𑌤𑍍𑌰𑌯𑍋𑌦𑌶𑌾𑌂𑌶𑍈𑌸𑍍𑌤𑍁 𑌤𑍍𑌰𑌪𑍁𑌸𑌾𑌭𑌂
(𑌤𑍍𑌰𑌪𑍁𑌷𑌾𑌭𑌂) 𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌧𑌮𑍍 ॥ ௨௪௬ ॥

𑌶𑌿𑌵𑌾𑌧𑌿𑌕𑌂 𑌚 𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌤𑍁 𑌶𑌸𑍍𑌤𑌂 𑌵𑍈𑌶𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌕𑌂 𑌮𑌤𑌮𑍍 ।
𑌤𑍍𑌰𑌿𑌂𑌶𑌤𑍍𑌤𑍍𑌰𑌿𑌂𑌶𑍇 𑌶𑌿𑌰𑌸𑍍𑌤𑌾𑌰𑍇 𑌦𑍍𑌵𑌾𑌵𑌿𑌂𑌶𑌤𑍍𑌯𑍇𑌕𑌵𑌿𑌂𑌶𑌤𑌿𑌃 ॥

(𑌦𑍍𑌵𑌾𑌤𑍍𑌰𑌿𑌂𑌶𑌦𑌂𑌶𑍇 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑍇 𑌦𑍍𑌵𑌾𑌵𑌿𑌂𑌶𑌤𑍍𑌯𑍇𑌕 𑌵𑌿𑌂𑌶𑌕𑍈𑌃 ।)
𑌵𑌿𑌂𑌶𑌤𑍍𑌯𑍇𑌕𑍋𑌨𑌵𑌿𑌂𑌶𑌾𑌂𑌶𑍈𑌰𑌰𑍍𑌧𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌧𑌮𑍍 ।
𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿𑌕𑌾𑌖𑍍𑌯𑌂 𑌚 𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌤𑍁 𑌪𑍍𑌰𑌶𑌸𑍍𑌤𑌂 𑌶𑍂𑌦𑍍𑌰𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌦𑌮𑍍 ॥

𑌸𑌾𑌰𑍍𑌵𑌦𑍇𑌶𑌿𑌕𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌨𑌾𑌮𑌨𑍍𑌯𑍇𑌷𑌾𑌂 𑌚 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃 ।
(𑌸)𑌤𑍍𑌰𑌾𑌪𑌿𑌶𑍀𑌰𑍍𑌷𑌕𑌾𑌰𑍇(𑌤𑌂) 𑌤𑍁 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌾𑌤𑌿-
𑌵𑌸𑌾𑌨𑌯𑍇𑌤𑍍 ॥ ௨௪௭ ॥

வேண்டும். அது க்ஷத்திரியர்களுக்கு உகந்ததாகும். சிறந்ததுமாம்.

லிங்கத்தின் அகலத்தை 32 பாகங்களாகச் செய்து, அவைகளில் முறையே, 10 – 11 – 12 – 13 பாகங்களாலே', த்ரிபுரத்தைப்போன்ற (முதுக்கன்காய் போன்ற) சிரோ வர்தநமானது 4 விதமாகும். இது சிவாதிக லிங்கத்தில் அமைக்கப்பட வேண்டும். இத்தகைய லிங்கமானது வைசியர்களுக்கு ஏற்றதாம். சிறந்ததுமாம்.

லிங்கத்தின் அகலத்தை 32 பாகங்களாகச் செய்து, அவைகளில் முறையே, 10 – 11 – 12 – 13 பாகங்களால், அரைவட்ட சந்திரனைப் போன்ற சிரோவர்த்தநத்தை யமைத்தால், அர்தசந்திராபமானது 4 விதமாகும். இவ்விதமாக சிரோவர்த்தநமுடையது, ஸ்வஸ்திக லிங்கமாகும். இது, சூத்திரர்களுக்கு அபிவிருத்தியையளிக்கும்.

ஸார்வதேசிக லிங்கங்களுக்கும், மற்ற லிங்கங்களுக்கும்,

𑌦𑍈𑌵𑌿𑌕𑌾𑌰𑍍𑌷(𑌕)𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌨𑌾𑌂 𑌤𑍇𑌷𑍍𑌵(𑌸𑍍𑌯𑌾𑌦)𑌷𑍍𑌟𑌾𑌶𑍍𑌰(𑌕)
𑌶𑍀𑌰𑍍𑌷𑌕𑌮𑍍 ।

𑌶𑌿𑌰𑍋𑌵𑌰𑍍𑌤𑌨𑍋𑌤𑍍𑌸𑍇𑌧𑍍𑌯(𑌯𑌂) 𑌤𑍍𑌰𑌿𑌭𑌾𑌗𑌮𑌿𑌭𑌾𑌷𑌿𑌤𑍇 ॥*

𑌯𑌤𑍍𑌤𑍁𑌙𑍍𑌗𑌾𑌂𑌶𑌂(𑌤𑍍𑌰𑍍𑌯𑌂𑌶𑌂)𑌤𑌲𑍍𑌲𑌿𑌙𑍍𑌗𑌮𑌾𑌤𑍍𑌰(𑌤𑍍𑌰𑍇) 𑌶𑌿𑌰𑍋
𑌵𑌰𑍍𑌤𑌨𑌾𑌧𑌿𑌕𑌮𑍍 ।

𑌉𑌷𑍍𑌣𑍀𑌷𑌮𑌾𑌨𑌮𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌂 𑌶𑌿𑌰𑍋𑌮𑌾𑌨𑌂 𑌤𑌦𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥ ௧௬௯ ॥

𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌨𑌿(𑌰𑍍𑌧𑍍𑌨𑌿)𑌮𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑌦𑌨𑍍𑌤𑌂 𑌵𑌰𑍍𑌤𑌿𑌤𑍋 𑌵𑌰𑍍𑌤𑌯𑍇𑌤𑍍 𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍 ।
𑌯𑌾𑌵𑌲𑍍𑌲𑌂𑌬𑌨𑌸𑍀𑌮𑌾𑌨𑍍𑌤𑌂 𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌨𑌿(𑌰𑍍𑌧𑍍𑌨𑌿)𑌮𑌧𑍍𑌯𑌾𑌤𑍍 𑌕𑍍𑌰𑌮𑌾𑌨𑍍𑌤𑌕𑌮𑍍 ॥

விசேஷித்து, கர்த்தாவின் ஜாதிக்குத் தக்கபடி, சீர்ஷாகாரத்தை, சத்திராதி ஆகாரமாகக் கல்பித்துக்கொள்ள வேண்டும். தைவிகலிங்கம், ஆர்ஷலிங்கங்களில், சீர்ஷாகாரமானது, எவ்விதமாகவும் இருக்கலாம். (167½)

சிரோவர்த்தநத்துடன் கூடிய லிங்கத்தின் உயரத்தை 3 பாகங்களாகப் பிரித்துக்கொண்டால், அதில் சிரோவர்த்தநத்தின் உயரத்தை யுக்தியினாலே கண்டுகொள்ளலாம். இவ்விதமாக உஷ்ணீஷமானம் கூறப்பட்டது. அதுவே சிரோமானமென்று கூறப்படுகிறது. (169)

உச்சியிலிருந்து அதன் முனை (சிரோவர்த்தநத்தின் எல்லை) வரையில், சுற்றிலுமிருக்கும்படி அதை அமைக்க வேண்டும். அது எதுவரையில் குறைவாக இருக்க

---

* 𑌇𑌤𑌃 𑌪𑌰𑌂 𑌕𑍍𑌵𑌚𑌿𑌤𑍍 𑌕𑍋𑌶𑍇 𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀𑌮𑌹𑌾𑌲𑌯𑌪𑍁𑌸𑍍𑌤𑌕𑌾𑌲𑌯𑌕𑍋𑌶𑌤𑌃 5½ 𑌶𑍍𑌲𑍋𑌕𑌾𑌤𑍍𑌮𑌕𑍋 𑌭𑌾𑌗 𑌅𑌤𑍍𑌰 𑌸𑌮𑍍𑌮𑌤𑍋 𑌭𑌵𑌤𑌿 । 𑌕𑍍𑌵𑌚𑌿𑌤𑍍 𑌕𑍋𑌶𑍇 𑌅𑌨𑍍𑌤𑍍𑌯𑌪𑌟𑌲𑌸𑍍𑌯 𑌮𑌧𑍍𑌯𑌤𑌃 143–185 𑌶𑍍𑌲𑍋𑌕𑌾𑌤𑍍𑌮𑌕𑌃 𑌪𑌾𑌠𑌃, 𑌪𑌾𑌦𑌪𑍁𑌰𑌾𑌣𑍀 𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌤𑍍𑌮𑌕𑍇 59 𑌪𑌟𑌲𑍇 143–185 𑌶𑍍𑌲𑍋𑌕𑌾𑌤𑍍𑌮𑌕𑍋 𑌭𑌾𑌗𑌃 𑌭𑌵𑌤𑌿 । 𑌅𑌤𑍋𑌽𑌤𑍍𑌰 𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀𑌮𑌹𑌾𑌲𑌯𑌪𑍁𑌸𑍍𑌤𑌕𑌾𑌲𑌯𑌕𑍋𑌶𑌤𑌃 𑌪𑌾𑌠 𑌏𑌵 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌿𑌤𑍋 𑌭𑌵𑌤𑍀𑌤𑌿 𑌜𑍍𑌞𑌾𑌤𑌵𑍍𑌯𑌮𑍍 ।

𑌛𑌤𑍍𑌰𑌶𑍀𑌰𑍍𑌷𑌂 𑌤𑍁 𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌨𑌾𑌂 𑌮𑍂(𑌮𑍇)𑌰𑍍𑌧𑍍𑌨𑌾𑌦𑌾𑌰𑌭𑍍𑌯 𑌨𑌤𑌂
𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌤𑍍𑌰𑌿𑌚𑌕𑍍𑌰𑌸𑌮𑌾𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌤𑍁 𑌤𑍍𑌰𑌿𑌶𑍀𑌰𑍍𑌷𑌕𑌮𑍍 ॥

(𑌅𑌚𑌕𑍍𑌰𑌹𑍀𑌨𑌂 𑌤𑍁 𑌯𑌚𑍍𑌛𑍀𑌰𑍍𑌷𑌂) 𑌏𑌵(𑌂) 𑌕𑍇𑌵𑌲𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ।
𑌶𑍀𑌰𑍍𑌷𑌂 (𑌤𑍁) 𑌲𑌿𑌙𑍍𑌗𑌮𑌾𑌨𑍋𑌕𑍍𑌤𑌂 𑌉𑌕𑍍𑌤𑌾𑌨𑍍𑌯𑌥𑌾 𑌨 𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍 ॥

𑌉𑌕𑍍𑌤𑌾𑌨𑍍𑌯𑌥𑌾 𑌕𑍃𑌤𑌂 𑌚𑍇𑌤𑍍𑌤𑍁 𑌰𑌾𑌜𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌭𑌯𑌾𑌵𑌹𑌮𑍍 ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑍇𑌨 𑌉𑌕𑍍𑌤𑌮𑌾𑌰𑍍𑌗𑍇𑌣 𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍 ।
𑌲𑌿𑌙𑍍𑌗𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌂 𑌪𑍀𑌠𑌿(𑌪𑍀𑌠)𑌕𑌾𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌶𑍃𑌣𑍁
(𑌶𑍃𑌣𑍁) ॥ ௱௭௧ ॥

𑌇𑌤𑌿 𑌕𑌾𑌶𑍍𑌯𑌪𑍀𑌯𑍇 𑌶𑌿𑌲𑍍𑌪𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌲𑌿𑌙𑍍𑌗𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌨𑌾𑌮
𑌏𑌕𑍋𑌨𑌪𑌞𑍍𑌚𑌾𑌶𑌤𑍍𑌤𑌮𑌃 𑌪𑌟𑌲𑌃 ॥

வேண்டுமோ, அதுவரையில், உச்சியிலிருந்து, முறையே, தணிந்து இருக்கவேண்டும். (சிரோவர்த்தநமானது, உச்சியிலிருந்து அதற்குரிய எல்லைவரையில், சுற்றிலும், முறையே செறிந்திருக்கவேண்டும் என்று பொருள்) (170)

சத்ரசீர்ஷமானது, (குடை வடிவமான சிரோவர்த்தநமானது) லிங்கத்தின் உச்சியிலிருந்து (முறையே) செறிந்திருப்பதாகும்.

திரிசீர்ஷகத்தை, 3 சக்கிரங்களுடன் கூடியதாக கல்பிக்கவேண்டும். (171)

இவ்விதமாக (சக்கிரமில்லாமல் அமைக்கப்பட்டது.) ஸாதாரண சீர்ஷமாகும்.

லிங்கத்தின் சீர்ஷம், (சிரோவர்த்தநம்) அகலம், உயரம் இவைகளை சொல்லியிருக்கிறபடியே செய்ய வேண்டும். சொல்லாதவிதமாகச் செய்யக்கூடாது. அப்படிச் சொல்லாத விதமாகச் செய்தால், ராஜாவுக்கும்,

॥ *अथ पञ्चाशत्तमः पटलः ॥

पीठलक्षणम् ॥

अथातो नागरादीनां लिङ्गानां पीठलक्षणम् ।
श्रृणु त्वं वक्ष्यते विप्र सकलानां तथोच्यते ॥

शैलजे शिलया पीठं सुधयेष्टकयापि वा ।

ராஜ்யத்திற்கும் பயமுண்டாகும். ஆகையால், ஸகல முயற்சியுடனும், கூறியுள்ள முறையுடனேயே செய்ய வேண்டும். இவ்விதமாக லிங்க லக்ஷணம் கூறப்பட்டது. இனி பீட லக்ஷணத்தைக் கூறுகிறேன். கேட்பாயாக.

காசியபசில்ப சாஸ்திரத்தில் லிங்கலக்ஷணமென்னும்
நாற்பத்தொன்பதாவது படலம் முற்றும்.

ஐம்பதாவது படலம்.

பீட லக்ஷணம்.

லிங்க லக்ஷணத்தைக்கூறிய பிறகு, முதலில், நாகராதி லிங்கங்களின் பீடலக்ஷணத்தைக் கூறுகிறேன். ஸகல மூர்த்திகளின் பீடலக்ஷணத்தை பிறகு அறிந்து கொள்ளலாம். (1)

சிலையாலான லிங்கத்திற்கு, பீடமானது, சிலையாலேயே இருக்கவேண்டும். ஸுதை, செங்கல் இவைகளாலேயும் இருக்கலாம்.

---

*अत्रेदं बोध्यम्—
लिङ्गलक्षणानन्तरं यावत् सर्वावसानं प्रतिमालक्षणं, सप्तचत्वारिंशाद्यष्टचत्वारिंशत्तमपटलयोः (?), एकोनपञ्चाशत्तम-पञ्चाशत्तमपटलयोश्च विषयाणां क्रमभेदो दृश्यते । अथापि सप्तचत्वारिंशादष्टचत्वारिंशत्तमः क्रमः संमतो भाति । अतः स एव क्रमः स्वीकृत इति ।

𑌦𑌾𑌰𑍁𑌜𑍇 𑌦𑌾𑌰𑍁𑌜𑌂 𑌵𑌾𑌪𑌿 𑌐𑌷𑍍𑌟𑌕𑌾𑌜𑌮𑍇𑌵 𑌵𑌾 ॥ ௨ ॥

𑌰𑌤𑍍𑌨𑌜𑍇 𑌰𑌤𑍍𑌨𑌜𑌂 𑌪𑍀𑌠𑌂 𑌲𑍋𑌹𑌜𑍇 𑌲𑍋𑌹𑌜𑌂 𑌤𑍁 𑌵𑌾 ।
𑌲𑌿𑌙𑍍𑌗𑍋𑌦𑌯𑌸𑌮𑌂 𑌪𑍀𑌠𑌂 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑍇𑌣𑍋𑌤𑍍𑌤𑌮𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥

𑌪𑍂𑌜𑌾𑌂𑌶𑍋𑌦𑌯𑌸𑌮𑌂 𑌪𑍀𑌠𑌤𑌾𑌰𑌂 𑌕𑌨𑍀𑌯𑌸𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇
𑌤𑌯𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑍇𑌽𑌷𑍍𑌟𑌭𑌾𑌗𑍇 𑌤𑍁 𑌉𑌤𑍍𑌤𑌮𑌾𑌦𑌿𑌤𑍍𑌰𑌯𑌂 𑌤𑍍𑌰𑌯𑌮𑍍 ॥ ௪ ॥

𑌪𑍀𑌠𑌵𑍍𑌯𑌾𑌸𑌂 𑌤𑍍𑌰𑌿𑌭𑌾𑌗𑌾𑌂𑌶 𑌦𑍍𑌵𑌿𑌭𑌾𑌗𑌂 𑌚𑍋𑌤𑍍𑌤𑌮𑍋𑌤𑍍𑌸𑍇𑌧𑌮𑍍 ।
𑌵𑍍𑌯𑌾𑌸𑌾𑌰𑍍𑌧𑌂 𑌕𑌨𑍍𑌯𑌸𑍋𑌤𑍍𑌸𑍇𑌧𑌂 𑌤𑌯𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑍇𑌽𑌷𑍍𑌟𑌭𑌾𑌜𑌿𑌤𑍇 ॥ ௫ ॥

𑌨𑌵𑌧𑌾 𑌪𑍀𑌠𑌤𑍁𑌙𑍍𑌗𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑍁𑌤𑍍𑌤𑌮𑌾𑌦𑌿𑌤𑍍𑌰𑌯𑌂 𑌤𑍍𑌰𑌯𑌮𑍍 ।
𑌕𑍍𑌰𑌮𑍇𑌣 𑌕𑌥𑌿𑌤𑌂 𑌵𑌿𑌪𑍍𑌰 𑌨𑌾𑌗𑌰𑌂 𑌚𑍈𑌵𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥ ௬ ॥

மரத்தால் செயயப்பட்ட லிங்கத்திற்கு, பீடமானது, மரத்தினுலாவது, செங்கல்லாலாவது இருக்கவேண்டும்.

ரத்நநிர்மிதமான லிங்கத்திற்கு, பீடமானது, ரத்நத்தினுலாவது, லோஹத்தினுலாவது இருக்கவேண்டும்.

லிங்கத்தின் பீடமானது, லிங்கத்தின் உயரத்திற்கு ஸமமான அகலமுடையதாக இருப்பது உத்தமமாகும்.

பீடத்தின் அகலமானது, பூஜாம்சத்தின் உயரத்திற்கு ஸமமாக இருப்பது அதமமாகும். இவ்விரண்டின் மத்திய அளவை 8 பாகங்களாகச் செய்ய, பீடவிஸ்தாரம் 9 விதமாகும். இவைகளில் 3, 3 அளவுகள், முறையே, உத்தம-மத்தியம- அதம அளவுகளாகும். (4)

பீடத்தின் அகலத்தில் 3ல் 2 பங்கு உயரமுடையது உத்தம பீடமாகும். ½ பங்கு உயரமுடையது அதமமாகும். இவைகளின் மத்திய அளவை 8 பாகங்களாகச் செய்ய பீடத்தின் உயரம் 9 விதமாகும். இவைகளில் முறையே, 3; 3 உத்தம-மத்தியம- அதம-உயரங்களாகும். இவ்விதமாக முறையே, நாகரலிங்கத்தின் பீடலக்ஷணம் கூறப்பட்டிருக்கிறது. (6)

𑌲𑌿𑌂𑌗𑍋𑌚𑍍𑌛𑍍𑌰𑌾𑌯𑌸𑌮𑌂 𑌵𑍍𑌯𑌾𑌸𑌂 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌂 𑌤𑌨𑍍𑌨𑌵𑌭𑌾𑌜𑌿𑌤𑍇 ।
𑌨𑌵𑌧𑌾 𑌵𑌿𑌸𑍍𑌤𑍃𑌤𑌂 𑌵𑍍𑌯𑌾𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌷𑍍𑌣𑍍𑌵𑌂𑌶𑌯𑍋𑌰𑌪𑌿 ॥ ௭ ॥

𑌉𑌦𑌯𑌂 𑌨𑌵𑌧𑌾(𑌵𑌸𑍁𑌧𑌾)𑌭𑌜𑍍𑌯 𑌦𑍍𑌵𑌿𑌭𑌾𑌗𑌂 𑌵𑌾 𑌤𑌲𑌾𑌂𑌶𑌕𑌮𑍍 ।
𑌏𑌕𑌾𑌂𑌶𑌂 𑌵𑌾 𑌵𑌿𑌶𑍇𑌷𑍇𑌣 𑌭𑍂𑌮𑍍𑌯𑌂𑌶𑍇 𑌤𑍁
𑌨𑌿𑌵𑍇𑌶𑌯𑍇𑌤𑍍 ॥ ௮ ॥

𑌶𑍇𑌷𑌂 𑌪𑍀𑌠𑍋𑌦𑌯𑌂 𑌵𑍍𑌯𑌾𑌤𑌮𑍇𑌵𑌂 𑌦𑍍𑌰𑌾𑌵𑌿𑌡𑌲𑌿𑌙𑍍𑌗𑌕𑍇 ।
𑌪𑍂𑌜𑌾𑌂𑌶𑌸𑍍𑌯 𑌪𑌰𑍀𑌣𑌾𑌹𑌸𑌮𑌂 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌂 𑌵𑌿𑌶𑌾𑌲𑌕𑌮𑍍 ॥ ௯ ॥

𑌪𑌰𑍀𑌣𑌾𑌹𑍇 𑌕𑌲𑌾𑌂𑌶𑍇 𑌤𑍁 𑌭𑌾𑌨𑍍𑌵𑌂𑌶𑌮𑌧𑌮𑌂 𑌤𑌥𑌾 ।
𑌤𑌯𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑍇𑌷𑍍𑌟𑌭𑌾𑌗𑍇 𑌤𑍁 𑌨𑌵𑌧𑌾 𑌪𑍀𑌠𑌵𑌿𑌸𑍍𑌤𑍃𑌤𑌮𑍍 ॥ ௰ ॥

லிங்கத்தின் உயரத்திற்கு ஸமமான, உத்தம அகலத்தை (லிங்கோதயத்தாலே கூறப்பட்ட, சிரேஷ்ட மான 3 வித அகலத்தை) 9 (8) பாகமாகச் செய்ய, அகலம் 9 விதமாகும், இவ்விதமான விபாகங்களை, பிரம்ஹாம்சம், விஷ்ணு அம்சம் இவைகளில் கொள்ளவேண்டும். (7)

உயரத்தை 9 பங்குகளாகச் செய்ய, அவைகளில் 2 பங்குகள், தலாம்சமாகும். விசேஷித்து 1 பங்கையும் தலாம்சமாகக் கொள்ளலாம். இந்த தலாம்சத்தை பூமியினுள் வைக்கவேண்டும். இந்த பாகம் நீங்கலாக பாக்கியுள்ள பாகங்கள், பீடத்தின் உயரமாகும். இவ்வித மாக, திராவிட லிங்கத்தின் பீடத்தை கல்பிக்கவேண்டும்.

பீடத்தின் விசாலமானது, பூஜாம்சத்தின் சுத்தளவுக்கு ஸமமாக இருப்பது, உத்தமமாகும். அந்த அளவில் 16-ல் 12 பங்கு இருப்பது, அதமமாகும். இவைகளின் மத்திய அளவை 8 பங்காகச் செய்ய, பீட விஸ்தாரம் 9 விதமாகும்.

விஷ்ணுபாகஸமோத்ஸேதம் து பீடம் கந்யஸமுச்யதே ।
ஸபாதம் ச்ரேஷ்டமானம் து தயோர்மத்யேஷ்டபாஜிதே ॥

நவதா பிண்டிகாதுங்கம் வேஸரம் லிங்கவதாசரேத் ।
அதவா லிங்கவிஷ்கம்பம் த்ரிகுணம் பீடவிஸ்த்ருதம் ॥ ௧௨ ॥

அதவா லிங்கவிஷ்கம்பம் சதுரச்ரீக்ருதே ஸதி ।
தத்கர்ணத்விகுணம் பாதம் (பாத) ஸார்தம்
த்ரிகுணமேவ வா ॥ ௧௩ ॥

த்ரிகுணம் வா விசாலம் து பீடானாம் து விசேஷத: ।
கர்பகேஹே(ஹ)விசாலார்தம் அதவா பாதமேவ வா ॥

பீடவ்யாஸம் ஸமாக்யாதம் விஷ்ணுபாகஸமோன்னதம் ।
ஸாமான்யம் நாகராதீனாம் லிங்கானாம் பிண்டிகாவிதெள ॥ ௧௫ ॥

பீடமானது, விஷ்ணுபாகத்திற்கு ஸமமான உயரமுடையதாக இருந்தால், அது, அதமமாகும். கால்பங்கு கூடுதலாக ($1\frac{1}{4}$ பங்காக) இருந்தால், அது, சிரேஷ்டமாகும். இவைகளின் மத்திய அளவை 8 பங்குகளாகச் செய்ய பிண்டிகையின் (பீடத்தின்) உயரம், 9 விதமாகும். இவ்விதமாக, வேஸரலிங்கத்தைக் கல்பிக்கவேண்டும். ($11\frac{1}{2}$)

அல்லது, லிங்கத்தின் சுற்றளவு 3 கொண்டது, பீடத்தின் அகலமாகும். அல்லது, லிங்கத்தின் சுற்றளவை, சதுரச்ரமாகச்செய்துகொண்டு, அதன் கர்ணத்தின் 2பங்கு ($2\frac{1}{4}$ பங்கு) $2\frac{1}{2}$ பங்கு அல்லது 3 பங்குகொண்டது, விசேஷித்து பீடத்தின் விஸ்தாரமாகும். ($13\frac{1}{2}$)

கர்பகிருஹத்தில் (விஸ்தாரத்தில்) ஸரிபாதி, அல்லது 4ல் 1 பாகம், பீடத்தின் விஸ்தாரமாகக் கூறப்பட்டிருக்கிறது. (பீடத்தின்) உயரமானது விஷ்ணுபாகத்திற்கு ஸமானமாகும். இவ்விதமாக நாகராதி லிங்கங்களின்

உபாநபாஹ்யே(ஹ்யம்) விஸ்தாரம் ஸர்வேஷாம் து விசேஷத: |
தத்ஷடநவதசபாகோநம் வா ப்ரவிஸ்தரகம் || ௧௬ ||

விஷ்ணுபாகஸமோத்துங்கம் ஸபாதம் ஸார்த்தமேவ வா |
ஸாமாந்யம் லிங்கமாநாம் து நாகராதிஷு ஸர்வத: ||

லிங்கமாநாம் ஸகலாநாம் து ஸாமாந்யம் பீடலக்ஷணம் |
*ஸ்வாயம்பா(வா) நவாம்சே து வேதாம்சம் கல்ப்ய ஸோச்சயம் || ௧௭ ||

மத்யாம்சம் ஜ்யேஷ்டகம் து தயோர்மத்யேஷ்டபாஜிதே |
நவதா பீடதுங்கம் து தஸ்ய விஸ்தாரமுச்யதே || ௧௮ ||

பீடதுங்கஸமம் வ்யாஸயுக்தம் பீடமுச்யதே |

பிண்டிகா லக்ஷணமானது, ஸாதாரணமாக (பொதுவாக)க் கூறப்பட்டிருக்கிறது. (15)

உபாநத்தின் வெளிப்பக்கத்தின் விஸ்தாரமானது, விசேஷித்து எல்லாவற்றிற்கும் (பீடங்களுக்கும்) அதன் அகலத்தில் 8, 9 அல்லது 10ல் 1 பாகம் குறைவாக இருக்க வேண்டும். அதன் உயரமானது, விஷ்ணு பாகத்திற்கு ஸமமான உயரமுடையதாகவோ, கால்பங்கு அதிக உயரமுடையதாகவோ, அல்லது ½ பங்கு அதிக உயரமுடையதாகவோ இருப்பதாகும். இவ்விதமாக நாகராதி லிங்கங்களின் உயரமானது, பொதுவாகக் கூறப்பட்டுள்ளது.

லிங்கமானது ஸ்வதாமயமான பீடத்துடனிருந்தால், அதன் உயரத்தில் (அல்லது லிங்கத்தின் உயரத்தில்) 9ல் 5 பங்கு, அல்லது 4 பங்கு பீடத்தின் உயரமாகும். இவ்விரண்டு அளவுகளின் மத்திய அளவை 8 பங்குகளாகச் செய்ய அதன் உயரம் 9 விதமாகும். இனி அதன் அகலத்தைக் கூறுகிறேன்.

---

*க்ரோடிகாயாம் இதி ஸூக்ஷ்மாக்ஷரைர்லிகிதபாட: | லிங்கமோடிகாயாம் இதி பாடே து ஸாதுரிதி பாதி |

த்விகுணம் சோத்தமம் வ்யாஸம் தயோர்மத்யே(அ)ஷ்டபாஜிதே ||

நவதா விஸ்த்ருதம் பீடம் ஸகலானாம் விசேஷத: |
பிண்டிகா கோமுகோபேதா லிங்கானாம் து விதீயதே ||

கோமுகரஹிதம் பீடம் ஸகலானாம் விசேஷத: |
ஸமாச்ரம் ஸமவ்ருத்தம் (வ்ருத்தம்) வா லிங்கானாம் து
விதீயதே ||

ஸாமான்யாச்ரவ்ருத்தானாம் ப்ரதிமானாம் ஸமம் து வா |
[அதசதுரச்ராவ்ருத்தா அ ப்ரதிமானாம் விதீயதே |]
பத்மபீடம் பத்ரபீடம் வேதிகாபரிமண்டலம் || உ௨ ||

பீடம் அதசதுர்விதம் வ்யாஸம் ... ப்ரோக்தம் |

பீடத்தின் உயரத்திற்கு ஸமமாக அகலமிருப்பது அதமபீடமாகும். 2 பங்கு அகலமிருப்பது உத்தம பீடமாகும். இந்த 2 அளவுகளின் மத்திய பாகத்தை 8 பங்குகளாகச் செய்ய பீட விஸ்தாரமானது 9 விதமாகும். இது விசேஷித்து ஸகல லிங்கங்களுக்கும் கூறிய பீடமான மாகும். (20½)

லிங்கங்களின் பீடமானது கோமுகத்துடனிருக்க வேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. ஸகல மூர்த்திகளின் பீடமானது, விசேஷித்து கோமுகமில்லாதது, என்று கூறப்பட்டிருக்கிறது. (21½)

லிங்கங்களின் பீடமானது, ஸமாச்ர(ஸம சதுரம்)மாக வாவது, ஸமவிருத்தமாகவாவது இருக்கவேண்டும் என்று விதிக்கப்பட்டிருக்கிறது. பிரதிமைகளின் பீடமானது, சதுரச்ரமாகவும், விருத்தமாக (வட்டவடிவமாக) இல்லாமலும் இருக்கவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது.

பத்மபீடம், பத்ரபீடம், வேதிகை, பரிமண்டலம்,

[illegible] ॥ ௨௪ ॥

[illegible]

[illegible] ॥ ௨௫ ॥

[illegible] ।

[illegible] ॥ ௨௬ ॥

[illegible] ।

[illegible] ॥ ௨௭ ॥

என்று பீடம் நான்கு (4)விதமாகும். இவைகள் பீடத்தின் அலங்கார பேதங்களாம்.

பீடத்தின் உயரத்தை 16 பாகங்களாகச் செய்து கொள்ளவேண்டும். அந்த 16 பாகங்களில் உபாநம் 2 பாகம் அதப்பத்மம் (கீழேயுள்ள பத்மம்) 5 பாகம், கண்டம் 2 பாகம், ஊர்த்வபத்மம் 4 பாகம், பட்டிகை 2 பாகம், க்ருதவாரி 1 பாகம். ஆக 2+5+2+4+2+1=16 பாகங்கள் கொண்டது பீடமாகும். பத்மமானது 16 தளங்களுடைய தாக இருக்கவேண்டும். (25½)

பத்மதளங்களுக்கு மத்தியில் சிறிய தளங்கள் அமைந் திருக்கவேண்டும். தளங்களின் அடிகளும் நுனிகளும் ஒன்றோடொன்று பின்னிக்கொண்டிருக்கவேண்டும். தளங் கள் 1 அங்குலம் (1 அங்குல அகலமுடையவைகளாக) இருக்கவேண்டும். அல்லது, லிங்கதேஹாங்குலத்தினலே, ½ அங்குலம் அகலமுள்ள தளாக்ரங்களையுடையதாக இருக்கவேண்டும். (அல்லது தளங்களின் நுனியின்

வீடதாரஸ்ரீஹாஸீகம் மொர உவம் நீவ-உ-அவெதெ ।
தநீவ-லெஸாஸஹஸம் தஸ்ய உவிஜதாரஉ-ஹாஹர்தஷ ॥ உ அ ॥

உவிஜதாரஸ்ரீஹாஸிகம் தடம்யிவஜூம் ஹவெக ।
உவிஜாடாமும் ஸ்ரஸாக ஸீணம் தத்ஷ-நவஸ்யாவஸாஷஸம்
(ஊநகெ) ॥ உக ॥

ஸ்ரீவாடம் வா தமயம் வா ஸ்ரீஹாஸிகாம்ஸெவ வா ।
வ்யாவெஸ்ரீஹாமஹாமம் த ஜுஉாமஸிஸ்பாஜகஷ ॥ ௩0 ॥

வஷிகொய(காய-)ஸம் நிஷ்ம் தஹொஷெவ(வெஷ்வ அ)
ஸம் த வா ।
உவாதாஷ்யம்மவெஸம் அ நீவும் ஸஊடிய-உாநயெக ॥ ௩க ॥

ஸயிஷாநாமவலெஸம் நீவும் வா வமிகஜுயெக ।
வஷவீடம் ஸஉாவ்யாதம் ஹஉ ஸ்ரீஷிஹொஅவெதெ ॥ ௩உ ॥

உயரமானது, லிங்கதேஹாங்குலத்தாலே ½ அங்குலமிருக்க வேண்டும். (27)

डमरुं सव्य(वाम)हस्ते तु हनुपीठासनान्तकम् ।
*पाशं शूलस्य हस्तं वा शिखिपिञ्छसमन्वितम् ॥

कङ्कालं च तदग्रे तु बलं तु हृदयोपरि ।
बाहुपीठासनान्ते तत्कन्याः स्युः समं भवेत् ॥

இந்த மூர்த்தியின் இடது கால் ஸுஸ்திதமாகவும் வலது கால் நடையைக்காட்டும் பாவனையாகவுமிருக்க வேண்டும் கால்களில் பாதுகைகளிருக்கவேண்டும். வலது கால் குஞ்சிதமாக இருக்கவேண்டும். (8½)

... ...
... ...
... ...
... ... (10½)

இடது (வலது) கையில் பாத்திரமிருக்க வேண்டும். அது நாபி மட்டமாக இருக்கவேண்டும். பூர்வஹஸ்தத்தில் உடுக்கையானது முகவாய்க்கட்டையளவு இருக்க வேண்டும். இடது கைகளில் சூலமும் மயில் தோகையுமிருக்கவேண்டும். அதன் முன்பக்கத்தில் கங்காளமானது

---

*पाशे हस्ते तु शूलं च शिखिपिञ्छयोपरि ।
इति पाठे साध्यमिति सन्ति ।

ணகக்ஷித்ர அதாஸூத்ரம் நதாபிகஸ்யாதி(நதம் தாபிக)
செவ வா ।
ஸ்ரோத்ரகே வக்ஷஸூத்ரம் வா ஸம்மதா நவயோ ஸ்யுணா ॥

முகாட வாமபார்ஶ்வே ச நேத்ராந்தே ச புடாந்தகே ।
ஹ்ருதயாச்ச ததா ஹிக்காயாம் ஹ்ருதயே காக(மாத்ர)
கோஷ்டகே ॥ ௧௫ ॥

நாபேஸ்து தக்ஷிணே ஸூத்ரம் பக்ஷாம்மாத்ரவிதி(மே)
த்ரயே ।
யோநிதேவ்ரம் ததா ஸூத்ரம்(த்ராக)வா தக்ஷிணே பாத
மாத்ரகே ॥ ௧௬ ॥

வாமபாதஸ்திதம் வாபி பாதாங்குஷ்டயோரபி ।
ஸ்தாநகம் ஸவ்யவாமாஸ்திதம் மத்யேஷு(து)விநியதே ॥

(சரீரத்தின் எலும்புக்கூடு) மார்பில் கட்டப்பட்டிருக்க வேண்டும். ஸ்வாமியின் தோள் மட்டமாக கன்னிகைகள் இருக்கவேண்டும். அவர்களின் உயரமானது 1, 2, 3, அல்லது 4 அங்குலம் குறைவாகவோ கூடுதலாகவோ இருப்பதுமாகும். ஸ்தாநகபிம்பத்திற்கு பூர்வஸூத்திரத்தையும் நதமானத்தையும் கூறுகிறேன். கேட்பாயாக.

நெற்றியின் இடது பக்கம், நேத்திராந்தம், புடாந்தம், முகவாய்க்கட்டையின் இடதுபக்கம், கழுத்து, ஹிருதயத்திலிருந்து 2 அங்குலத்திலுள்ள இடம், நாபியின் வலது பக்கத்தில் 2 அல்லது 3 அங்குலத்திலுள்ள இடம், யோநி (மத்தியத்திற்கு) வலது பக்கத்தில் 4 அங்குலத்திலுள்ள இடம், இடது காலை ஒட்டிய இடம் அல்லது இருபாதங்களின் மத்தியம், இந்த இடங்களில் ஸூத்திரம் விழ வேண்டும். இது ஸ்தாநகமூர்த்திக்குக் கூறப்பட்டதாகும். இனி கமநமூர்த்தியின் ஸூத்திரத்தைக் கூறுகிறேன். (17)

𑌕𑌮𑌨𑌸𑍍𑌯 𑌤𑍁 𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌤𑍁 𑌲𑌲𑌾𑌟𑍇 𑌵𑌾𑌮𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌕𑍇 ।
𑌵𑌾𑌮𑌾𑌂𑌘𑍍𑌰𑌿𑌮𑌣𑌿𑌬𑌨𑍍𑌧𑌮𑌧𑍍𑌯𑍇 𑌤𑍁 𑌵𑌿𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌕𑍇 (𑌵𑌾𑌮𑌵𑍇𑌧𑌤𑌃)
𑌸𑍂𑌤𑍍𑌰𑌕𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ ௧௮ ॥

𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌲𑌲𑌾𑌟𑌮𑌧𑍍𑌯𑍇 𑌚 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌤𑍁 𑌦𑍍𑌵𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌂
([illegible]) ।
𑌵𑌾𑌮𑍇 𑌚 𑌨𑌾𑌸𑌾𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌤𑍁 𑌹𑌿𑌕𑍍𑌕𑌾𑌹𑍃𑌦𑌯 𑌮𑌧𑍍𑌯𑌮𑍇 ॥௧௯॥

𑌨𑌾𑌭𑌿𑌵𑌾𑌮𑍇 𑌦𑍍𑌵𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 ([illegible]) 𑌯𑍋𑌨𑌿𑌵𑌾𑌮𑍇
𑌚𑌤𑍁𑌰𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 ([illegible]) ।
𑌵𑌾𑌮𑌾𑌂𑌘𑍍𑌰𑌿𑌮𑌣𑌿𑌬𑌨𑍍𑌧𑌾𑌨𑍍𑌤𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌕𑌮𑌨𑌸𑍍𑌯 𑌤𑍁 𑌸𑍂𑌤𑍍𑌰𑌕𑌮𑍍 ॥

𑌆𑌭𑌙𑍍𑌗𑌸𑍍𑌯𑍋𑌕𑍍𑌤𑌮𑌾𑌨𑍇𑌨 𑌨𑌤𑌮𑌾𑌨𑌂 𑌚 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌮𑌾𑌨𑍍 ।
𑌕𑌮𑌨𑍇 𑌸𑍂𑌤𑍍𑌰𑌕𑌂 𑌚𑌾𑌪𑌿 𑌹𑌸𑍍𑌤𑌨𑍀𑌪𑍍𑌰𑌮𑍇𑌵 𑌵𑌾 ॥௨௧॥

𑌸𑌵𑍍𑌯𑌹𑌸𑍍𑌤𑍇 𑌤𑍃𑌣𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌦𑍍𑌦𑌕𑍍𑌷
𑌸𑌂𑌯𑍁𑌤𑌮𑍍 ।

கமநமூர்த்திக்கு பூர்வ ஸூத்திரமானது, நெற்றியின் இடது பக்கத்திலும் இடது கால் மணிக்கட்டின் நடுவிலும் விழவேண்டும்.

அந்த ஸூத்திரமானது, லலாட மத்தியின் வலது பக்கத்தில் 2 அங்குலத்திலும், இடது நாஸியின் துவாரத்தின் பக்கத்திலும், கண்ட மத்தியிலும், ஹிருதயத்திலும், நாபியின் இடது பக்கத்தில் 2 அங்குலத்திலும், யோநியின் இடது பக்கத்தில் 4 அங்குலத்திலும், இடது கால் மணிக்கட்டைத் தொட்டும் இருக்கவேண்டும். (20)

அறிவில் சிறந்தவனே! ஆபங்கத்திற்குக் கூறியிருப்பதையே நதமானமாகக் கொள்ளவேண்டும்.

கமநமூர்த்தியின் ஸூத்திரத்தையும் ஹஸ்தநீப்ர (ஸூத்திரத்திலிருந்து கை வரையில் ஒதுக்கம்)த்தையும் கூறுகிறேன். (21)

வலது கையில் புல்லை கல்பிக்கவேண்டும். (வலதுகையில்

த்வாவிம்ஶத்யம் மாத்ரம் வாபி த்ரயோவிம்ஶதிரேவ வா ||௨௩||

மணிபந்தோ மத்யாந்தம் து (மத்யம்) பாஹ்யம் சைவ
ததைவ ஹி |

நீவ்ரம் ததா த்ரிவிதம் சைவ வாமத்ரே வாமகேபி வா ||

ஷோடஶஸப்ததஶம் அஷ்டாதஶாங்குலம் வாபி (அஷ்டாதஶமாத்ரம்
வா) நீவ்ரகம் |

நாபிஸீமாவஸானே து கூர்பராந்தம் (ரம்) ததஸ்ய
நீவ்ரகம் ||௨௪||

*பஞ்சமாத்ரமதோவாபி த்ரிஷோடஶமேவ வா |

தக்ஷிணம் (ணே) த்ருணகம் ஹஸ்தே யோநிஸீமாவஸானகே
||௨௫||

ஏகத்வித்ரிசதுர்மாத்ரம் ம்ருகமஸ்யஸ்ய (ம்ருகமாஸ்யே து)
வக்த்ரம் லம்பயேத் |

புல்லிருக்கவேண்டும்.) அதற்கும் மத்திய ஸூத்திரத்திற்கும் மத்தியிலுள்ள ஒதுக்கமானது, 22, அல்லது 23 அங்குலமாகும். மணிக்கட்டின் ஒதுக்கமானது, மணிக்கட்டு வரையில், மணிக்கட்டின் மத்தியம் வரையில், மணிக்கட்டின் வெளிப்பக்கம் வரையில் என்று மூன்றுவிதமாகும். பாத்திரத்துடன்கூடிய இடது கை மணிக்கட்டின் ஒதுக்கமும் இதுபோலவே மூன்றுவிதமாகும். அவைகள் 16 அங்குலம் 17 அங்குலம், 18 அங்குலங்களாகும். நாபி மட்டத்தில் முழங்கை வரையில் ஒதுக்கம் 15 அல்லது 16 அங்குலமாகும். வலது கையிலிருக்கும் புல்லானது யோனி மட்டமாக இருக்கவேண்டும். (25)

(கையிலிருக்கும் புல்லானது) மானின் வாயில் 1, 2, 3, அல்லது 4 அங்குலம் தொங்கிக்கொண்டிருக்கவேண்டும்.

---

*பஞ்சதஶாங்குலம் வாபி ஷோடஶாங்குலமேவாபி வா |

உக்தி வாமேந ஸவிதவ்யக்தி ஹாஸி |

ஜ்ஞானமுத்ராம் ஸிம்ஹகர்ணம் யதா ஸௌந்தர்யதோ ந்யஸேத் ||

வாமஹஸ்தே பரே சூலம் பாஹுசீர்ஷஸமம் நயேத் |
பூர்வஸூத்ரம் (த்ராத்) ததைவ ஸ்யாத் சிகிபந்த
(சிகிபிஞ்ச)ஸ்ய நீவ்ரகம் || உ௭ ||

அங்குலாசிம்சதிராத்ரம் வா சூலம் தச்ச வஸ்த்ரதோ
(கக்ஷாதோ)பரி |
சூலாக்ரம் ரௌத்ரகோரவீர்யா (விஸ்த்ருதம்) கங்காளம்
பந்தயேத் ஸுதீ: || உ௮ ||

தக்ஷிணே வரஹஸ்தேந(து) டமரும் கடகேபி வா |
தத்விஸ்தாரம் (ஞ்ச) விஸ்தாரம் நவாங்குலமிதி ஸ்ம்ருதம் வா
(கல்பிதே) || உ௯ ||

மத்யம் (த்யம்) க்ஷீணம் சதுர்மாத்ரம் பார்ச்வயோ: பத்மாகாரம்
விகாஸிதே |
வலயத்ரயஸம்யுக்தம் தஜநீ டமருகோ பவேத் || ௩௰ ||

அந்தக்கையில் ஞானமுத்திரையையாவது ஸிம்ஹகர்ணத்தையாவது அழகாக இருக்கும்படி அமைக்கவேண்டும். இடது பக்கத்தில் பரஹஸ்தத்தில் இருக்கும் சூலமானது தோள்பட்டை மட்டமாக இருக்கவேண்டும். பூர்வஸூத்திரத்திலிருந்து, சிகாபந்தத்தின் (மயில் தோகையின்) ஒதுக்கம் 40 அங்குலமாகும்(?) சூலமானது (சூலத்தின் தலையானது) தோள்பட்டைக்குமேலே இருப்பதாகும். சூலாக்ரமானது, பயங்கரமாக இருப்பதாகும் கங்காளத்தைக் கட்டியிருக்கவேண்டும். (28)

கடகஹஸ்தமான வலது பரஹஸ்தத்தில் உடுக்கை இருக்கவேண்டும். அதன் விஸ்தாரமானது 9 அங்குலமாகும். அதன் நடுவானது சிறுத்து 4 அங்குலமிருக்க வேண்டும். அதன் இரண்டு பக்கமும் தாமரைப்பூவைப் போன்று இருக்கவேண்டும். அதில் 3 வளையங்களிருக்க வேண்டும்.

தர்ஜந்யாம் ருஜு ஹஸ்த்யைவம் ஹி ஹஸ்தாவலம்பகம் |
மணிபந்தஸ்ய நீவ்ரம் து பூர்வஸூத்ரம்(த்ராத்)
ததைவ ச || ௩௧ ||

அக்ஷாரிம்ஶதிகாத்ரம் ஸ்யாதம்ஶாயிகயோரபி வா |
வாமே கபாலமாத்ரம் வா ஹாரம்ஶம் ஸமநீவ்ரகம் ||௩௨||

கனம் சைகாங்குலம் ம்ருஷ்டம் வாபி ஸர்வத்ர
நிர்வ்ரணம் பவேத் |
மகரகுண்டலம் வாபி ஶங்கபத்ரம் து வாமகே || ௩௩ ||

ஜடாமண்டலமேவோக்தம் விகீர்ணம் கேஶமண்டலம் |
தக்ஷிணே து ஶஶாங்கம் வா வாமே ச(வஹஸ்தோவா)
ஏகேபி வா || ௩௪ ||

சுட்டுவிரலானது நேராக (உயர்ந்து) இருக்கவேண்டும். அந்த விரலானது உடுக்கையைப்பிடித்திருக்கவேண்டும். உடுக்கையானது, முகவாய்க்கட்டை மட்டமாக இருக்க வேண்டும். (30½)

பூர்வஸூத்ரத்திலிருந்து (பரஹஸ்தம்) மணிக்கட்டு வரையில் ஓதுக்கம் 40 அல்லது 41 அங்குலமாகும். இடது கையிலிருக்கும் கபாலத்தின் ஓதுக்கம் 18 (12 + 6 = 18) அங்குலமாகும். (32)

(கபாலத்தின்) கனமானது 1 அங்குலமாகும். அது வடுவில்லாமல் (சிலிம்பு, பிசிறு, விறிசல் முதலியன) இல்லாமலிருக்கவேண்டும்.

இடது பக்கத்தில் (காதில்) மகரகுண்டலம் அல்லது சங்கபத்திரமிருக்கவேண்டும். (சிகையானது) ஜடாமண்டலமாகவாவது, விரிந்து மண்டலாகாரமாகவாவது இருக்கவேண்டும். (33½)

(சிரஸ்ஸில்) வலது பக்கத்தில் (இளம்பிறைச் சந்திரனை) அணிந்தும் இடது பக்கத்தில் நாகாபரணத்தை

கபாலஸ்ரக்(மாலா)ட்யம் ச யுன்மத்தகுஸுமாந்வி
(தம்) ।
பகபக்ஷம் ததைவார்க்க குஸுமம் தூர்வாங்குரைஃ ॥
பிகாகேகிஜ(பிககேகாதி)பந்தம் ச கடௌ க்ஷுத்ராக்ஷ
மாலிகா ।
நாககங்கணம் ப்ரகோஷ்டேஷு நாநாரத்நவிபூஷிதம் ॥ ௩௭ ॥
வாமஸ்கந்தே கங்காளநாளாஸ்தி(கம் நாள) வாமஸ்கந்தோபரி
ஸ்திதம்(ஸ்திதம்) ।
அநேகபூதைஸ்த்ரீபிஃ ஸேவிதம் வந்திதம் ச தைஃ ॥
புரோபாகே ஸ்திதம் பூதம் ஹேமபாத்ரம்(ஸ்வர்ண)ஸம்ஸ்திதம் ।
ரக்தாக்த(ரக்த)ஸஹம் தத் தத்பாத்ரே ரக்தயாதாரயா
(ரக்தயாரா)பா ॥ ௩௮ ॥
கிம்சித்ஸவ்யகராங்குல்யா ஸம்யுக்தம்(க்தா) தத்பாத்ரஸம்
(ஸஃ) ।

யணிந்துமிருக்கவேண்டும். மண்டையோடுகளை மாலையாக அணிந்திருக்கவேண்டும். ஊமத்தம்பூவை தரித்திருக்க வேண்டும். கொக்கிறகு, எருக்கம்பூ, தூர்வை (அருகம்புல்) இவைகளை தரித்திருக்கவேண்டும். (36)

குயில், மயில்களைக் கட்டிப்போட்டிருக்கவேண்டும். இடுப்பில் சிறிய மணிமாலையையணிந்திருக்கவேண்டும். மணிக்கட்டுகளில் நாக கங்கணமணிந்திருக்கவேண்டும். நாநாவிதமான ரத்னங்களையுமணிந்திருக்கவேண்டும். (37)

கங்காளமானது இடது தோளில் வைக்கப்பட்டிருப்பதாகும். கங்காளமூர்த்தியானது அநேக பூதங்களாலும் ஸ்திரீகளாலும் ஸேவிக்கப்பட்டும் வணங்கப்பட்டுமிருப்பதாகும். ஸ்வாமியின் முன் பக்கத்தில் பூதமானது ஸுவர்ணமயமான (தங்கத்திலான) பலி பாத்திரத்துடனிருப்பதாகும். அந்த பாத்திரத்தில் ரக்த தாரையுடனும்

𑌸𑌂𑌹𑍃𑌤𑌾 𑌉𑌦𑌰𑍇𑌵𑍋𑌪𑌵𑍇𑌤𑌾 𑌜𑌾𑌯𑌾(𑌵𑍃𑌤𑌾)𑌸𑍍𑌵𑌦𑍍𑌤𑍍𑌰𑍇
(𑌕𑍍𑌰𑍇𑌤𑍍𑌰𑍇)𑌕𑌪𑌾𑌃 || ௩௯ ||

𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌕𑌟𑌿𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌤𑍁 𑌕𑍍𑌷𑍁𑌰𑌿𑌕𑌾(𑌛𑍁𑌰𑌿𑌕𑌾)𑌮𑍇𑌖𑌲𑌾(𑌮𑍇𑌖𑌲𑍇)𑌵
𑌬𑌨𑍍𑌧𑌯𑍇𑌤𑍍 |

𑌕𑍍𑌷𑍁𑌰𑌿(𑌛𑍁𑌰𑌿)𑌕𑌾 𑌹𑍇𑌮𑌸𑌂𑌕𑌾𑌶𑌵 (𑌕𑍋𑌶𑍇𑌨) 𑌬𑌦𑍍𑌧
𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌾 || ௪௦ ||

𑌉𑌭𑌯𑍋𑌃 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌯𑍋𑌰𑍍𑌹𑌸𑍍𑌤𑍇 𑌨𑌾𑌨𑌾𑌨𑌾𑌗𑍈
𑌵𑌿𑌭𑍂𑌷𑌿𑌤𑌮𑍍 |

𑌋𑌷𑌿𑌭𑌿𑌰𑍍𑌦𑍇𑌵𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑍈𑌃 𑌸𑌿𑌦𑍍𑌧𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌧𑌰𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 || ௪௧ ||

𑌹𑍃𑌦𑌯𑌂 𑌕(𑌪𑍇𑌷)𑌵𑌿𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑌂(𑌹𑌸𑍍𑌤𑍈𑌃) 𑌸𑌂𑌭𑍍𑌰𑌾𑌨𑍍𑌤
𑌉𑌦𑌸𑍍𑌤𑌾𑌂𑌜𑌲𑌿𑌤𑍈𑌃 |

𑌸𑌵𑌿𑌤𑌾(𑌵𑌿)𑌨𑌿𑌤𑍍𑌯(𑌂)𑌸𑌤𑌾𑌨𑌨𑍍𑌦𑌂 𑌸𑍇𑌵𑌿𑌤𑌾𑌨𑍍𑌤𑍃𑌭𑌿𑌃(𑌤𑌂 𑌤𑍁)
𑌸𑌂𑌪𑍂𑌜𑌿𑌤𑌮𑍍 || ௪௨ ||

𑌵𑍀𑌰𑌂 𑌸𑌂𑌹𑌾𑌰𑌭𑍈𑌰𑌵𑌾𑌯𑍇𑌤𑍍 𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌕𑌾 𑌧𑌯𑍇𑌤𑍍 𑌜𑌯𑌮𑍍 |

(மாமிஸத்துடனும்) அன்னமிடப்பட்டிருப்பதாகும். மனக்கிளர்ச்சியடைந்த ஸ்திரீகள் பலர் நழுவிய வஸ்திரத்தின வழியே சிறிது காணப்படும் யோநியையுடையவர்களாக சூழ்ந்திருப்பவர்களாவாகள். (39)

வலது இடுப்பில் கத்தியானது சொருகப்பட்டிருக்க வேண்டும். அந்தக்கத்தியானது, தங்கப்பிடியுடனிருக்க வேண்டும். இருபக்கங்களிலும் கைகளில் நாநாவிதமான நாகங்களை அணிந்திருக்கவேண்டும். என்றும் அழிவில்லாமல் என்றும் ஆனந்தமயமான இந்த கங்காளமூர்த்தியானது, நிலையற்ற மனதையுடைய, இருடிகள், தேவர்கள், ஸித்தர்கள் வித்தியாதரர்கள், இவர்களினாலே மார்பினிடையே கை கூப்பிக்கொண்டு ஸேவிக்கப்பட்டும் பூஜிக்கப்பட்டுமிருப்பவராவார், (42)

புஷ்பவ்ருஷ்டிக்ருதோ தேவா: ருஷய: ஸ்தோத்ரபாடகா: ||

ருக்யஜுஸ்ஸாமாதர்வாண: ஸ்துதிம் குர்வந்தி ஸர்வதா |
அபரே சர்மஜம் ச காம்ஸ்யம் ச வீணாம் ஸௌஷிரமேவ ச ||

ஶங்கப்ரப்ருதிஸம்யுக்தம் பஞ்சவாத்யா ஸமாசரேத் |
தும்புருர் நாரதஶ்சைவ ஜயவாத்யம் ஸலக்ஷணம் ||

சந்த்ராதித்யாதி தீப்த்ர ஜா(ஸீராஜ) ச்சாமராதிவ்யயோஷித: |
ஸர்வலோகோபகாராய இந்த்ரஸவனாதிஷு || ௪௬ ||

பாஸம்(ஸஹம்) தாமரதாதேவாயோ தேவா(திவி ஸ்த்ரீ
ஸஸாதகம் |
பஞ்சதாலேந ஹஸ்தம் ச மாநோந்மாநப்ரமாணகம் ||

வாயுதேவன் வீதிகளை சுத்தம் செய்பவனாவான். பர்ஜந்யன் ஜலம் தெளிப்பவனாவான். தேவர்கள் புஷ்ப வர்ஷம் (பூமாரி) செய்பவர்களாவார்கள். இருடிகள் ஸ்தோத்திரபாடம் செய்பவர்களாவார்கள். ருக்கு, யஜுஸ் ஸாம, அதர்வணம் ஆகியவேதங்கள் துதி செய்பவைகளாம். மற்றும் பலர், சர்மவாத்யம், (தோலால் அமைக்கப்பட்ட வாத்யம்) காம்ஸ்யவாத்யம் (வெங்கலத்தினாலான ஜாலரா போன்ற வாத்யம்) வீணை, ஸுஷிர வாத்யம், (புல்லாங்குழல் முதலிய வாத்தியம்) சங்க வாத்யம், ஆகிய பஞ்ச (ஐந்து விதமான) வாத்தியங்களையும் வாசிப்பவர்களாவார்கள். தும்புருவும் நாரதரும் லக்ஷணத்துடன் ஜயவாத்தியத்தை வாசிப்பவர்களாவார்கள். திவ்ய ஸ்திரீகள் (அப்ஸரஸ்ஸுக்கள்) சந்திரன் சூரியன் இவர்களின் ஒளியுடன் பிரகாசிக்கும் சாமரங்களை வீசுகின்றவர்களாவார்கள். உலகத்தின் நன்மைக்கான இந்திரஸவநம் முதலிய விசேஷங்களில் சூழ்மி யிருக்கும் தேவர்கள் (இந்த மூர்த்தியின்) யோகிமட்டமாக இருப்பவர்களாவார்கள்.

பூதத்தின் உயரம் முதலிய பிரமாணங்களை பஞ்ச தாளத்தினாலே கொள்ளவேண்டும். (47)

ஹஸ்தைஸ்து ஶிரஸ: பாத்ரம் த்ருத்வா பூதஸ்ஸ ஏவ வா ।
பாத்ரவிஸ்தாரகம் சாபி விம்ஶதிமாத்ரம் து வா ॥௪௮॥

நிம்நம் தஶாம்ஶமாத்ரம் ஸ்யாத் கநம் ஏகாம்ஶமாத்ரம் பவேத் ।
ஹிரண்யம்(ஹரிணம்) தக்ஷிணே பார்ஶ்வே ஜாநுஸீமாவஸாநகம் ॥

ஶீர்ஷாதி பாதபர்யந்தம் ஹரிணீ தந்மதேவ து ।
தேவஸ்ய பூர்வஸூத்ரே து லம்பநாந்தம் ததைவ ஹி ॥

நாஸாக்ரே லம்பயேத் ஸூத்ரம் பாதாங்குஷ்டஸ்ய மூலகே ।
ஜடாக்ரே(க்ரம்) விம்ஶதிமாத்ரம் த்ரயோவிம்ஶதிமாத்ரகம் ॥ ௫௧ ॥

லம்பநம் குக்ஷிநாஸாக்ரம் பாதாங்குஷ்டமூலம் லம்பயேத் ।
ஸூத்ரபாதே து நீவ்ராக்ரம் மாத்ராம்ஶமாத்ர(கம்) ஶராம்ஶமாத்ரகம் ॥ ௫௨ ॥

பூதமானது பாத்திரத்தின் தலைப்பக்கத்தை இரண்டு கைகளினாலும் பிடித்துக்கொண்டிருப்பதாகும். பாத்திரத்தின் விஸ்தாரமானது 20 அங்குலமாகும். அதன் குழிவானது 10 அங்குலமாகும். கனம் 1 அங்குலமாகும்.

வலது பக்கத்திலிருக்கும் மானானது ஸ்வாமியின் முழங்கால் உயரமிருக்கவேண்டும். இந்த உயரமானது மானின் தலை முதல் பாதம் வரையிலுள்ள அளவாகும்.

ஸ்வாமியின் பூர்வஸூத்திரமானது தொட்டிருப்பதையும் ஓதுக்கத்தையும் கூறுகிறேன். ஸூத்திரத்தை நாஸாக்கிரத்திலும் கால் பெருவிரலினடியிலும் தொங்கவிடவேண்டும்.

சடையின் நுனிவரையில் நீளமானது 20 அல்லது 23 அங்குலமாகும். (51)

ஸூத்திரமானது, நாஸாக்கிரத்தையும் வயிற்றையும் தொட்டுக்கொண்டு, காலின் பெருவிரலடிவரையில் தொங்க

தஸ்மாத்ஸூத்ராத் தக்ஷிணாங்குஷ்ட நீவ்ரகம் து நவாங்குலம் |
தசாங்குலம் ருத்ராங்குலம் வாபி ஆதித்யாங்குலமேவ வா ||௫௪||

ஸூத்ரஸ்தாநம் து நிம்நம் வா ஸவ்யபார்ஷ்ணிமத்யஞ்சைவ வா |
த்வாவிம்சதங்குலம் வாபி த்ரயோவிம்சதிரேவ வா ||௫௫||

ஸூத்ராத்பார்ச்வம் து ஸீமாந்தம் தக்ஷிணாங்குஷ்ட நிம்நகம் |
ஏகத்வித்ரிசது:பஞ்ச ஷடங்குலம் து நீவ்ரகம் ||

ஸீமே தக்ஷிணபார்ஷ்ணிர்து வேதபஞ்சரஸாங்குலம் |
பாதுகாயாமகம் வாபி பாததாலாயமேவ (தலாவஸாந)
கம் || ௫௬ ||

உத்ஸேதேந த்ர்யங்குலம் ப்ரோக்தமூர்த்வே பத்மாஸநம் து வக்த்ரகம் |
தர்ஜந்யங்குஷ்டயோர்மத்யே குமுதாக்ருதிபந்தயேத் ||

த்வ்யங்குலம் குட்மலோத்ஸேதம் ஸூத்ரம் ஸாந்தரம்
பவேத் |

வேண்டும். ஸூத்திரத்திலிருந்து இடது பக்கத்தில் பெரு விரல் வரையில் ஒதுக்கம் 5 அங்குலமாகும். அந்த ஸூத்திரத்திலிருந்து வலது கால் பெருவிரல் வரையில் ஒதுக்கம் 9, 10, 11 அல்லது 12 அங்குலமாகும். ஸூத்திரத்தின் ஸ்தாநமானது. (பெருவிரலடியில்) பதிந்திருக்குமிடமாகும். ஸூத்திரத்திலிருந்து வலது குதிகால் நடுவரையில் ஒதுக்கம், 22 அல்லது 23 அங்குலமாகும். ஸூத்திரத்திலிருந்து வலது பெருவிரலின் பள்ளம் வரையில், பக்கத்தின் எல்லையாகும். அதன் ஒதுக்கம் 1, 2, 3, 4, 5 அல்லது 6 அங்குலமாகும். (?) பாதுகையின் நீளமானது காலின் கோடியளவேயாகும் (காலின் நீளமேயாகும்) (56)

பாதுகையின் உயரம் 3 அங்குலமாகும். பாதுகையின் மேல்ப்பக்கமானது பத்மவடிவமாகும். காலின் பெருவிரல் சுட்டு விரல்களின் நடுவில் ஆம்பல் மொட்டைப்போல அமைக்கவேண்டும், அதன் உயரம் 2 அங்குலமாம். அது

கைலாஸஶிவரே ரம்யே ஶ்ரீமஸெ தேவநாயக: || ருக ||

ருஷீணாம் ஸம்மதெ வீர்த்யா ஹமவாநு(ஜமாதி)வரஶெஷர: ।
தண்டகாரண்யஶீலாயாம் சாநீநாம் ஸ(ம)வலோரகயெ ||

தேஷாம் ஶ்ரீ(ஸ்த்ரீ)ணாம் ச வளாரஸ்ய விவாதாய ச
ஶீலயா ।

பிக்ஷாடந(ட)ரூபேதஶ்சைந(ஷ்சந)கடிஸூத்ர விவர்ஜித: ||

உத்தேஶ்யம் (மத்தாஹம்)வரஶேஷாத: கைலாஸம்
த்ரைவிதீ(அவிஹா)யதஹ ।

பிக்ஷாம் கரோம்யஹம் விப்ர கங்காளஸ்ய தஞ் மோக்ஷணம்
(கங்காளமோக்ஷணாய ச) || கக ||

காஶ்யப உவாச —

கயாமெவ வர்தி‍தம் சாஸ்ய கங்காளஸ்ய பலம் கத ।

வட்டமாகவும் அழகாகவுமிருக்கவேண்டும். (57½)

அழகாகவும் ஸர்வைசுவரிய ஸம்பந்நமுமான கைலாஸத்தில், முனிவர்கள் கூடியிருக்கும்பொழுது தேவநாயகரான பரமேசுவரன் கூறினர் :—

நான் தண்டகாரணியத்தில் செய்த லீலையில் முனிவர்களுடைய அஹங்காரத்தைப்போக்குவதற்காகவும் அவர்களின் ஸ்திரீகளின் நாமே குடும்பினிகள் என்னும், அஹங்காரத்தையும் நீக்குவதற்காகவும் கைலாசத்தை விட்டு, விளையாட்டாக பிக்ஷாடன ரூபத்துடன் கடிஸூத்திரங்கூட இல்லாமல் நக்நனுகச்சென்றேன்.

கங்காளத்தின் விடுதலையை உத்தேசித்து பிக்ஷையுமெடுக்கின்றேன். (61)

காசியபர் கூறினர்: தாங்கள் கங்காளத்திற்கு எங்ஙனம் பலத்தை விருத்திசெய்தீர்கள்.

ஶிவ உவாச —

இதாநீம் வக்ஷ்யதோ விப்ர ஶ்ருணுஷ்வ தத் ஸவிஸ்தரம் ||

*தஸ்யஸம் ஸர்வநாஶீநி யாசெ ஸயவக்த்ரகா: |
கம்பிதஸ்ய ஸமஸ்தாநி ஸர்வநாஸ்யிவாஸித: || ௬௪ ||

ப்ராயஶ்சித்தஸ்ய மாம் பிக்ஷாம் மாம்ஸம் ஸமநிவர்த்தயே |
ஜ்ஞாநாநாம் ஸர்வஸித்தாயஞ்ச ஸவஶ்ரோத்ரோகாவகாரகம் ||

கங்காளமோசநார்த்தம் து த்ருஷ்டிவைவஸம் த்விஜ |
பிக்ஷாந்தே மோசயேத் தத் கங்காளஸம்பயம் பவேத் || ௬௫ ||

பரமேசுவரன் கூறினர் :-இப்பொழுது அதை விஸ்தாரமாகக் கூறுகிறேன்.

* ... ...
... ...
... ...
... ...
... ...
... ... (65)

---

*த்ரிவிக்ரமாதிக்ரமோபஹதத்யாநாந்து லோகாந்து த்ரஷ்டா கம்பிதா தேவஷ்டய: ஸமவஸம் பரமேஶ்வரம் ஶரணீயு: | ஸ ச பிக்ஷாடநமிவி த்ரைவிக்ரமம் மாம்ஸம் ஶோணிதஞ்ச பிக்ஷித்வா தம் கங்காளகமோசத் | தத்கங்காளம் ஸ்வயமேவ தாரயாமாஸேதி வராணிகீ கதா | தத்நுஸாரேணாத்ர பாட: ஶோதநீய: ||

* இங்கு 64 முதல் 3½ சுலோகங்கள் திருத்தமுடியாமல் பிழைகள் நிறைந்திருக்கின்றன. ஆகவே "திரிவிக்கிரமமூர்த்தியின் அதிக்கிரமச் செயலாலே அல்லலுற்ற உலகைக்காப்பதற்காக பரமேசுவரன் அவருடைய மாமிஸத்தையும் ரக்தத்தையும் யாசித்து அவரை கங்காளமாக (சவமாக)ச் செய்தார். அதற்கு விடுதலையளிப்பதற்காக அதை தானே தரித்தார்" என்ற புராணக் கதைக்கேற்ப திருத்திக்கொள்ளவேண்டும்.

𑌕𑌾𑌶𑍍𑌯𑌪 𑌉𑌵𑌾𑌚 —

𑌏𑌵𑌂 𑌕𑌂𑌕𑌾𑌲𑌮𑍂𑌰𑍍𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌹𑌰𑌿𑌹𑌾𑌰𑌾𑌰𑍍𑌧𑌮𑌤𑌃 𑌶𑍃𑌣𑍁 ||

𑌇𑌤𑌿 𑌕𑌾𑌶𑍍𑌯𑌪𑌶𑌿𑌲𑍍𑌪𑍇 𑌕𑌂𑌕𑌾𑌲𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌨𑌾𑌮
𑌪𑌞𑍍𑌚𑌸𑌪𑍍𑌤𑌤𑌿𑌤𑌮𑌃 𑌪𑌟𑌲𑌃 𑌸𑌮𑌾𑌪𑍍𑌤𑌃 ||

காசியபர் கூறினர் :—இவ்விதமாக கங்காள மூர்த்தியின் லக்ஷணம் கூறப்பட்டது. இனி ஹரிஹரார்த்த மூர்த்தியின் லக்ஷணத்தைக் கூறுகிறேன், கேட்பாயாக. (66)

காசியபீய சில்பசாஸ்திரத்தில் கங்காள மூர்த்தி லக்ஷணமென்னும் எழுபத்தைந்தாவது படலம் முற்றும்.

|| 𑌅𑌥 𑌷𑌟𑍍𑌸𑌪𑍍𑌤𑌤𑌿𑌤𑌮𑌃 𑌪𑌟𑌲𑌃 ||

𑌹𑌰𑌿𑌹𑌰𑌾𑌰𑍍𑌧𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ||

𑌅𑌥 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑍇 𑌵𑌿𑌶𑍇𑌷𑍇𑌣 𑌹𑌰𑍍𑌯𑌰𑍍𑌧𑌹𑌰𑌂 𑌪𑌰𑌮𑍍 |
𑌋𑌜𑍍𑌵𑌙𑍍𑌗𑌂 𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 (𑌪𑌾𑌦𑌂) 𑌸𑍍𑌥𑌾𑌨𑌕𑌂 𑌸𑌮
𑌪𑌾𑌦𑌕𑌮𑍍 || க ||

𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌚𑌾𑌭𑌯𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌕𑌟𑌕𑌂 𑌚𑍋𑌰𑍁𑌸𑌂𑌶𑍍𑌰𑌿𑌤𑌮𑍍 |
𑌪𑌰𑌶𑍁𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌵𑌾𑌮𑍇 𑌶𑌙𑍍𑌖𑌾𑌯𑍁𑌧𑌯𑍁𑌤𑌂 𑌪𑌰𑌮𑍍 || உ ||

𑌸𑌵𑍍𑌯𑍇 𑌵𑌾𑌮𑍇 𑌚 𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍 𑌜𑌟𑌾𑌕𑌿𑌰𑍀𑌟𑌸𑌂𑌯𑍁𑌤𑌮𑍍 |
𑌪𑍍𑌰𑌵𑌾𑌲𑌾𑌭𑌂 𑌶𑍍𑌯𑌾𑌮𑌵𑌰𑍍𑌣𑌂 𑌤𑌦𑍍𑌯𑍋𑌗𑍍𑌯𑌾𑌭𑌰𑌣𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌮𑍍 ||

𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌤𑍂𑌗𑍍𑌰𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌃 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍 𑌵𑌾𑌮𑍇 𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌃
𑌸𑍁𑌶𑍀𑌤𑌲𑌾 |
𑌶𑌿𑌖𑌿𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌕𑌾𑌶𑌿𑌤𑌂 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌰𑍍𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌸𑍍𑌤𑍁 𑌤𑌤𑍍𑌪𑍁𑌟𑌕𑍇 ||

எழுபத்தாறுவது படலம்

ஹரிஹரார்த்த லக்ஷணம்

இனி ஹரிஹரார்த்த மூர்த்தியின் லக்ஷணத்தை விசேஷித்துக் கூறுகிறேன். இந்த மூர்த்தியானது நேராக நிமிர்ந்து நிற்கும் வடிவமாகவும் இரண்டு பாதங்களும் நன்கு பதிந்துமிருக்கவேண்டும்.

வலது பக்கம் பூர்வஹஸ்தமானது அபயஹஸ்தமாகவும் இடது கை கடகஹஸ்தமாக துடையில் வைக்கப்பட்டுமிருக்கவேண்டும். வலது பரஹஸ்தத்தில் மழுவும் இடது பரஹஸ்தத்தில் சங்குமிருக்கவேண்டும். சிரஸ்ஸில் வலது பக்கத்தில் சடைமுடியும் இடது பக்கத்தில் கிரீடமுமிருக்க வேண்டும். வலதுபக்கம் ஸரிபாதியுடல் பவழநிறமாகவும் இடது பக்கம் ஸரிபாதியுடல் பச்சை நிறமாகவுமிருக்க வேண்டும். இருபக்கங்களில் அதற்கு உரிய ஆபரணங்கள் அணியப்பட்டிருக்கவேண்டும். வலது கண் உக்கிரமாகவும், இடது கண் குளிர்ச்சியாகவுமிருக்கவேண்டும், நெற்றியில்

𑌸𑌕𑌲𑌾𑌭𑌰𑌣𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌦𑌿𑌗𑌂𑌬𑌰𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌮𑍍 ।
𑌶𑌿𑌰𑌶𑍍𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌕𑌲𑌾𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌤𑌸𑍍𑌯 𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥ ௫ ॥

𑌰𑍌𑌦𑍍𑌰𑌾𑌂𑌶𑌕𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌤𑍁 𑌤𑌦𑍍𑌵𑌾𑌮𑌾𑌂𑌶𑍇𑌨 𑌵𑌰𑍍𑌧𑌿𑌤𑌮𑍍 ।
𑌸𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 𑌚𑌕𑍍𑌰𑌵𑌤𑍍𑌪𑌦𑍍𑌮𑌾𑌕𑍃𑌤𑌿𑌰𑌥𑌾𑌪𑌿 𑌵𑌾 ॥ ௬ ॥

𑌶𑌿𑌰𑌶𑍍𑌚𑌕𑍍𑌰𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌤𑍁 𑌸𑌪𑍍𑌤𑌮𑌾𑌤𑍍𑌰𑍈𑌕𑌮𑌾𑌧𑌿𑌕𑌮𑍍
(𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌧𑌿𑌕𑌂 𑌤𑌥𑌾) ।
𑌶𑌿𑌰𑌶𑍍𑌚𑌕𑍍𑌰𑌨𑌾𑌹𑌸𑍍𑌯 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌦𑍍𑌵𑌿𑌜𑌸𑌤𑍍𑌤𑌮 ॥ ௭ ॥

*𑌚𑌕𑍍𑌰𑌵𑌾𑌟𑌿𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍𑌰𑍈𑌕𑌂 𑌚𑌕𑍍𑌰𑌂 𑌶𑌿𑌰𑌸𑍋𑌨𑍍𑌨𑌤𑌮𑍍 ।
𑌕𑍍𑌰𑌮𑍇𑌣 𑌲𑌲𑌾𑌟𑌪𑌟𑍍𑌟𑌸𑍍𑌯 𑌶𑌿𑌰𑌶𑍍𑌚𑌕𑍍𑌰𑌸𑍍𑌯 𑌨𑌾𑌹𑌕𑌮𑍍 ॥ ௮ ॥

(வலது பக்கத்தில்) கண்ணுனது சிறிதளவு தெரியும்படி இருக்க வேண்டும். (விஷ்ணு பாகமான இடதுபக்கத்தில்) ஸகல ஆபரணங்களும் அணியப்பட்டிருக்கவேண்டும். (வலது பக்கமான சிவபாகமானது) திகம்பரமாக (வஸ்திர மில்லாமல்) இருக்கவேண்டும். சிரஸ்ஸில் (வலது பக்கத்தில்) சந்திரகலையுடனிருக்கவேண்டும். இவ்விதமாக அதன் லக்ஷணம் கூறப்பட்டிருக்கிறது.

ருத்திரபாகமான வலது பக்கத்தின் விஸ்தாரமானது இடது பக்கமான விஷ்ணு பாகத்தைக் காட்டிலும் 1 அங்குலம் கூடுதலாக இருக்கவேண்டும். சிரஸ்ஸானது சக்கரத்தைப்போல வட்டவடிவமாகவாவது தாமரை மலரைப்போலவாவது இருக்கவேண்டும். சிரஸ்ஸின் விசாலமானது (இடது பக்கம்) 7 அங்குலமும் (வலது பக்கம்) ஒரு அங்குலம் அதிகமாகவுமிருக்கவேண்டும். இது வட்டமான சிரோ விஸ்தாரமானமாகும்.

---

*𑌚𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍𑌰𑌮𑌿𑌤𑌾𑌤𑍍𑌰𑍈𑌕𑌂 𑌅𑌤𑍍𑌰𑌾𑌯𑌂 𑌶𑌿𑌰𑌸𑍋𑌤𑍍𑌤𑌰𑌮𑍍 ।
𑌕𑍍𑌰𑌮𑍇 𑌲𑌲𑌾𑌟𑌪𑌟𑍍𑌟𑌸𑍍𑌯 𑌶𑌿𑌰𑌶𑍍𑌚𑌕𑍍𑌰𑌸𑍍𑌯 𑌨𑌾𑌹𑌕𑌮𑍍 ॥

𑌮𑌾𑌨𑌾𑌂𑌶𑌂 𑌚𑌕𑍍𑌰𑌕𑌾𑌦𑍍𑌯𑍈𑌰𑍍𑌧𑍍𑌵𑍇 𑌚𑌕𑍍𑌰𑌨𑌾𑌹𑌸𑍍𑌥𑌿𑌤𑌿
𑌭𑌵𑍇𑌤𑍍 ।

அக்ரம் தர்ஜநீமங்குஷ்டாப்யாம் புஷ்பமாலாம் து மத்யமாத் ।
ஸர்வேஷாம் தேவதேவீநாமேவமேவ ப்ரகல்பயேத் ॥ ௯ ॥

இதி காஶ்யபஶில்பே ஹரிஹரார்த்தலக்ஷணம் நாம
ஷட்ஸப்ததிதம: படல: ஸமாப்த: ॥

---

* சக்கிரவாமத்தின் 3ல் 1 பாகம், வட்டமான சிரஸ்ஸின் உயரமாகும். முன்பக்கத்தில் லலாடபட்டத்திற்கு சிரஸ் சக்கிரத்தினுடைய நாளமாகும். சக்கிரம் தர்ஜனியைப் பிடித்து புஷ்பமாலையின் மத்தியம்.

ஸகல தேவர்களுக்கும் தேவிகளுக்கும் இவ்விதமே கல்பித்துக்கொள்ளவேண்டும்.

காசியபீய சில்பசாஸ்திரத்தில் ஹரிஹரார்த்த மூர்த்தி லக்ஷணமென்ற எழுபத்தாறுவது படலம் முற்றும்.

பக்ஷாந்தாணாம் த்ரிபாகம் தும்பம் புஷ்பமாலாந்த்ரிமத்யமாத் ॥
ஸர்வேஷாமபி தேவாநாம் தேவீநாம் சைவமாசரேத் ।
இதி ஸரஸ்வதீமஹால்புஸ்தகாதிகமதிக: பாட: ।
ஶிரோஹாரத்ரிபாகைகம் ஸார்த்தம் து பஶ்சிமோத்தரம் ।
ஶிரோ லலாடபட்டம் து ஶிரஶ்சக்ரஸ்ய நாளகம் ॥
த்ர்யங்குலம் த்ர்யங்குலம் க்ருகாடிகோர்த்வே தத்ர நாளஸ்திதி
ர்பவேத் ।
தஸ்மாத்த்ர்யங்குலாத் கண்டமத்யே புஷ்பமாலாதிஸ்திதி: ॥
இதி பாடோ ஸம்பவதீதி பாதி ।

*இந்தவிடத்தில் மூலம் பிழைநிறைந்திருக்கிறது. ஸரஸ்வதி மஹால் நூலிலுள்ள பாடத்தில் ஒரு சுலோகம் அதிகமாக இருக்கிறது. அதுவும் பிழையாகவே இருக்கிறது. ஆகையால் "சிரஸ்ஸின் முன்பக்கத்தின் விஸ்தாரத்தில் 3ல் 1 பங்கும் ½ அங்குலமும் பின் பக்கமாகும். முன் பக்கத்தில் லலாடபட்டமானது சிரஸ்சக்கிரத்தின் நாளமாகும். பின்பக்கத்தில் பிடரிக்குமேலே 3 அங்குலத்திலுள்ள இடமானது நாளத்தின் இடமாகும். அதிலிருந்து 3 அங்குலத்திலிருந்து கழுத்தின் மத்தியில் புஷ்பமாலை முதலியவைகள் இருக்குமிடமாகும்" என்று இருக்கலாமோ என்று தோன்றுகிறது.

|| அத ஸப்தஸப்ததிதம: படல: ||

பிக்ஷாடநமூர்த்திலக்ஷணம் ||

அத வக்ஷ்யே விசேஷேண பிக்ஷாடநஸ்வரூபகம் |
பாதௌ பாதுகஸம்யுக்தௌ வாமபாதம் து ஸுஸ்திதம் ||

ஸவ்யம் கிஞ்சித் ஸமுத்க்ஷிப்ய பாதம் து கமநோந்முகம் |
லலாடமத்யாத் ஸவ்யே து ஸப்தாஷ்ட வா யவாந்தரே || ௨ ||

நாஸாக்ரே சிபுகஸ்யாதோ வாமே ஹிக்காயாஸ்து வாமகே |
ஹ்ருந்மத்யே நாபிஸவ்யே து ஷோடசம் து யவாந்தரம் ||

ஸ்திதாங்க்ரிமணிபந்தே து மத்யே ஸூத்ரம் ப்ரபாதயேத் |
ஆபங்கம் து நதம் காயம் ஸமபங்கமதாபி வா || ௪ ||

எழுபத்தேழாவது படலம்

பிக்ஷாடந மூர்த்தி லக்ஷணம்

இனி மஹேச்வரனுடைய பிக்ஷாடந மூர்த்தி லக்ஷணத்தை விசேஷித்துக் கூறுகிறேன்.

கால்கள் பாதுகையுடனிருக்கவேண்டும். இடது கால் ஸுஸ்திதமாக (நன்கு ஊன்றி) இருக்கவேண்டும். வலது கால் சிறிது தூக்கி நடக்க முயற்சிப்பதுபோல இருக்க வேண்டும். (1½)

நெற்றி நடுவிலிருந்து வலது பக்கத்தில் 7 அல்லது 8 யவையளவிலும், நாஸியின் நுனியிலும், கீழுதட்டின் இடது பக்கத்திலும், நடுக்கழுத்தின் இடது பக்கத்திலும், ஹிருதயமத்தியத்திலும், தொப்புளுக்கு இடது பக்கத்தில் 16 யவையளவிலும், ஸ்திதாங்கிரியின் (ஊன்றிய இடது காலின்) மணிக்கட்டு முண்டின் நடுவிலும் பூர்வ ஸூத்திரத்தைத் தொங்கவிடவேண்டும்.

நதமானது, ஆபங்கம் அல்லது ஸமபங்கமாக இருக்க வேண்டும். (4)

பாதயோ: பாதுகாஸம்யுக்தம் பாதுகாரஹிதம் து வா |
விஸ்தீர்ண ஜடாபாரம் ஜடாமண்டலமேவ வா || ௬ ||

வ்ருத்தபந்தஜடாபாரம் லலாடபட்டம் ததாந்விதம் |
முண்டாபட்டஸம்யுக்தம் அர்த்தசந்த்ரேண ஸம்யுதம் || ௭ ||

ஸர்வாபரணஸம்யுக்தம் கடிஸூத்ரவிவர்ஜிதம் |
ஶுத்தஶ்வேதநிபம் ப்ரோக்தம் நாநாநாகவிபூஷிதம் ||

தக்ஷிணே பூர்வஹஸ்தே து ம்ருகமுத்ராங்கிதம் பவேத் |
வாமே து பூர்வஹஸ்தே து வரதம் ஸகபாலகம் ||

தக்ஷிணே பரஹஸ்தே து டமரும் ச தரேத் த்விஜ |
வாமே து ஶிகிபிஞ்சம் ச அகந்தவ்யம் அதிஶீதளம்
(அ மனோஹரம்) || ௮ ||

ஸிதவஸ்த்ரோத்தரீயம் து நாகேந கடிபந்திதம் |

பிக்ஷாடந மூர்த்தியானது, பாதங்களில் பாதுகைகளை தரித்துமிருப்பதாகும். பாதுகை இல்லாமலும் இருப்பதாகும். விரிந்த ஜடாபாரத்துடனாவது ஜடாமண்டலம் தரித்தாவது இருப்பதாகும். அல்லது வட்ட வடிவமாகக் கட்டப்பட்ட ஜடாபாரத்துடனுமிருப்பதாகும். நெத்திப் பட்டை தரித்திருக்கவேண்டும். மண்டையோடும், அரை சந்திரனும் தரித்திருக்கவேண்டும். ஸகல ஆபரணங்களையு மணிந்து, கடிஸூத்ரமில்லாமலிருக்கவேண்டும். பிக்ஷாடந மூர்த்தியானது தூயவெண்மை நிறமுடையதாகும். நானாவித நாகங்களை அணிந்திருப்பதாகும். (7)

வலது பக்கம் பூர்வஹஸ்தத்தில் மானும், இடது பக்கம் பூர்வஹஸ்தம் வரதமாகவும் கபாலத்தைத் தரித்துமிருக்க வேண்டும். வலதுபக்கம் பரஹஸ்தத்தில் உடுக்கையையும், இடது பக்கம் பரஹஸ்தத்தில் மிகவும் குளிர்ச்சியான (மனதைக்கவரும்) மயில்த்தோகையையும் தரித்திருக்க வேண்டும். (8)

வெளுப்பு வஸ்திரத்தை மேலாடையாக தரித்து,

ஶ்வேதயஜ்ஞோபவீதம் து நீலகண்டம் த்ரிபுண்ட்ரகம் ||

*பத்மபீடோபரிஷ்டாத்து(ஶேஷம் ஸர்வம் து) ஶேஷம் கங்காள-
மூர்த்திவத் || ௫ ||

இதி காஶ்யபஶில்பே பிக்ஷாடனமூர்த்திலக்ஷணம் நாம
ஸப்தஸப்ததிதம: படல: ஸமாப்த: ||

இடுப்பில் நாகத்தை சுத்திக்கொண்டு, வெண்மையான பூநூலை தரித்து, நீலகண்டனுக, திரிபுண்டிரத்தை தரித்து இருக்கவேண்டும் இந்த மூர்த்தியானது, பத்மபீடத்தின் மீது கல்பிக்கப்பட வேண்டும். மற்றவைகள் பிக்ஷாடந மூர்த்தியைப்போலவேயாகும். *

காசியபீய சில்பசாஸ்திரத்தில் பிக்ஷாடநமூர்த்தி லக்ஷணமென்னும் எழுபத்தேழாவது படலம் முற்றும்.

---

* ௫. ஶ்லோகாநந்தரம் கஶ்சித்பாட: ஸரஸ்வதீமஹாலயஸ்த மாத்ருகாயாம் த்ருஶ்யதே |

" ஸம்ஸ்க்ருத உவாச —

தேவாஸுரே மஹாயுத்தே விதாமஹஶிரஸ்து யத் |
தஸ்மாதவாநாம் பார்ஶ்வேஷு ஸ்தாத்து (தத்) த்ராணவேஷ்டயே ||
தேநாஸுராஸுரம் (ஸத்ய விதய ஸதாமேவ ஶரணம்
யயு:) |
(தேவாநாம்) விஜயார்த்தம் து ஸர்வலோகஹிதாய ச ||
த்ரிதவாநாம் விநாஶாயார்த்தம் ப்ரஹ்மஶீர்ஷம் வஹாம்யஹம் |
தஸ்மாத்ப்ரிதாஸ்ஸர்வலோகாஸ்ஸர்வஸ்ஸ ஹாயாஸ்ஸகம்பிதா: ||
(தஸ்ய ப்ரஹ்மஹத்யாஸம்ஜாதஸர்வபாபக்ஷயாஷயே) |
ஸர்வலோகோபகாரார்த்தம் ஸர்வப்ராணிஹிதாய ச ||
தஸ்கவாம்ஸ்ய லோகாயார்த்தம் பிக்ஷுவேஷம் வஹாம்யஹம் |"

* இந்த படலத்தின் முடிவில், ஸரஸ்வதி மஹால் நூலில் சில சுலோகங்கள் அதிகமாக இருக்கின்றன. அவைகளின் பொருள் வருமாறு. "பரமேசுவரன் கூறினர். தேவாஸுர யுத்தத்தில், பிரம்ஹாவின் சிரமானது அஸுரர் பக்கத்தில்

|| அதாஷ்டஸப்ததிதம: படல: ||

சண்டேசாநுக்ரஹமூர்த்திலக்ஷணம் ||

அத வக்ஷ்யே விசேஷேண சண்டேசாநுக்ரஹம் பரம் |
உமாஸ்கந்தவத்ஸர்வம் வக்த்ரம் கிஞ்சிந்நதாநநம் || 1 ||

தக்ஷிணே அபயம் வர்ஜ்யம் *ததா ஆபரணம் பவேத் |
வாமே து கடகம் ஹஸ்தஸ்ய அதோக்த அநுக்ரஹமூர்த்திகம் ||

எழுபத்தெட்டாவது படலம்

சண்டேசாநுக்ரஹ மூர்த்தி லக்ஷணம்

இனி சண்டேசாநுக்ரஹ மூர்த்தியின் லக்ஷணத்தைக் கூறுகிறேன். இந்த மூர்த்தியானது ஸோமாஸ்கந்த மூர்த்தியைப்போன்றதேயாகும். முகமானது இடது பக்கத்தில் சிறிது வணங்கியிருப்பதாகும். வலது கையானது அபயஹஸ்தமாக இருக்கக்கூடாது.* ஆபரணங்கள் அவ்விதமேயாகும். இடது கையானது கடகஹஸ்தமாக

விழுந்தது. அதனாலே அஸுரர்களின் விருப்பம் கிட்டியது. அஸுரர்களின் அஸ்திரபலத்தினாலே விரட்டப்பட்ட தேவர்கள் என்னையே சரணமடைந்தார்கள். அஸுரர்களை வெற்றி கொள்ளுவதற்காகவும், உலகத்தின் நன்மைக்காகவும், அஸுரர்களின் அழிவுக்காகவும், அந்த பிரம்ஹாவின் சிரஸ்ஸை நான் வஹிக்கின்றேன். அதனாலே நான் செய்த உதவியினாலே, ஸகல அண்டங்களும் நடுக்கமின்றி காப்பாற்றப்பட்டன. பிரம்ஹ தேவனின் சிரத்தைக் கொய்ததனாலுண்டான பிரம்மஹத்தி தோஷத்தைப் போக்குவதற்காகவும், ஸகல உலகங்களுக்கும் உபகாரமாகவும், ஸகல ஜீவராசிகளின் நன்மைக்காகவும், அந்த கபாலத்தைக் கையிலிருந்து விடுவிப்பதற்காகவும், நான் பிக்ஷாடந வேஷத்தை தரித்திருக்கிறேன்."

*தத்ஸ்தம் வரதம் பவேத் | இதி ஸரஸ்வதீமஹாலயஸ்த கோசபாட: |

* அந்த வலது கையானது வரத ஹஸ்தமாக இருக்க வேண்டும் என்பது ஸரஸ்வதி மஹால் நூலிலுள்ள பாடம்.

𑌹𑍃𑌦𑌯𑌾𑌞𑍍𑌜𑌲𑌿𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌚𑌣𑍍𑌡𑍇𑌶𑌂 𑌭𑌕𑍍𑌤𑌿𑌸𑌂𑌯𑍁𑌤𑌮𑍍 ।
𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌨𑌃 𑌪𑌾𑌦𑌪𑍀𑌠𑍇 𑌤𑍁 𑌚𑌣𑍍𑌡𑍇𑌶𑌂 𑌸𑍍𑌥𑌾𑌨𑌕𑍈𑌵𑌨𑍈𑌵𑌹𑌮𑍍 ॥

𑌦𑍇𑌵𑌦𑍇𑌵𑍍𑌯𑌯𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑍇 𑌸𑍍𑌕𑌨𑍍𑌦𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌂 𑌵𑌿𑌨𑌾 𑌪𑌾𑌯
(𑌭𑌵𑍇𑌤𑍍) ।

𑌚𑌣𑍍𑌡𑍇𑌶𑌾𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇𑌶𑌂 𑌤𑌤𑌃 𑌶𑍃𑌣𑍁 ॥ ௪ ॥

𑌇𑌤𑌿 𑌕𑌾𑌶𑍍𑌯𑌪𑌶𑌿𑌲𑍍𑌪𑍇 𑌚𑌣𑍍𑌡𑍇𑌶𑌾𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌂
𑌨𑌾𑌮 𑌅𑌷𑍍𑌟𑌸𑌪𑍍𑌤𑌤𑌿𑌤𑌮𑌃 𑌪𑌟𑌲𑌃 𑌸𑌮𑌾𑌪𑍍𑌤𑌃 ॥

இருக்கவேண்டும். ஸ்வாமிக்குக் கீழே சண்டிகேச மூர்த்தியானது (நின்றவடிவமாக) இருக்கவேண்டும். (2)

சண்டிகேச மூர்த்தியானது பக்தியுடன் மார்பில் கைகளைக்கூப்பி வைத்துக்கொண்டிருக்கவேண்டும். சண்டிகேசுவரரின் நிறமானது ஸ்வர்ண நிறமாகும்.

பரமேசுவரனும் பார்வதி தேவியும் பத்மபீடத்தில் உட்கார்ந்த வடிவமாக இருப்பவர்களாவார்கள். அவர்களின் மத்தியில் ஸ்கந்தமூர்த்தியானது இருக்கக்கூடாது. இவ்விதமாக சண்டேசானுக்கிரஹ மூர்த்தியின் லக்ஷணம் கூறப்பட்டிருக்கிறது.

இனி தக்ஷிணாமூர்த்தியின் லக்ஷணத்தைக் கூறுகிறேன்.

காச்யபீய சில்ப்சாஸ்திரத்தில் சண்டேசானுக்ரஹமூர்த்தி லக்ஷணமென்னும் எழுபத்தெட்டாவது படலம் முற்றும்.

॥ 𑌅𑌥𑍈𑌕𑍋𑌨𑌾𑌶𑍀𑌤𑌿𑌤𑌮𑌃 𑌪𑌟𑌲𑌃 ॥

𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

𑌅𑌥 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑍇 𑌵𑌿𑌶𑍇𑌷𑍇𑌣 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ।
𑌲𑌮𑍍𑌬𑌯𑍇𑌦𑍍 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌪𑌾𑌦𑌂 𑌵𑌾𑌮𑌂𑌵𑌿𑌕𑍍𑌰𑌮𑌣𑌾𑌤𑍍𑌮𑌕𑌮𑍍 ॥

𑌸𑌵𑍍𑌯𑌾𑌪𑌸𑍍𑌮𑌾𑌰𑍇 𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌵𑌾𑌮𑌪𑌾𑌦𑌂 𑌤𑍁 𑌶𑌾𑌯𑌯𑍇𑌤𑍍 ।
𑌲𑌲𑌾𑌟𑍇 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌸𑌵𑍍𑌯𑍇 𑌨𑍇𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑍇 𑌤𑌤𑍍𑌪𑍁𑌟𑌾𑌨𑍍𑌤𑌕𑍇 ॥

*𑌹𑌿𑌕𑍍𑌕𑌾𑌯𑌸𑍍𑌯 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌤𑍁 𑌹𑍃𑌨𑍍𑌮𑌧𑍍𑌯𑌸𑍍𑌯 𑌤𑍁 𑌵𑌾𑌮𑌕𑍇 ।
𑌯𑌵𑌤𑍍𑌰𑌯𑌾𑌨𑍍𑌤𑌰𑌂 𑌨𑍀𑌤𑍍𑌵𑌾 𑌲𑌮𑍍𑌬𑍍𑌯 𑌨𑌾𑌭𑌿𑌮𑍇𑌢𑍍𑌰𑌸𑍍𑌯 𑌮𑌧𑍍𑌯𑌮𑍇 ॥ ௩ ॥

𑌮𑍇𑌢𑍍𑌰𑌮𑍂𑌲𑌸𑍍𑌯 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌤𑍁 𑌪𑍂𑌰𑍍𑌵𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌤𑍁
𑌲𑌮𑍍𑌬𑌯𑍇𑌤𑍍 ।

எழுபத்தொன்பதாவது படலம்

தக்ஷிணாமூர்த்தி லக்ஷணம்

இனி விசேஷித்து தக்ஷிணாமூர்த்தி லக்ஷணத்தைக் கூறுகிறேன். தக்ஷிணாமூர்த்தியின் வலதுகாலைத் தொங்கவிட வேண்டும். இடது காலின் நளகையை, (கண்டைக்காலின் நுனியில் சிறித்திருக்குமிடத்தை) வலது கால் தொடையின் முன்பாகத்தில் வைக்கவேண்டும். இடது காலைப்படியப் போட்டிருக்கவேண்டும்.

நெற்றியின் வலது பக்கம், வலது நேத்திராந்தம், வலது நாஸாபுடாந்தம். நடுக்கழுத்தின் இடது பக்கம், ஹிருதயமத்தியத்தின் இடது பக்கத்தில் 3 யவை ஒதுக்கத்திலுள்ள இடம் நாபிமத்தியம், மேட்ரமத்தியம் இந்த இடங்களில் பூர்வஸூத்திரத்தைத் தொங்கவிட

---

*𑌅𑌯𑌂 𑌶𑍍𑌲𑍋𑌕𑌾𑌰𑍍𑌧𑌃 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌵𑌪𑍀 𑌹𑌾𑌸𑍍𑌯𑌮𑌾𑌤𑍃𑌕𑌾 𑌮𑌤𑌃 ।

𑌨𑌤𑌮𑌧𑍍𑌯𑌰𑍍𑌧 (𑌨𑌤𑌂 𑌤𑍍𑌰𑍍𑌯𑌰𑍍𑌧) 𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜
𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌮𑍍 ॥ ௪ ॥

*𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌪𑍂𑌰𑍍𑌵𑌹𑌸𑍍𑌤𑌂 𑌤𑍁 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍁𑌦𑍍𑌰𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌪𑌰𑌹𑌸𑍍𑌤𑍇 𑌤𑍁 𑌅𑌕𑍍𑌷𑌮𑌾𑌲𑌾𑌯𑍁𑌤𑌂 𑌪𑌰𑌮𑍍 ॥ ௫ ॥

𑌵𑌰𑌦𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑌹𑌸𑍍𑌤𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌦𑌣𑍍𑌡𑌹𑌸𑍍𑌤𑌮𑌥𑌾𑌪𑌿 𑌵𑌾 ।
𑌵𑌾𑌮𑌜𑌾𑌨𑍂𑌪𑌰𑌿𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑌂 𑌵𑌰𑌦𑍇 𑌤𑌲𑌪𑍃𑌷𑍍𑌠𑌕𑌮𑍍 ॥ ௬ ॥

𑌵𑌾𑌮𑌜𑌾𑌨𑍂𑌪𑌰𑌿𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑌂 𑌦𑌣𑍍𑌡𑌂 𑌚𑍇𑌤𑍍 𑌕𑍂𑌰𑍍𑌪𑌰𑌂 𑌨𑍍𑌯𑌸𑍇𑌤𑍍 ।
𑌵𑌾𑌮𑍇 𑌚 𑌪𑌰𑌹𑌸𑍍𑌤𑍇 𑌤𑍁 𑌵𑌹𑍍𑌨𑌿𑌰𑍍𑌵𑌾 𑌸𑌰𑍍𑌪 𑌏𑌵 𑌵𑌾 ॥ ௭ ॥

𑌵𑌿𑌕𑍀𑌰𑍍𑌣𑌮𑍂𑌰𑍍𑌧𑌜𑌂 𑌵𑌾𑌪𑌿 𑌜𑌟𑌾𑌮𑌣𑍍𑌡𑌲𑌮𑍇𑌵 𑌵𑌾 ।
𑌜𑌟𑌾𑌨𑌿𑌬𑌦𑍍𑌧𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌾 𑌜𑌟𑌾𑌮𑌕𑍁𑌟𑌮𑍇𑌵 𑌵𑌾 ॥ ௮ ॥

வேண்டும். இதன் நதமானமானது 1½ (3½) அங்குலமாகும். இந்த மூர்த்தியானது 4 கைகளுடையதாகும். (4)

வலது பக்கம் பூர்வஹஸ்தமானது ஜ்ஞானமுத்திரையுடனிருக்கவேண்டும். வலது பரஹஸ்தத்தில் ஜபமாலை இருக்க வேண்டும். இடது பக்கம் பூர்வஹஸ்தமானது வரதஹஸ்தமாகவாவது தண்டத்துடனாவது இருக்கவேண்டும். வரதஹஸ்தமான இடது கைத்தலத்தின் பின்பக்கமானது இடது முழங்காலின் மேலே வைக்கப்பட்டிருக்கவேண்டும். தண்டஹஸ்தமாக இருந்தால், இடது முழங்கையானது இடது முழங்காலின் மேலே வைக்கப்பட்டிருக்கவேண்டும். இடது பரஹஸ்தத்தில் தீச்சுடராவது, ஸர்பமாவது இருக்க வேண்டும். (7)

தலைமயிரானது விரிந்தாவது, ஜடாமண்டலமாகவாவது, ஜடாபந்தமாகவாவது ஜடாமகுடமாகவாவது இருக்கவேண்டும். (8)

*𑌅𑌯𑌂 𑌶𑍍𑌲𑍋𑌕𑌾𑌰𑍍𑌧𑌃 𑌸𑌂𑌶𑍋𑌧𑌕𑌾𑌧𑍍𑌯𑌾𑌹𑍃𑌤𑌃 ।

வாமே தத்தூர நாகௌ ச தக்ஷிணே சந்த்ரசேகரம் |
ஸஸ்மிதவக்த்ரஸௌம்யாக்ஷம் ஸர்வாபரணபூஷிதம் || ௬ ||

ஸிதவஸ்த்ரோத்தரீயம் ச ஸிதயஜ்ஞோபவீதிநம் |
த்ரிணேத்ரம் ஶங்கம் வாமே ஸவ்யே மகரகுண்டலம் || ௭ ||

கர்ணயோ ச ஶங்கபத்ரம் வா குண்டலேர் வாபி ஸுஸ்திதம் |
ருத்ராக்ஷை: கண்டமாலாபி: ஹ்ருந்மாலாபிர் விபூஷிதம் ||

வ்யாக்ர சர்மாம்பரோபேதம் ஸர்வக்லேஶவிவர்ஜிதம் |
நாரதோ ஜமதக்நிஶ்ச வஸிஷ்டோ தக்ஷிணே ப்ருகு: || ௮ ||

பரத்வாஜஶ்ச ஶௌநகஶ்சாகஸ்த்யோ வாமபார்ஶ்வகே |
வந்திதம் கிந்நராத்யைஶ்ச வடவ்ருக்ஷம் ஸமாஶ்ரிதம் || ௯ ||

தக்ஷிணாமூர்த்தியின் சிரஸ்ஸில் இடது பக்கத்தில் ஊமத்தம்பூவும் நாகமும் இருக்கவேண்டும். வலது பக்கத்தில் சந்திரகலை இருக்கவேண்டும். சிறித்த முகத்துடன், ஸகலவிதமான அலங்காரங்களையும் அணிந்து, வெண்மையான வஸ்திரம் தரித்து, வெண்மையான பூநூல் பூண்டு, மூன்று கண்களுடனிருக்கவேண்டும். இடதுகாதில் சங்ககுண்டலமும், வலது காதில் மகரகுண்டலமுமிருக்க வேண்டும். இரண்டு காதுகளிலும் சங்கபத்திரங்களாவது மகரகுண்டலங்களாவது இருப்பதுமாகும். ருத்திராக்ஷங்களாலான கண்டமாலைகளும் ஹிருதயமாலைகளையும் தரித்திருக்கவேண்டும். தக்ஷிணாமூர்த்தியானது, புலித்தோலாடை தரித்து எவ்விதமான மனச்சோர்வுமில்லாத மூர்த்தியாகும்.

இந்த மூர்த்தியின் வலது பக்கத்தில் நாரதர், ஜமதக்னி, வஸிஷ்டர், பிருகு, இவர்களும், இடது பக்கத்தில், பரத்துவாஜர், சுநகர், அகத்தியர் இவர்களும் இருப்பவர்களாவார்கள்.

இந்த மூர்த்தியானது கிந்நரர் முதலியவர்களினாலே

அபஸ்மாரோபரிஷ்டாத்து லம்பபாதம் து ந்யஸேத் |
ஸூத்ரம் (த்ராத்) தஸ்ய பார்ஷ்ண்யந்தம் து (தம்) வேதம்
ஸ்யாந்நிர்கமாத்ரகம் || ௰௪ ||

ஸூத்ரம் (த்ராத்) தஸ்ய ஜாநுநோந்தம் மநு (ரவி) ஸமம்
ஸ்யாந்நிர்கமாத்ரகம் |
ஶ்யாமவர்ணமபஸ்மாரம் நாகக்ரீடாஸமந்விதம் || ௰௫ ||

தர்மவ்யாக்யானமூர்த்திஞ்ச கல்பயேத் கல்பவித்தம: |
தஸ்யைவ வாமபாதேநோத்குடிகாஸனஸம்யுதம் || ௰௬ ||

பூர்வஹஸ்தத்வயே வீணாயாம் யுக்தா (யுக்தம்)
விஶேஷத: |
ஶேஷம் பூர்வவத் கர்த்தவ்யம் ஏதத் வீணாதரம் பவேத் ||

வணங்கப்பட்டு, ஆலமரத்தடியில் வீற்றிருக்கும் மூர்த்தியாகும். (13)

அபஸ்மாரன் (முதுகின்) மீது லம்பபாதத்தை வைக்க வேண்டும். பூர்வஸூத்திரத்திலிருந்து அந்த லம்பபாதத்தின் குதிகால் வரையில் ஒதுக்கம் 4 அங்குலமாகும். மத்திய ஸூத்திரத்திலிருந்து அந்த முழங்கால் வரையில் ஒதுக்கம் 14 அல்லது 12 அங்குலமாகும்.

அபஸ்மாரன் கருப்பு நிறமாகும். அபஸ்மாரன் ஸர்பத்துடன் விளையாடிக்கொண்டிப்பதாம். முறையறிந்தவன், இவ்விதமாக தர்ம வியாக்கியானமூர்த்தியை கல்பிக்கவேண்டும். (15½)

இதே மூர்த்தியானது, இடது காலை உத்குடிகாஸனமாக வைத்துக்கொண்டு முன்கை இரண்டிலும் வீணையை வைத்திருந்தால், அது, வீணாதரமூர்த்தியாகும். மற்றவைகள் முன்கூறியதுபோலவேயாம். (17)

ததை²வ வீணாஹீநம் து ஜ்ஞாநமுத்³ராப⁴யாந்விதம் |
வாமம் ப்ரஸாரிதம் ஹஸ்தம் வாமஜாநுப்ருஷ்ட²கூர்பரம் ||

த³க்ஷிணே து பரே அக்ஷமாலாம் வாமேப்³ஜநீலோத்பலம் |
ஶ்வேதோத்பலநிப⁴ம் வர்ணம் ஶேஷம் பூர்வவதா³சரேத் ||

ஜ்ஞாநமூர்த்திரிதி க்²யாதம் ஸர்வாப⁴ரணஸம்யுதம் |
அஸ்யாஸ்த்வத்ர விஶேஷஸ்து விஜ்ஞாய: ப்ரகல்பயேத் ||

ஜ்ஞாநமுத்³ரா ஹ்ருதி³ஸ்தா²நே ஸவ்யஹஸ்தபூர்வகம் கரம் |
வரத³ம் வாமஹஸ்தம் து மேட்⁴ரமூலோர்த்⁴வவிந்யஸேத் ||௨௧||

த³க்ஷிணே அப்³ஜமாலா வா மாலாப்³ஜம் வாமஹஸ்தகே |

அதே மூர்த்தியானது, பூர்வஹஸ்தங்களில் ஜ்ஞாந முத்திரையும் அபயஹஸ்தமும் கொண்டு பரஹஸ்தங்களில் வலது கையில் ஜபமாலையும் இடது கையில் தாமரை மலர் அல்லது நீலோத்பலத்தை தரித்து, வெண்மையான நிற முடையதாகி, ஸகலவிதமான ஆபரணங்களையும் அணிந்திருந்தால், அது, ஜ்ஞாநமூர்த்தியாகும், இந்த மூர்த்தியின் வரதஹஸ்தத்தின் முழங்கையானது, இடது முழங்காலின் மேலே இருக்கவேண்டும். மற்றவைகள் முன்பு கூறியிருப்பதுபோலவேயாகும். (19½)

ஹே அந்தணனே! பாததலங்களை, பிருஷ்ட பிண்டங்களுக்குக் கீழே மாறுதலாக இருக்கும்படி கல்பிக்கவேண்டும் (வலது பாததலம் இடது பிருஷ்டதலத்திற்குக்கீழும் இடது பாததலம் வலது பிஷ்டதலத்திற்குக்கீழும் இருக்கவேண்டும்) வலது பக்கம் முன்கையானது, ஜ்ஞாந முத்திரைதரித்து ஹிருதயத்தைநோக்கியிருக்கவேண்டும். வரதஹஸ்தமான இடது கையானது, மேட்ரமூலத்திற்கு மேலே வைக்கப்பட்டிருக்கவேண்டும், பரஹஸ்தங்களில் வலது பக்கத்தில் தாமரை மணிமாலையும், இடது பக்கத்தில் தாமரைப்

நாஸாக்³ரம் து வீக்ஷ்யாக்ஷாணி(க்ஷணா)ம்ருஜவம்
ஸம்ஸ்தி²திபே⁴த³கா: || ௨௨ ||

ப்ருஷ்டே² து ஜடாகும்பை³ர்ருஷிபி⁴ஸ்ஸேவிதம் ததா² |
யோக³மூர்திரிதி க்²யாதம் த்⁴யாநே து³:க²நிவ்ருத்தயே ||௨௩||

லம்ப³யேத்³த³க்ஷிணம் பாத³ம் வாமமுத்குடிகாஸநம் |
யோக³பட்டம் ததா² ப³த்³த்⁴வா தே³ஹம் சோத்குடிகாம்ஸ்ப்ருஶேத் ||

ப்ரஸார்ய வாமஹஸ்தம் து வாமஜாநூபரி ந்யஸேத் |
ப்ராக்³வச்சை க்ருதம் ஶேஷம் யோக³மூர்த்யந்தரம் ஹி தத் ||

ஊர்வோருபரி ஸவ்யாபஸவ்யதோ ந்யஸ்தம் பார்ஷ்ணிகே |
யோக³பட்டிகயா வேஷ்டம் ஜங்கா⁴த்³வயம் விஜாநத: || ௨௬ ||

பூமாலையும் (அல்லது இரண்டு கைகளிலும் தாமரை மணி மாலைகள் அல்லது தாமரைப்பூமாலைகளும்) இருக்க வேண்டும். ஸ்திதி பேதத்தினால் இந்திரியங்களை நேர்மைப் படுத்தி நாஸாக்கிரத்தை நோக்கியிருக்கவேண்டும். பின் பக்கத்தில் ஜடைகள் தொங்கிக்கொண்டிருக்கவேண்டும். மா முனிவர்களாலே ஸேவிக்கப்பட்டிருக்கவேண்டும். இத்தகைய லக்ஷணமுடைய மூர்த்தியானது, யோகமூர்த்தி எனப்படும். இந்த மூர்த்தியை தியானம் செய்தால் ஸகல துக்கங்களும் நீங்கிவிடும். (23)

வலதுகால் தொங்கவிட்டிருக்கவேண்டும். இடதுகால் உத்குடிகாஸநமாக (சாய்வாக ஊன்றப்பட்டு) இருக்க வேண்டும். அந்தக்காலும் உடம்பும் யோகப்பட்டத்தினாலே பிணைத்துக்கட்டப்பட்டிருக்கவேண்டும். இடது கையானது இடது முழங்காலின் மேலே வைக்கப்பட்டிருக்கவேண்டும். மற்றவைகள் முன்பு கூறியதுபோலவேயாகும். இத்தகைய மூர்த்தியும் மற்றொருவிதமான யோகமூர்த்தியாகும். (25)

குதிகால்கள் (புறங்கால்கள்) இரண்டும் துடைகளில் மாறுதலாக வைக்கப்பட்டிருக்கவேண்டும். (வலது குதி

பூர்வாப்யாம் பாஹுப்யாம் து ஜாநுமூர்த்நி ந்யாஸிதௌ |
ஸவ்யே தக்ஷிணே அக்ஷமாலா வாமே கமண்டலு: || ௨௭ ||

ஜடாமண்டல ஸம்யுக்தம் கரோடீ சந்த்ரசேகரம் |
நீலக்ரீவ ஸமாயுக்தம் ஸங்க குந்தேந்து ஸந்நிபம் || ௨௮ ||

ஸவ்யே பார்ச்வே ச வ்ருக்ஷம் நாநாஸர்ப்ப விபூஷிதம் |
ஹ்ருந்மாலா கண்டமாலா ச ருத்ராக்ஷைஸ்து விராஜிதம் ||

வடவ்ருக்ஷம் ஸமாச்ரித்ய ருஷிபி: ஸேவிதம் பரம் |
ஏவம் ப்ரகாரபேதேந தக்ஷிணாமூர்த்தி ரூப்யதே || ௩௰ ||

இதி காமிகாக்யே தக்ஷிணாமூர்த்தி லக்ஷணம் நாம
ஏகோநாசீதிதம: படல: ஸமாப்த: ||

கால் இடது துடையின் மேலும், இடது குதிகால் வலது துடையின் மேலும் இருக்கவேண்டும்) யோகபட்டமானது கண்டைக்காலின் நடுவில் (இடுப்பைச் சேர்த்து) கட்டப்பட்டிருக்கவேண்டும். பூர்வஹஸ்தங்கள் இரண்டும் முழங்கால்களின் மேலே வைக்கப்பட்டிருக்கவேண்டும். அபர ஹஸ்தங்களில் வலது ஹஸ்தத்தில் ஜபமாலையும் இடது ஹஸ்தத்தில் கமண்டலமுமிருக்கவேண்டும். ஜடாமண்டலம், கரோடீ (மண்டையோடு), சந்திரன் இவைகளுடனிருக்கவேண்டும். நீலகண்டனாகவும், சங்கு, முல்லை, சந்திரன் இவைகளைப்போல வெளுப்பு நிறமாகவும் இருக்கவேண்டும். பின்பக்கத்தில் நாநாவித ஸர்ப்பங்களுடன் கூடிய விருக்ஷத்தைக் கல்பிக்கவேண்டும். ஹிருதயமாலை, கண்டமாலை, ருத்திராக்ஷமாலைகளை அணிந்திருக்கவேண்டும். வடவிருக்ஷத்தின் அடியிலிருந்து முனிவர்களாலே ஸேவிக்கப்பட்டிருக்கவேண்டும்.

இவ்விதமாக தக்ஷிணாமூர்த்தியானது பலவிதமாகக் கூறப்பட்டிருக்கிறது. (30)

|| அசீதிதம: படல: ||

காலஸம்ஹாரமூர்த்திலக்ஷணம் ||

அத வக்ஷ்யே விசேஷேண காலஸம்ஹாரமூர்த்திலக்ஷணம் |
வஸ்வங்கதிக்பாகம் வா நதமானம் விதீயதே || ௧ ||

ருத்ராதித்யாங்குலம் வாபி நதமானமிஹோச்யதே |
லலாட தக்ஷிணே பார்ஸ்வே தக்ஷ(நேத்ர)மத்யே ததைவ ச ||

ஹிக்காமத்யஸ்ய வாமே து வாமஸ்தனாக்ஷதக்ஷிணே |
நாபிமத்யஸ்ய வாமே து ஸூத்ராங்குலம் யவாஷ்டகம் || ௩ ||

மேட்ரமூலஸ்ய மத்யாத்து வாமே ஷடங்குலம் பவேத் |
ஸ்திதாங்க்ரேர்குல்பமத்யே து பூர்வஸூத்ரம் ப்ரலம்ப
யேத் || ௪ ||

**காசியபீய சில்ப சாஸ்திரத்தில் தக்ஷிணாமூர்த்தி லக்ஷணமென்னும்
எழுபத்தொன்பதாவது படலம் முற்றும்**

எண்பதாவது படலம்

காலஸம்ஹார மூர்த்தி லக்ஷணம்

இனி விசேஷித்து காலஸம்ஹாரமூர்த்திலக்ஷணத்தைக் கூறுகிறேன். இந்த மூர்த்தியின் நதமானம் 8, 9 அல்லது 10 அங்குலமாகும். 11 அல்லது 12 அங்குலமிருப்பதுமாகும். நெற்றியின் வலது பக்கம், வலது நேத்திர மத்தியம், நடுக் கழுத்திற்கு இடது பக்கம், இடது ஸ்தநாக்ஷத்தின் வலது பக்கம், நாபிமத்தியத்தின் இடது பக்கத்தில் 8 யவையளவி லுள்ள இடம், மேட்ரமூல மத்தியிலிருந்து இடதுபக்கத்தில் 6 அங்குலத்திலுள்ள இடம், ஸ்திதாங்கிரியின் கணுக்கால் முண்டின் மத்தியம், இந்த இடங்களில் பூர்வ ஸூத்திரத்தைத் தொங்கவிடவேண்டும். (4)

தேவஸ்ய தக்ஷிணம் பாதம் பத்மபீடோபரிஸ்திதம் ।
ப்ராயஶ: ந்ருத்தமூர்த்தேர்வா தக்ஷிணம் ஸ்திதபாதகம் ॥ ௫ ॥

வாமபாதம் ஸமுத்தா(ஸ்தா)ப்யத்வ குஞ்சிதம் தல
முத்ஸ்ருதம் ।
அங்குஷ்டமுத்ஸ்ருதம் ஆமேர (தாம்ரேணாஸ்ய) காலஸ்ய
ஹ்ருதயே ந்யஸேத் ॥ ௬ ॥

ஸௌம்யத்ருஷ்டி: ஸ்யாத் த்ரிநேத்ரம் ச ஜடாமகுடமண்டிதம் ।
சதுர்புஜஸமாயுக்தமஷ்டஹஸ்தயுதோபி வா ॥ ௭ ॥

தக்ஷிணே பூர்வஹஸ்தே து ஶூலம் கண்டாந்தமுத்ஸ்ருதம் ।
தக்ஷிணேதரஹஸ்தே து பரஶும் வரதம் து வா ॥ ௮ ॥

வாமே பூர்வகரம் நாபிஸீமாந்தம் ஸம்யகதோமுகம் ।
கண்டாந்தம் ஶூலஹஸ்தே து மணிபந்தாந்தரம் பவேத் ॥

வாமே து பரஹஸ்தே து விஸ்மயம் பரிகல்பயேத் ।

ஸ்வாமியின் வலது பாதமானது பத்மபீடத்தின் மீது இருக்கவேண்டும். வலது கால் நடராஜமூர்த்தியைப்போல ஸ்திதபாதமாக இருக்கவேண்டும். இடது கால் தூக்கி மடித்திருக்கவேண்டும். பாததலம் உயரத்தூக்கப்பட்டிருக்க வேண்டும். அக்காலின் பெருவிரல் காலனின் ஹிருதயத்தில் வைக்கப்பட்டிருக்கவேண்டும். (6)

ஜடாமகுடமும், அழகிய பார்வையும் மூன்று கண் களும், 4 அல்லது 8 கைகளுமுடையதாகும். (7)

வலது பூர்வ ஹஸ்தத்தில் சூலமிருக்கவேண்டும். அது கழுத்தளவுக்கு உயர்த்தப்பட்டிருக்கவேண்டும். இடது பூர்வஹஸ்தமானது மழுவை ஏந்தியாவது வரதமாகவாவது இருக்கவேண்டும். அது நாபி மட்டமாகவும் அதோமுக மாகவுமிருக்கவேண்டும். சூலஹஸ்தத்தின் மணிக்கட்டானது கண்டம் வரையில் உயர்ந்திருக்கவேண்டும். இடது

हिक्कान्तं केशान्तकं वा विधेयं नासिकाग्रकम् ॥ १० ॥

अथाष्टहस्तं संवक्ष्ये तद्विधानं शृणुष्व भोः ।
शूलं च परशुं वज्रं खड्गं दक्षिणहस्तके ॥ ११ ॥

*(वरदं डमरुं) खेटं सूचीहस्तं च वामके ।
विद्रुमसदृशाकारं सर्वाभरणभूषितम् ॥ १२ ॥

द्विपादं च द्विबाहुं च (कृष्णवर्णं) सदंष्ट्रं
पाशपाणिकम् ।
करण्डमकुटोपेतं ‡देवस्याग्रे तु विन्यसेत् ॥

महाभयसमायुक्तं हृदयाञ्जलिपाशकम् ।

பரஹஸ்தத்தில் ஆச்சரிய முத்திரையைக் கல்பிக்கவேண்டும். அந்த ஹஸ்தத்தின் சுட்டுவிரலின் நுனியானது கழுத்து மட்டமாகவோ கேசாந்த மட்டமாகவோ இருக்கவேண்டும். இவ்விதமாக சதுர்புஜமூர்த்தி கூறப்பட்டிருக்கிறது. இனி அஷ்டபுஜ மூர்த்தியைக்கூறுகிறேன். கேட்பாயாக. (10½)

சூலம், மழு, வஜ்ராயுதம், கத்தி இவைகள் வலதுகைகளிலும், (வரதம், உடுக்கை) கேடயம் ஸூசீஹஸ்தம் இவைகள் இடது கைகளிலுமிருக்கவேண்டும். பவழம் போன்ற நிறமுடையதாய் ஸகல ஆபரணங்களையுமணிந்திருப்பதாகும்.

ஸ்வாமியின் முன்பக்கத்தில் இரண்டு கால்களும் (கருப்பு நிறமும்) இரண்டு கைகளும், தெத்திப்பற்களும், கைகளில் பாசமும், கரண்ட மகுடமும் தரித்த காலனைக் கல்பிக்கவேண்டும். காலன் மிகுந்த பயத்துடன் மார்பில் அஞ்ஜலிபந்தம் செய்யப்பட்ட கைகளில் பாசத்தை

---

*१२ श्लोकः सरस्वतीमहालयपुस्तकालयतः ।

‡पादःकालं तु कल्पयेत् । इति पाठे हस्तद्वित्रि
सादि ।

விகீர்ணகேஶகம் த்ருஷ்ட்வா (ஸம்வாஸித)ஶாயயேதூர்த்வ
வக்த்ரகம் || ௪௦ ||

காலஸம்ஹாரமூர்த்திஶ்சைவம் ஹி ப்ரோக்தம் லிங்கோத்பவம் ஶ்ருணு ||

இதி காஶ்யபஶில்பே காலஸம்ஹாரமூர்த்திலக்ஷணம்
நாமாஶீதிதம: படல: ஸமாப்த: ||

வைத்துக்கொண்டிருக்கவேண்டும். அவனுடைய தலைமயிர் விரிந்திருக்கவேண்டும். அவனைக் காலினாலே உதைத்துத் தள்ளியதால் அவனுடைய முகமானது மேனோக்கியிருக்க வேண்டும். இவ்விதமாகக் கால ஸம்ஹார மூர்த்தியின் லக்ஷணம் கூறப்பட்டிருக்கிறது. இனி லிங்கோத்பவ மூர்த்தி லக்ஷணத்தைக் கூறுகிறேன். கேட்ப்பாயாக.

**காச்யபீய சில்பசாஸ்திரத்தில் கால ஸம்ஹார மூர்த்தி லக்ஷணமென்னும்
எண்பதாவது படலம் முற்றும்**

|| அதைகாஶீதிதம: படல: ||

லிங்கோத்பவமூர்த்தி லக்ஷணம் ||

அத வக்ஷ்யே விஶேஷேண லிங்கோத்பவவிதிம் பரம் |
லிங்காகாரஸ்ய மத்யே து சந்த்ரஶேகரமூர்த்திவத் ||1||

நடகாந்தம் வபுரங்கம் து லிங்கே மக்நம் ஸமாதிஶேத் |
விதாதா ஹம்ஸரூபீ ஸ்யாதூர்த்வோர்த்வே வாம
வாமபார்ஶ்வகே || 2 ||

விஷ்ணுர்வராஹரூபேண தக்ஷிணாம்ஶே ஹ்யதோமுக: |
விஷ்ணோர்தக்ஷிணபார்ஶ்வே து வாமபார்ஶ்வே விதாத்ருக: ||

ஹ்ருதயாஞ்ஜலிஸம்யுக்தௌ ஸ்திதௌ தௌ லிங்கமிஷ்யதே |

எண்பத்தொன்றாவது படலம்

லிங்கோத்பவ மூர்த்தி லக்ஷணம்

இனி விசேஷித்து லிங்கோத்பவ மூர்த்தியின் லக்ஷணத்தைக் கூறுகிறேன். கேட்பாயாக. லிங்க உருவத்தின் நடுவில் சந்திரசேகர மூர்த்தியைப்போன்ற சிவ ரூபத்துடன் கூடியது லிங்கோத்பவ மூர்த்தியாகும். இந்த மூர்த்தியின் நளைகயிலிருந்து பாததலம் வரையில் லிங்கத்தில் மறைந்திருப்பதாகும். பிரம்ஹதேவர், அன்னப்பக்ஷியி னுருவங்கொண்டு, மேலேக்குடன் (லிங்கத்தின் மேல் பக்கத்தில்) இடது பக்கத்தில் கல்பிக்கப்படவேண்டும். (3)

விஷ்ணுவானவர், வராஹரூபத்துடன் அதோமுகமாக (லிங்கத்தின் அடிப்பக்கத்தில்) வலது பக்கத்தில் கல்பிக்கப் படவேண்டும்.

பிரம்ஹா, விஷ்ணு இருவரும் மார்பில் கைகளைக்கூப்பி வைத்துக்கொண்டு, லிங்கத்தின் இருபக்கங்களிலுமிருக்க வேண்டும்.

𑌰𑌕𑍍𑌤𑌶𑍍𑌯𑌾𑌮𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌾𑌭𑌾𑌃 𑌶𑌂𑌭𑍁𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌪𑌿𑌤𑌾𑌮𑌹𑌾𑌃 ॥ ௪ ॥

𑌏𑌵𑌂 𑌲𑌿𑌙𑍍𑌗𑍋𑌦𑍍𑌭𑌵𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌵𑍃𑌕𑍍𑌷𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑌣𑌂 𑌶𑍃𑌣𑍁 ॥

𑌇𑌤𑌿 𑌕𑌾𑌶𑍍𑌯𑌪𑌶𑌿𑌲𑍍𑌪𑍇 𑌲𑌿𑌙𑍍𑌗𑍋𑌦𑍍𑌭𑌵𑌲𑌕𑍍𑌷𑌣𑌂
𑌨𑌾𑌮𑍈𑌕𑌾𑌶𑍀𑌤𑌿𑌤𑌮𑌃 𑌪𑌟𑌲𑌃 𑌸𑌮𑌾𑌪𑍍𑌤𑌃 ॥

பரமேசுவரன், விஷ்ணு, பிரம்ஹா இவர்களின் நிற மானது முறையே சிகப்பு நீலம், மஞ்சள் நிறமாகும். (4)

இவ்விதமாக லிங்கோத்பவ மூர்த்தியின் லக்ஷணம் கூறப்பட்டிருக்கிறது. இனி விருக்ஷ ஸங்கிரஹணத்தைக் கூறுகிறேன். கேட்ப்பாயாக. (5)

காசியபீய சில்பசாஸ்திரத்தில் லிங்கோத்பவ லக்ஷணமென்னும்
எண்பத்தொன்றுவது படலம் முற்றும்,

|| 𑌅𑌥 𑌦𑍍𑌵𑍍𑌯𑌶𑍀𑌤𑌿𑌤𑌮𑌃 𑌪𑌟𑌲𑌃 ||

𑌵𑍃𑌕𑍍𑌷𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑌣𑌵𑌿𑌧𑌿𑌃 ||

𑌅𑌥 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑍇 𑌵𑌿𑌶𑍇𑌷𑍇𑌣 𑌵𑍃𑌕𑍍𑌷𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑌣𑌂 𑌪𑌰𑌮𑍍 ।
𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌚𑍈𑌵 𑌦𑍇𑌵𑍀𑌨𑌾𑌂 𑌶𑍂𑌲𑌾𑌯𑌾𑌰𑍍𑌹𑌂 𑌵𑍃𑌕𑍍𑌷𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ||

𑌪𑌾𑌂𑌸𑍁𑌸𑍍𑌤𑍍𑌰𑌪𑌾𑌂𑌸𑌕𑌂 𑌚𑍇𑌤𑌿 𑌵𑍃𑌕𑍍𑌷𑌹𑍇𑌤𑍁𑌂 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾 𑌹𑌿 𑌵𑍈 ।
𑌸𑌾𑌰𑌂(𑌦𑍃𑌢)𑌭𑍂𑌮𑍍𑌯𑍁𑌦𑍍𑌭𑌵𑍇 𑌵𑌾 (𑌜𑌾𑌤𑌂) 𑌋𑌜𑍁𑌕𑌂
𑌸𑌾𑌦𑍃𑌢𑌂 𑌪𑌰𑌮𑍍 || ௨ ||

𑌸𑍍𑌵𑌲𑍍𑌪𑌗𑌨𑍍𑌧𑌸𑌮𑌾𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌸𑌾𑌰𑌂 𑌸𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌂 𑌦𑍃𑌢𑌂 𑌪𑌰𑌮𑍍 ।
𑌫𑌲𑌪𑍁𑌷𑍍𑌪𑌸𑌂𑌮𑌿𑌶𑍍𑌰𑌂 𑌶𑍀𑌤𑍋𑌷𑍍𑌣𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌮𑍍 || ௩ ||

𑌯𑌤𑍍𑌤𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌮𑌨𑍋𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌂 𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌤𑌰𑍁𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ।
𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌪𑍁𑌂 𑌵𑌾 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌪𑍁𑌂𑌸𑌕𑍇 𑌵𑌾 𑌸𑌰𑍍𑌵𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌦𑌿𑌕𑍇𑌷𑍁 𑌚
(𑌦𑍃𑌢𑌮𑍍) || ௪ ||

எண்பத்திரண்டாவது படலம்.

விருக்ஷ ஸங்கிரஹணவிதி.

இனி விசேஷித்து விருக்ஷ ஸங்கிரஹணவிதியைக் கூறுகிறேன். விருக்ஷமானது, புருஷ தேவதைகளுக்கும் ஸ்திரீ தேவதைகளுக்கும் சூலதாருநிர்மாணத்திற்காகக் கூறப்பட்டிருக்கிறது. (1)

அழுத்தமும் பசையும் (களிப்பும்) உள்ள பூமியிலுண்டானது, வளைவில்லாமல் நேராக இருப்பது, அழுத்தமாக இருப்பது, கனமாக இருப்பது, ஸ்வல்பமான வாஸனையுடனிருப்பது, பழம்-புஷ்பம் இவைகள், அழுத்தமாகவும் கனமாகவும் இருப்பது, குளுமையும் உஷ்ணமும் கலந்திருப்பது, மனதிற்குக் கவர்ச்சிகரமாக இருப்பது, இத்தகைய குணங்களையுடைய விருக்ஷமானது, புருஷ விருக்ஷம் எனப்படும். இத்தகைய புருஷ விருக்ஷமானது, புருஷதேவதைகளின் சூலதாரு நிர்மாணத்திற்கு உகந்ததாகுமென்று கூறப்படுகிறது. (3½)

மூலாத்யாக்ரம் க்ரமாத் க்ஷீணம் புஷ்பம் சைவ பலம்
தலம் ।
அதிமார்தவஸம்யுக்தம் அதிஸ்நிக்தரஸம்யுதம் ॥ ௫ ॥

அதிஸ்நிக்தரஸாயுக்தம் ரஸம் சைவ ததாதிகம் ।
ஏதத் ஸ்த்ரீவ்ருக்ஷமாக்யாதம் தேவீநாம் ஶூலயோக்யகம் ॥

க்ஷீணமூலஸமாயுக்தம் பலம் புஷ்பம் தலம் ததா ।
அதிதுர்பலமாக்யாதம் யத்தத் ஷண்டமுதாஹ்ருதம் ॥ எ ॥

சந்தநம் சம்பகம் சைவ ரக்தசந்தநமேவ ச ।
ஶாகம் ச கதிரம் சைவ ஹேமஶீர்ஷம் ச குங்குமம் ॥

ஆர்ஜவம் ஶிம்ஶபம் சைவ ராஜாதந(த்ருமம்)(அஶ்வத்த)கம்।
ஶூலயோக்யம் க்ரமாத்க்யாதம் தேஷ்வந்தஸ்ஸாரஜம்
க்ருஹேத்(ஹரேத்) ॥ கூ ॥

ஜீர்ணம் வர்ணாந்தராயுதம் ஶிரஸ்ஸந்த்யம் விஶாகிகம் ।

ஸாரமுள்ள (களிப்பு) பூமி, ஸாரமற்ற பூமி இவைகளிலுண்டானது, அதிக மிருதுவாக இல்லாதது, அடிமுதல் நுனிவரையில் முறையே சிறுத்திருப்பது, புஷ்பம், பழம் இலைகள் மிகவும் மிருதுவாக இருப்பது, அதிகப்பசையுள்ளது, அதிக ருசி (சுவை)யுள்ளது இத்தகைய குணங்களுடையது, ஸ்திரீ விருக்ஷமாகும். இது ஸ்திரீ தேவதைகளின் சூலதாருவுக்கு உகந்ததாகும். (6)

அடி சிறுத்தது, பழம்-புஷ்பம்-இதழ்கள் மிகவும் துர்பலமாக இருப்பது, நபும்ஸக விருக்ஷமாகும்.

சந்தநமரம், சண்பகமரம், செஞ்சந்தநமரம், தேக்குமரம், கருங்காலிமரம், ஹேமசீர்ஷம், குங்குமம், ஆர்ஜவம், சிம்சுபம், என்ற மரங்கள், அரசமரம், மயூரவிருக்ஷம் இவைகள், சூலம் செய்வதற்குத் தகுதியுள்ளவைகளாகும். அவைகளில், உள்பக்கம் அழுத்தமாக இருப்பதை (வைரம் விழுந்திருப்பதை) கிரஹிக்கவேண்டும். (9)

ஸ்வயம் பதிதவ்ருக்ஷம் ச வாதாபஹ்ருதம் ததா ॥ ௧௨ ॥

குல்மவல்லீகஸம்ப்ருக்தம் வ்யாளபக்ஷிஸமாஶ்ரிதம் ।
ஸவல்மீகஸம்யுக்தம் ச கர்மகாராலயஸ்திதம் ॥ ௧௩ ॥

ராஜக்ருஹ்யம் ததா வ்ருக்ஷம் கர்மாகாரநிவேஶிதம் ।
வர்ஜயேத்து ப்ரயத்நேந க்ருஹீதே கர்த்ரு(த்ரு)நாஶநம் ॥

தஸ்மாத் ஸர்வப்ரயத்நேந தோஷாட்யம் பரிவர்ஜயேத் ।
ஶஸ்தபக்ஷர்க்ஷவாரேஷு ஶஸ்தவ்ருக்ஷாம்ஸ்து ஸம்க்ரஹேத் ॥

ஆசார்ய: ஶில்பி(ஶ்ரீ)கர்த்தா ச வ்ருக்ஷஸ்தாநம் து ஸம்வ்ரஜேத் ।
வ்ருக்ஷாதஸ்தாத் த்ருணாதீநி வ்யபோஹ்ய ம்ருதவத் ஸ்தலம் ॥

மடித்துப்போனது, வேறுநிறமடைந்தது, உச்சியில்லாதது (நுனிக்கிளையற்றது) கிளையில்லாதது, தானுகவே விழுந்தது, காத்தில் விழுந்தது, இடிவிழுந்தது, புதர்கள் மண்டியது, புத்துள்ளது, பாம்புகளும் பக்ஷிகளுமிருப்பது, ராஜகிருஹத்திலிருப்பது, கர்மகாரன் முதலிய தொழிலாளியின் வீட்டிலிருப்பது, தீப்பிடித்தது, வேறுகாரியங்களுக்கு உபயோகிக்கப்பட்டது, இத்தகைய விருக்ஷங்களை முயற்சியுடன் விலக்கவேண்டும். இத்தகைய விருக்ஷங்களை கிரஹித்தால் அந்தக்காரியம் அழிவடையும் (அல்லது அந்த யஜமானனுக்கு அழிவுண்டாகும்.) ஆகையால் ஸகலவிதமான முயற்சியுடனும் தோஷமுள்ள மரத்தை விலக்கிவிட வேண்டும். (12½)

சிறந்த பக்ஷம் நக்ஷத்திரம் வாரங்களில் சிலாக்கியமான விருக்ஷங்களை கிரஹிக்கவேண்டும். ஆசாரியன், சில்பி தேவாலய கர்த்தா இவர்கள், மரமிருக்குமிடத்திற்குச்செல்ல வேண்டும். மரத்திற்குக்கீழேயிருக்கும் புல் முதலியவைகளைக் களைந்துவிட்டு (கோமயத்தாலே) சுத்தம் செய்து மெழுக வேண்டும் (14)

ஸாந்நித்யம் ஸம்ப்ரார்த்ய அஷ்டதிக்ஷு பலிம் க்ஷிபேத் ।
ஸாத்யவ்ருக்ஷாச்ரிதா தேவா தானவாச்ச பிசாசகா: ॥ ௧௫ ॥

நாகா: ஸுபர்ணகந்தர்வா: ஸித்தவித்யாதராஸ்ததா ।
ஸ்வயம் பிம்பார்த்தவ்ருக்ஷாத் கம்யதாம் ஸ்வஹிதாய வை ॥ ௧௬ ॥

இத்யுக்த்வா ச பலிம் தத்யாத் தத்யன்னம் ஸர்வதிக்ஷ்வபி ।
புஷ்பசந்தனஸம்யுக்தம் கந்ததோயம் ஸமர்ப்பயேத் ॥ ௧௭ ॥

வ்ருக்ஷஸ்யைசான்யதிக்பாகே ததோ ஹோமம் ஸமாசரேத் ।
ஸ்தண்டிலம் ஸைகதம் கார்யம் ஹஸ்தமாத்ரப்ரமாணத: ॥

அக்ந்யாதானாதிகம் ஸர்வமக்நிகார்யோக்தமாசரேத் ।
ஸமிதாஜ்ய அந்நஹோமம் ஹோமம் க்ருத்வா (கார்யேத்)
சிவம் த்விஜ: ॥ ௧௯ ॥

(அதன் பிறகு) மேலே கூறப்படும் மந்திரத்தைச் சொல்லி எட்டுத்திக்குகளிலும் பலியிடவேண்டும். மந்திரம்- "இந்த மரத்தை அண்டியிருக்கின்ற தேவர்கள், தானவர்கள், பிசாசங்கள், நாகங்கள், கருடர்கள், கந்தர்வர்கள், ஸித்தர்கள், வித்தியாதரர்கள், முதலிய யாவரும், அவரவர்களின் நன்மையை உத்தேசித்து, இந்த மரத்தை விட்டு விலகவேண்டும். இந்த விருக்ஷமானது, தேவதாபிம்பம் செய்வதற்கு அவசியமானது" என்ற பொருளுள்ள மந்திரத்தை ஜபித்து, தயிர்கலந்த அந்நத்தை பலிகொடுத்து அதன்மேலே, புஷ்பம், சந்தனமிட்டு, வாசனையுடன் கூடிய ஜலத்தையும் விடவேண்டும். (17)

அதன்பிறகு, மரத்திற்கு ஈசான திக்கில், ஹோமம் செய்யவேண்டும். (ஹோமம் செய்வதற்காக) ஒரு முழம் அகல நீளத்தில் மணலினாலே ஹோமவேதிகை (திட்டாணி) செய்யவேண்டும். (18)

அக்கினி ஆதானம் முதலிய அக்கினி காரியங்கள் எல்லாவற்றையும் செய்யவேண்டும் பிறகு, ஸமித்து, அந்நம்,

𑌸𑌮𑌿𑌧𑍋 𑌹𑍃𑌦𑌯𑍇𑌨𑍈𑌵 𑌮𑍂𑌲𑍇𑌨𑌾𑌜𑍍𑌯𑌂 𑌚 𑌹𑍋𑌮𑌯𑍇𑌤𑍍 ।
𑌅𑌘𑍋𑌰𑍇𑌣𑌾𑌨𑍍𑌨𑌂 𑌹𑍁𑌤𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍇𑌕𑌾𑌷𑍍𑌟𑌶𑌤𑌾𑌹𑍁𑌤𑍀𑌃 ॥

𑌜𑌯𑌾𑌦𑍍𑌯𑍈𑌰𑌭𑍍𑌯𑌾𑌧𑌾𑌨𑍈𑌶𑍍𑌚 𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌭𑍃𑌦𑍍𑌭𑌿𑌶𑍍𑌚 𑌹𑍋𑌮𑌯𑍇𑌤𑍍 ।
𑌤𑌤𑌸𑍍𑌤𑍍𑌵𑌗𑍍𑌨𑌿𑌂 𑌸𑌮𑍁𑌦𑍍𑌵𑌾𑌸𑍍𑌯 𑌵𑍃𑌕𑍍𑌷𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌷𑍍𑌯 𑌶𑌿𑌵𑌾𑌮𑍍𑌭𑌸𑌾 ॥

𑌶𑌿𑌵𑌾𑌤𑍍𑌮𑌕𑍇𑌤𑌿 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌂 𑌤𑍁 𑌜𑌪𑍇𑌦𑍍𑌵𑍃𑌕𑍍𑌷𑌂 𑌸𑍍𑌪𑍃𑌶𑌨𑍍 𑌗𑍁𑌰𑍁𑌃 ।
𑌵𑍃𑌕𑍍𑌷𑌸𑍍𑌯 𑌪𑍂𑌰𑍍𑌵𑌭𑌾𑌗𑍇 𑌤𑍁 𑌮𑍁𑌖𑌂 𑌪𑍃𑌷𑍍𑌠𑌂 𑌤𑍁 𑌪𑌶𑍍𑌚𑌿𑌮𑍇 ॥ ௨௨ ॥

𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌸𑌵𑍍𑌯𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌵𑌾𑌮𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌂 𑌤𑌯𑍋𑌤𑍍𑌤𑌰𑍇 ।
𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑍈𑌵𑌂 𑌲𑌕𑍍𑌷𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌤𑍁 𑌤𑌸𑍍𑌯 𑌛𑍇𑌦𑌨𑌮𑌾𑌰𑌭𑍇𑌤𑍍 ॥

ஆஜ்யம், இவைகளினாலே, பரமேசுவரனை உத்தேசித்து ஹோமம் செய்யவேண்டும். (19)

ஸமித்துக்களை ஹிருதயமந்திரத்தினாலேயும், அந்நத்தை அகோரமந்திரத்தினாலேயும், ஆஜ்யத்தை மூலமந்திரத்தினாலேயும் ஹோமம் செய்யவேண்டும். ஸமித்து, அந்நம், ஆஜ்யம், இவைகளில் ஒவ்வொன்றையும் 108 ஆஹுதிகள் செய்யவேண்டும். (20)

பிறகு, ஜயாதி மந்திரங்களாலேயும், அப்யாதாந மந்திரங்களாலேயும், ராஷ்ட்ரப்ருத் மந்திரங்களாலேயும், ஹோமம் செய்யவேண்டும். அதன் பிறகு, அக்நியை உத்வாஸநம் செய்து, சிவோதகத்தை மரத்தின் மீது தெளிக்கவேண்டும். பிறகு, ஆசார்யன் மரத்தைத்தொட்டுக் கொண்டு, "சிவாத்மக" என்ற மந்திரத்தை ஜபிக்க வேண்டும். (21½)

கிழக்கு திக்கில் விருக்ஷத்தின் முகமாகும். மேற்கு திக்கில் மரத்தின் பின்பக்கமாகும். தெற்கு வலதுபக்கமாகும். வடக்கு இடதுபக்கமாகும். இவ்விதமாக, முகம் முதலியவைகளை நன்கு கவனித்துப் பார்த்துக்கொண்டு,

𑌅𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌂 𑌜𑌪𑌨𑍍𑌵𑍃𑌕𑍍𑌷𑌂 𑌛𑌿𑌨𑍍𑌦𑍍𑌯𑌾𑌤𑍍 𑌤𑍍𑌰𑌿𑌃 𑌦𑍃𑌢𑌮𑍁𑌷𑍍𑌟𑌿𑌨𑌾 ।
*𑌕𑍍𑌷𑍀𑌰𑌤𑍋𑌯𑌸𑍍𑌰𑌾𑌵𑍇 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌂 𑌰𑌕𑍍𑌤𑌸𑍍𑌰𑌾𑌵𑍇 𑌤𑍍𑌵𑌶𑍋𑌭𑌨𑌮𑍍 ॥ ௨௪ ॥

𑌅𑌸𑍍𑌰𑌸𑍍𑌰𑌾𑌵𑍇𑌣 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍇𑌣 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌹𑍋𑌮𑌂 𑌸𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍 ।
𑌵𑍃𑌕𑍍𑌷𑌮𑍂𑌲𑌪𑍍𑌰𑌦𑍇𑌶𑌂 𑌤𑍁 𑌸𑍍𑌥𑌪𑌤𑌿𑌃 𑌛𑍇𑌦𑌯𑍇𑌤𑍍 𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍 ॥

𑌪𑌤𑌿𑌤𑍇 𑌵𑌾 𑌪𑍍𑌰𑌾𑌗𑍁𑌤𑍍𑌤𑌰𑍇 𑌦𑍇𑌶𑍇 𑌵𑍃𑌕𑍍𑌷𑌸𑍍𑌯 𑌪𑌤𑌨𑌂 𑌶𑍁𑌭𑌮𑍍 ।
𑌅𑌨𑍍𑌯𑌦𑌿𑌕𑍍𑌪𑌤𑌿𑌤𑌂 𑌵𑍃𑌕𑍍𑌷𑌂 𑌵𑌰𑍍𑌜𑌯𑍇𑌤𑍍𑌤𑍁 𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑌤𑌃 ॥௨௬॥

[illegible] 𑌤𑌤𑌃 [illegible] । (?)

பிறகு, அதை வெட்டவேண்டும். முதலில் அஸ்திர மந்திரத்தை ஜபித்துக்கொண்டு மூன்று முறை மரத்தை வெட்டவேண்டும். அந்த வெட்டுவாயில் பால் அல்லது ஜலம் ஸ்ரவித்தால் (மரத்தின் ரஸமானது பால்நிற மாகவோ அல்லது ஜலத்தைப்போலவோ கசிந்து காணப் பட்டால்) அந்த மரம் சிறந்ததாகும்.

ரக்தத்தைப்போல கசிந்து காணப்பட்டால் அது கெடுதியாகும். ஆகவே, ரக்தமாக காணப்பட்டால், அதனாலே உண்டாகக்கூடிய தோஷ சாந்திக்காக, அஸ்திர மந்திரத்தினாலே சாந்தி ஹோமம் செய்யவேண்டும். (24½)

பிறகு, ஸ்தபதியானவன், முறையே விருக்ஷத்தின் அடிப்பக்கம் முழுமையும் சேதிக்கவேண்டும். (துண்டு செய்து எடுக்கவேண்டும்) (25)

வெட்டிய மரமானது கிழக்கு அல்லது வடக்கு திக்கில் விழுந்தால், அது சுப பலனைத்தரும். மற்ற திக்குகளில் விழுந்த மரத்தை முயற்சியுடன் நீக்கிவிடவேண்டும். (26)

*𑌕𑍍𑌷𑍀𑌰𑌤𑍋𑌯𑌸𑍍𑌰𑌵𑍇 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌂 𑌰𑌕𑍍𑌤𑌸𑍍𑌰𑌾𑌵𑍇𑌚𑌶𑍋𑌭𑌨𑌮𑍍 ।
𑌅𑌸𑍍𑌰𑌸𑍍𑌰𑌾𑌵𑍇𑌽𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍇𑌣 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌹𑍋𑌮𑌂 𑌸𑌮𑌾
𑌇𑌤𑌿 [illegible] । [𑌚𑌰𑍇𑌤𑍍 ॥

[illegible] ||

[illegible] |
[illegible] ||

[illegible] |
[illegible] ||உகூ||

[illegible]
(ஷிகலைத:) [illegible] |
[illegible] ||கூ0||

[illegible] |

அதன் பிறகு மரத்தின் ஸ்கந்தங்களை (பெருங்கிளைகளை) துண்டிக்கவேண்டும் (வெட்டிவிடவேண்டும்)

... ...?

பிறகு அந்த மரத்தை பசும்பாலினுலும் கந்தோதகத்தினுலும் ஸ்நானம் செய்து வைத்து, (முழுமையும் நனைத்து) சந்தநமிட்டு, புஷ்பமாலைகளினுலே அலங்காரம் செய்து, புது வஸ்திரம், தர்பைகளை வைத்து சிறிய கயிற்றினுலே அவைகள் விழாமலிருக்கும்படி கட்டி, அந்தமரத்தை, ரதம், பல்லக்கு அல்லது தோளில் தூக்கிக்கொண்டு, மெள்ள மெள்ளச் சென்று, சூலதாரு நிர்மாணம் செய்யும் மண்டபத்திற்கு எடுத்துச்செல்லவேண்டும்.

அந்த மண்டபத்தைப்பெருக்கி சுத்தம் செய்து பசுஞ்சாணத்தினுலே மெழுகவேண்டும். அரிசிமாவினுலே கோலமிட்டு, அந்த மண்டபத்தின் மத்தியில், (மணலினுலே) திட்டாணி செய்யவேண்டும். அந்த சாலையா(மண்டபமா)னது நீளத்திற்கு ஸமமான அகலமுள்ளதாக இருக்க வேண்டும். (30)

அந்த சாலையில் ஸ்தண்டிலமானது (திட்டாணியானது) விஸ்தாரத்தில் ஸரிபாதி அல்லது அதில் பாதி

ப்ராங்முகம் ஸ்தாபயேத்தஸ்மின் ஸம்யக்வ்ருக்ஷமதோமுகம் ॥

ஶுஷ்கம் ரக்ஷயேத்தாவத் மாஸம் பக்ஷமதாபி வா ।

பஶ்சாதுக்தம் து கர்தவ்யம் த்வரிதம் து ந காரயேத் ॥

இதி காஶ்யபஶில்பே வ்ருக்ஷஸங்க்ரஹணவிதிர்நாம
த்வ்யஶீதிதம: படல: ஸமாப்த: ॥

(கால் பங்கு) இருக்கவேண்டும். அதன் உயரம் 4 அங்குலமிருக்கவேண்டும். அந்த மேடையில் கொண்டுவந்திருக்கும் மரத்தை கிழக்கு நுனியாகவும், அதோமுகமாகவும் வைக்க வேண்டும். அது நன்ருக்காயும் வரையில் ஒரு மாஸம் அல்லது ஒருபக்ஷம் வரையில், அதை அங்கேயே ரக்ஷித்து வர வேண்டும். அதன் பிறகு கூறியுள்ளதைச்செய்யவேண்டும். அவஸரப்பட்டுச்செய்யக்கூடாது. (32)

காசியபிய சில்பசாஸ்திரத்தில் விருக்ஷஸங்கிரஹணவிதி என்னும்
எண்பத்திரண்டாவது படலம் முற்றும்.

|| 𑌅𑌥 𑌤𑍍𑌰𑍍𑌯𑌶𑍀𑌤𑌿𑌤𑌮𑌃 𑌪𑌟𑌲𑌃 ||

𑌶𑍂𑌲𑌦𑌾𑌰𑍁𑌨𑌿𑌰𑍍𑌮𑌾𑌣𑌵𑌿𑌧𑌿𑌃 ||

𑌅𑌥 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑍇 𑌵𑌿𑌶𑍇𑌷𑍇𑌣 𑌶𑍂𑌲𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 |
𑌶𑍁𑌦𑍍𑌧(𑌊𑌰𑍍𑌧𑍍𑌵)𑌕𑌾𑌯𑌸𑌮𑌂 𑌬𑍇𑌰(𑌶)𑌦𑌣𑍍𑌡𑍀𑌵𑌚𑍍𑌚𑍋𑌦𑌾𑌯𑌤𑌮𑍍 ||

𑌮𑌧𑍍𑌯𑍋𑌦𑌰𑌵𑌿𑌶𑌾𑌲𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌵𑍇𑌦𑌾𑌂𑌶𑍇𑌨𑍈𑌕𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑌮𑍍 |
*𑌮𑍂𑌲𑌾𑌦𑌷𑍍𑌟𑌾𑌂𑌶𑌹𑍀𑌨𑍇 𑌤𑍁 𑌤𑌸𑍍𑌯𑌾𑌗𑍍𑌰𑌸𑍍𑌯 𑌸𑌮𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ||

𑌨𑌾𑌭𑍍𑌯𑌨𑍍𑌤𑌂 𑌚𑌤𑍁𑌰𑌶𑍍𑌰𑌂 𑌤𑍁 𑌹𑌿𑌕𑍍𑌕𑌾𑌨𑍍𑌤𑌂 𑌵𑌸𑍍𑌵𑌕𑍋𑌣𑌕𑌮𑍍 |
𑌤𑌦𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌂 𑌵𑍃𑌤𑍍𑌤𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌂 †𑌶𑍇𑌷𑌂 𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 𑌤𑌥𑍈𑌵 𑌚 ||

எண்பத்திமூன்றுவது படலம்.

சூலதாரு நிர்மாண விதி.

